அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 56 | ஜனவரி 2026 | திருவள்ளுவர் ஆண்டு 2057



## இலங்கைத் தமிழர் குடியுரிமைப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தேவை

## கடிகாரம்

# படையலிட்ட அனுரவும் பூரித்துப்போன தமிழர்களும்

## 70 ஆண்டுகால போராட்டத்துக்கு சாவுமணி அடிக்கிறார்களா ஈழத் தமிழர்கள்?

## காதல்

# ஏமாளிகள் இருக்கும்வரை ஏமாற்றம் தொடரும்



முதுகிலே குத்தியவர்கள் - எங்கள்
தோள்களில் அமர்ந்து
வாக்குப் பிச்சை கேட்கிறார்கள்!

மண்ணோடு மண்ணாய் புதைத்தவர்களை
சிரசில் தூக்கிக் கொண்டாடும் கூட்டம்!
வீடிழந்து.... ஊரிழந்து
வயல் நிலமிழந்து
வாழ்வின் எல்லையில் நிற்கும்
மக்களை நினைந்தாரா?

கடவுளர்க்கே பாதுகாப்பில்லா நிலை!
புத்தர் குடியேற கோவில் தரைமட்டம்!
நாளை பறிபோகும் கோவிலில்
இன்று பொங்கல் விழா.
மறந்து போனதா தமிழன் நிலை?

வயல் நிலங்களை பறித்தபின்
வெய்யோனுக்கு விழாவா?
வெட்கம் கெட்டவர்கள்!!

கொடுத்த வாக்குகள் வாக்குறுதி மட்டுமே!
அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும்
குடை பிடிப்பதில் காலத்தை ஓட்டும்போது
காணாமற் போனோர் என்னவானார்?
அதைப்பற்றி எமக்கென்ன கவலை?

கைலாகு கொடுக்கவும் காலின்கீழ் கிடக்கவும்
ஐயாவை வாழ்த்தவும் அவர் புகழ் பாடவும்
சொல்லும் பொய்களை வேதவாக்காக பரப்பவும்
கூட்டம் கூட்டி புகைப்படம் எடுக்கவும்
அலையும் கூட்டம் இருக்கும் வரை
செம்மணிகளுக்கு பஞ்சமிருக்காது!!

நேற்று நடந்தது நாளையும் நடக்கும்!
புல்லுருவிகள் இருக்கும்வரை
பசப்புகள் தொடரும்!
ஆட்சிமாற்றத்தைத் தவிர
எதுவும் மாறவில்லை!
மாறப் போவதுமில்லை!!

கார்த்திகை

எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 56
ஜனவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| 70 ஆண்டுகால... | 06 |
| வட, கிழக்கு தமிழ்... | 09 |
| வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு... | 12 |
| கடிகாரம் (கவிதை)... | 14 |
| ஸ்ராலினுக்கு நோகாமல்... | 15 |
| காதல் (கவிதை)... | 18 |
| ஆறு ஆண்டுகளுக்கும்.... | 20 |
| இஸ்லாமியத் தமிழ்... | 23 |
| இலங்கைத் தமிழர்... | 25 |
| தை பிறந்தது (கவிதை)... | 26 |
| அமெரிக்க- இந்திய.... | 27 |
| ஈரானில் ஆட்சி மாற்றம்?... | 30 |
| விடை தெரியாத (சிறுகதை)... | 33 |
| ஏகாதிபத்திய.... | 36 |
| அமெரிக்க அதிபரின்... | 37 |
| அடம்பன் கொடியும் (கவிதை)... | 40 |
| வலை... (நெடுங்கதை) | 42 |
| டிரம்பின் அதீத ஆசைகள்... | 45 |
| ஆர்ப்பாட்டப் பேரணி (சிறுகதை)... | 48 |
| ‘சல்லியர்கள்’ திரைப்பட... | 53 |
| மலையக மக்களுக்கு.. | 56 |
| பயனுள்ள தகவல்கள்... | 58 |




## திருக்குறள்

**குறள் 380:**

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.”

**விளக்க உரை:**

இயற்கை நிலையை மாற்றி மற்றொரு செயற்கை நிலையை அமைத்திட முனைந்தாலும், இயற்கை நிலையே முதன்மையாக வந்து நிற்பதால் அதைவிட வலிமையானவையாக வேறு எவை இருக்கின்றன?.



# அகவை 5 இல்

எழுநிலம்

## அக்கறை உறவுகள்

தமிழர் பகுதிகளில் தொடர்ந்தும் விகாரைகள் முளைத்த வண்ணம் இருக்கின்றன. பிக்குகள் அளவற்ற அதிகாரத்துடன் தலைகால் புரியாமல் ஆடுகிறார்கள். நம்பிக்கையளித்து பேசும் புதிய சிங்களத் தலைவர் அநுர தையிட்டி விகாரை விவகாரத்தில் ஒரு துரும்பையும் அசைக்கவில்லை. பதிலுக்கு. விகாரையை அப்புறப்படுத்தி அடாத்தாக பிடிக்கப்பட்ட காணியை மீட்டெடுக்க போராடும் மக்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள். இவற்றிற்கு ஒரு முடிவே இல்லையா?

**-ஆதித்தன் குகதாசன்,**
**ஒக்ஸ்ஃபோட், இங்கிலாந்து**

எழுநிலம் மணம் 55 இன் அட்டைப்படம் உண்மையிலேயே கவலை தருவதாக இருந்திருக்க வேண்டும். எத்தனை மக்கள் உயிர்களை, உடைமைகளை இழந்தார்கள்? எத்தனை மக்களின் தவிப்பு? ஆனாலும் ஒரு தமிழினத் துரோகியை கைவிலங்குடன் அட்டைப்படத்தில் பார்த்ததும் மகிழ்ச்சியாகி விட்டது எனக்கு. கொஞ்ச நாட்களுக்காயினும் அவனுக்கு சிறைப் பயத்தைக் காட்டிய அநுரவுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும். இதழ் மிகவும் அருமையாக வந்திருக்கிறது. மாதம் இருமுறை வெளியிட்டால் என்ன?

**-ஜொய்சி மானல் ஜெபமோகன்,**
**மிலன், இத்தாலி.**

மாலினி எழுதிய மனிதம் காப்போம் கவிதை கண்ணீரை வரவழைத்தது. எம்மவர்கள் என்ன பாடு படுகிறார்கள்? இலங்கை டித்வாவுக்கு மட்டுமல்ல எதற்குமே தயாராக இல்லை என்பதுதான் உண்மை. ஊரெல்லாம் தேடி கடன் வாங்குவது, அதை தமிழர்களை சிதைக்கும் கைங்காரியங்களில் கொட்டுவது. எஞ்சியிருக்கும் பணத்தை ஆட்டையைப் போடுவது. இப்படியிருக்கும் எந்த நாடு உருப்படும்? என்னுடைய ஆதரவு ஈழத் தமிழர்களுக்குத்தான்.

**-கோவிந்தன் பழனி**
**குமாரபாளையம், தமிழ்நாடு**

முற்கூட்டியே புத்தாண்டை வரவேற்று விட்டீர்கள் வாழ்த்துகள். ஆசிரியர் பக்கம் சூப்பரோ சூப்பர். அதற்கு நீங்கள் கொடுத்திருக்கும் தலையங்கம் வேற லெவல். புதுவை இரத்தினதுரை ஐயாவையும் கௌரவப்படுத்தி விட்டீர்கள். அவர்தானே அந்தக் கயவனை அத்தியடிக் குத்தியன் என்பார்? நினைவேந்தல் அரசியல் என்ற கட்டுரை பூசி மெழுகாமல் உள்ளதைச் சொல்கிறது. எவ்வளவு காலம்தான் இப்படி விழாக்களை மட்டும் நடத்திக்கொண்டு விடுதலை வீடு தேடிவரும் என்று கனவு காண்பது? அதற்கான முதற்படியிலாவது காலெடுத்து வைக்கவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்.

**-தேவசுதா அகிலன்,**
**பேத், ஸ்கொட்லான்ட்**

ஐங்கரன் உலகின் அடக்கப்பட்ட மக்களுக்காக எங்கள் கண்களைத் திறந்து விடுகிறார். ஈழவன் அனுராஜின் கவிதைகள் உள்ளார்ந்த உணர்வுகளுடன் வருவது சிறப்பு. உறவைத்தேடி கதை ஒரு நல்ல திருப்பம். இப்படி பலபேர் வாழ்க்கைத் தியாகங்கள் வெளிவராமலேயே போய்விடுகிறது. பவானியின் கதை உயிரை உருக்கியது. காவியன் கதை நல்லதொரு விடயத்தை உணர்த்தியிருக்கிறது. துணுக்கு கவிதைகள், கவிதை அரும்புகள், குட்டிக் கவிதைகள், புத்தாண்டு கவிதைகள் என்று எல்லாமே சிறப்பு. வாழ்த்துகள்.

**-பூரணி விவேகானந்தன்.**
**ரொறன்ரோ, கனடா.**

ஒரே கதம்பமான பத்திரிகை. மாவீரர்களை நினைவுகூர்ந்து அழுத கண்ணீர் ஓய்வதற்குள் டித்வா புயல் பேரழிவுகள். இடையில் ஒரு துரோகியின் கைது தரும் சந்தோஷம். இதற்கிடையில் வரும் புத்தாண்டை வரவேற்கும் கோலாகலம். அப்பப்பா.. ஒரே உணர்ச்சிக் கலவையாக வந்திருக்கிறது. கதைகள் எல்லாமே ஒரு படிப்பினையைச் சொல்வதாக அமைந்திருக்கின்றன. கானல்நீர் கதை யைத் தவிர்த்து. அது பலநூறு பெண்கள் எல்லாவற்றையும் சகித்து இப்படித்தான் வாழ்கிறார்கள் என்ற யதார்த்தத்தை சொல்லியிருக்கிறது. இங்கு புனர்வாழ்வின் பின்னான பெண்போராளிகளின் நிஜ வாழ்வு இதைவிடவும் மோசமான கண்ணீர்க் கதையாக இருக்கிறது என்பதுதான் உண்மை. இதற்கு முன்னுரிமை கொடுத்து இந்தப் பெண்களுக்கு ஒரு வழி பண்ணுவீர்களா? வலை கதை அடுத்த மாதம் என்ன வரும் என்ற எதிர்பார்ப்பைத் தூண்டுகிறது.

**-சுதந்திரா,**
**தாயகம்.**

பத்திரிகை சிறப்பாக வந்திருக்கிறது.கதைகள், கவிதைகள் நிறையப் புகுத்தியிருக்கிறீர்கள். அதற்காக கட்டு ரைகளை ஒரேயடியாக குறைத்து விடாதீர்கள். தேவையற்ற கட்டுரைகளைத் தவிருங்கள் என்பதுதானே பலருடைய வேண்டுகோள்? தேவையானவற்றை தவிர்த்து விடவேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள். எங்கள் பாதையை சரியாக வடிவமைக்க எதிரி யின் நகர்வுகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். இல்லையா?

**-சிவபாலன் மகேந்திரன்**
**பிராங்பேட், ஜேர்மனி.**

மாவீரர்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து ஒரு சிறப்பிதழை வெளியிட்ட உங்களுக்கு நன்றி. பத்திரிகை வார்த்தைகளில் விபரிக்க முடியாத உணர்வினைத் தந்தது. கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அத்தனையும் தேர்ந்தெடுத்தவையாக இருந்தன. கட்டுரைகளில் ஐங்கரனின் ஆக்கங்கள் எனக்கு பிடித்திருக்கின்றன.

**யோகநாதன் செல்லத்துரை,**
**வேளச்சேரி, சென்னை.**




எழுநிலம் சஞ்சிகையின் கடந்த
மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின்
இணையத்தளத்தில்
இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

ஆசிரியர் பக்கம்

# படையலிட்ட அனுரவும் பூரித்துப்போன தமிழர்களும்

அடிக்கடி வடக்கிற்கு ஓடோடி வருவதில் சனாதிபதி அனுரகுமார காட்டும் ஆர்வம் மக்கள் சிலர் மத்தியில் சந்தேகத்தைக் கிளப்பியுள்ள நிலையில், மறுபடியும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. யாழ் தமிழ் மக்களுடன் பொங்கலைக் கொண்டாடும் பேருவகையுடன் பறந்துவந்த அனுரவிற்கு தமிழர் பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஐயனார் கோவிலில் நடந்த விழாவில் பொங்கல் பானை யில் அரிசி போட்டு விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறார் அவர். இன்னுமொரு இடத்தில் உரையாற்றும்போது, தமிழர்களின் விழாவான தைத் திருநாளை இந்துக்களின் விழா என்றிருக்கிறார்.

வருவதற்கு முன் அவர் வீட்டுப் பாடத்தை சரியாக செய்யவில்லையா அல்லது வரலாற்றையே மாற்றும் எண்ணமா என்று சிலர் குழம்பிப் போயிருக்க, அவர் என்ன சொன்னாலும் கைதட்டி ஆர்ப்பரிக்கும் கூட்டம் பூரித்துப் போயிருக்கிறது. 'எங்களுடன் பொங்கல் கொண்டாடி தமிழர்களின் பெருமையை உலகிற்கே எடுத்துக் காட்டிவிட்டார்' என்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார்கள்.

அதிலும் ஒருபடி மேலேபோய், 'அவரின் காலடி பட்டதானது அங்கு வாழும் மக்களின் துன்பங்கள் விரைவில் நீங்கிவிடும் என்பதன் அறிகுறி' என்று வெட்கமேயில்லாமல் காலைப் பிடித்துத் தொங்கியிருக்கிறார் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர். அவரை என்ன செய்தால் தகும்? ஏன் அனுரவை தன்னுடைய மாவட்டத்திற்கு அழைத்துப் போய் தங்கள் வாழ்வை மேம்படுத்தாது விட்டுவிட்டார் அவர் என்பதுதான் புரியவில்லை.

அனுர கையசைத்தார், செல்பி எடுத்தார், நடைப்பயிற்சி செய்தார் என்று அலைகிறது இன்னுமொரு கூட்டம். தமிழர்களின் வாக்கு வங்கியை வசப்படுத்த நாடகமாடும் ஒரு சிங்களத் தலைமையின் நகைமுரண் செயற்பாடுகளை தட்டிக் கேட்க தமிழ்த் தலைமைகளோ, மக்களோ மறந்தது ஏன்?

தமிழ்ப் பிரதேசம் எங்கும் தொடரும் சிங்களக் குடியே ற்றங்களை ஆதரிக்கும், புதிய சிங்களக் குடியேற்றங்கள் உருவாகுவதற்கு அனுமதி வழங்கும் இன்னுமொரு சிங்களத் தலைமை இது. 'இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்' என்ற அனுர இதுவரையில் எந்த அத்துமீறிய குடியேற்றத்தை நிறுத்தினார்?

அண்மைக்காலமாக, வவுனியா தமிழ்மக்களின் வாழ்வுக்கு மீண்டும் பிரச்சனையாக வெடித்துள்ள கிவுல்ஓயா குடியேற்றத்தைப் பாருங்கள். இந்த அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்திற்கென இதுவரை 42 தமிழ்க் கிராமங்கள் விழுங்கப்பட்டிருக்கின்றன. 13,000 குடும்பங்கள் இரவோ டிரவாக அடித்து விரட்டப்பட்டிருக்கிறார்கள். தலைமுறை தலை முறைகளாக வாழ்ந்த சொந்த நிலத்தில் தமிழ் மக்களால் மீளக் குடியேற முடியவில்லை.

வேலிக்கு தடி வெட்டினாலும் சிறையில் அடைக்கும் வனவளத்துறையின் பூரண அனுமதியோடு 1000 ஏக்கருக்கும் மேற்பட்ட அடர்காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. போக்கிடமில்லாது, யானைகள் தமிழர் குடியிருப்புகளில் புகுந்து அட்டகாசம் செய்கின்றன.

முக்கியமாக, சிங்களக் குடியேற்றத்தை பெருப்பிக்கும் நோக்கில் தமிழர்களுக்குச் சொந்தமான 13,000 ஏக்கர் வயல் நிலம் மேலதிகமாக கையகப்படுத்தப் பட்டிருக்கிறது. அவர்கள் நிர்க்கதியாக நிற்கிறார்கள்.

அங்கு தமிழர்களின் விளைநிலங்கள் பறிப்பு. இங்கு அறுவ டையின் பின்னர் கதிரவனுக்கு நன்றி சொல்லும் விழாவில் பிரதம அதிதி. இந்த இரட்டை வேடதாரிக்கு தடபுடலான வரவேற்பு.

இலங்கை சுதந்திரமடைந்ததின் பின்வந்த அத்தனை சிங்களத் தலைமைகளும் தங்களுக்குள் எத்தனை முரண்பாடுகள் இருந்தாலும் தமிழர்களை அழிப்பது, தமி ழர் தாயகத்தை இல்லாற் செய்வது, தமிழர் குடிப்பரம்பலைச் சிதைப்பது போன்ற விடயங்களில் ஓரணியில்தான் இருந்திருக்கிறார்கள். எந்த சிங்களத் தலைமை வந்தாலும் தமிழர்களை இல்லாதொழிப்பதற்கான நீண்டகாலத் திட்டத்தை அவர்கள் செயற்படுத்தியே வந்துள்ளனர்.

திட்டமிட்ட இன அழிப்பின் சாணக்கியத்தனத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள கடந்த 77 ஆண்டுகள் போதாதா? மறுபடியும் ஒரு இனவாதத் தலைமையை நம்பி வாக்குகளை அள்ளிக் கொடுத்துவிட்டு எஞ்சி இருக்கும் இடத்தையும் இழக்கும் நிலைமையை நாம் உருவாக்கி விடக்கூடாது. அது மட்டுமல்ல. மோசமான தமிழ்த் தலைமைகளைத் தூக்கியெறிந்து ஒரு வலுவான தமிழ்த்தலைமையை உருவாக்க வேண்டியதும் அவசியம். இனிவரும் காலங்களிலாவது விழிப்புடனிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.



ராஜ்

# 70 ஆண்டுகால போராட்டத்துக்கு சாவுமணி அடிக்கிறார்களா ஈழத் தமிழர்கள்?



**ஈழத்தமிழ்** மக்கள் 70 ஆண்டுகளுக்கு மேலாக எதற்காக போராடினார்கள்? எதனை அடைவதற்காக இலட்சக்கணக்கான உயிர்களை மண்ணுக்கு தியாகம் செய்தார்கள்? என்ற அந்த ஒப்பற்ற வரலாறு இன்று திசை திரும்புகிறதோ என்ற ஒரு அச்சம் தமிழ்த் தேசியத்தையும் தமிழர் மண்ணையும் நேசிப்போரிடம் எழத் தொடங்கியிருக்கிறது.

ஜே.வி.பி. / தேசிய மக்கள் சக்தி ஆட்சி மலர்ந்து ஒரு வருடங்களும் சில மாதங்களும் நிறைவடைந்து இருக்கின்றன. இந்த ஆட்சிக்கு தமிழ் மக்களுடைய ஆதரவும் இருந்தது என்பதற்கு அப்பால், அனுரகுமார திஸாநாயக்க வடக்குக்கு விஜயம் செய்யும் ஒவ்வொரு தடவையும் தென்னிலங்கையின் வரவேற்பு போன்று அவருக்கு வடக்கிலும் வரவேற்பு இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும்.

அதைவிட, புதிய ஆட்சியாளர்கள், தமிழ் மக்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்பதைப் போன்று வடக்கில் பிரசாரம் செய்வது பெரும் கொடுமையாகும். இந்த நிலைமை தொடருமானால் 70 ஆண்டுகால போராட்டத்தின் தியாகங்கள் - அர்ப்பணிப்புகள் - இழப்புகள் அனைத்தும் சிங்கள பேரினவாதிகளின் கோர முகங்களுக்குள் மூழ்கடிக்கப்பட்டு விடும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது.

அனுர வடக்குக்கு பயணம் செய்தால் இலங்கையின் வேறு எங்கு சென்றாலும் இல்லாத அளவுக்கு அவருடைய பிம்பம் பிரபல்யம் ஆக்கப்படுகிறது. அவர் அங்கு சென்று ஒருவரின் தோளின்மீது கை போட்டாலும் அது பெரும் பேசுபொருள் ஆக்கப்படுகிறது.

அதேபோல், அவரது வடக்கிற்கான அனைத்து நிகழ்ச்சி நிரல்களும் தமிழ் மக்களை கவர்ந்தவை போன்றும் அவர் தமிழ் மக்களின் தலைவர் போன்றும் ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த பிம்ப அரசியல் தமிழர் தாயகத்தில் எத்தகைய அபாயத்தை உருவாக்கப் போகிறது என்பது தொடர்பில் தமிழ் தலைவர்களோ, தமிழ்த் தேசியத்தின் பால் நின்று

**தமிழினத்துக்கு இன்று தேவை தேர்தல் அரசியல் செய்பவர்கள் அல்ல. இன விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் சமூகத்தின் கனவை நிறைவேற்றித் தரும் போராளிகளே. நாளுக்குநாள் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. அதேபோல், மக்களின் மனங்களை மாற்றி அவர்களை தங்கள் பக்கம் இழுக்கும் வேலைகளும் தடல்புடலாக இடம்பெற்று வருகின்றன.**

பயணிப்பவர்களோ இன்னும் சிந்திக்கவில்லை என்பது பெரும் கவலைக்குரியது.

தேர்தல் காலத்தில் தமிழ் மக்களிடத்தில் பிரச்சினைகள் (ஒருசிலவாவது) இருப்பதாக ஒத்துக்கொண்ட அனுர அணி இன்று அப்படி எதுவும் இல்லை போன்று நடந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

காணாமல் போனோர் என்ற ஒரு விடயம் தமிழர் தாயகத்தில் இருந்ததாகவோ, அல்லது அரசியல் கைதிகள் பலர் சிறைகளில் இருக்கிறார்கள் என்பது பற்றியோ எந்தப் பேச்சும் இல்லை. பல ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து இன்றும் தங்களது சொந்த நிலங்களுக்கு திரும்ப முடியாமல் தவிக்கிறார்கள் என்பது பற்றியோ அல்லது பல ஆயிரம் ஏக்கர் நிலம் இன்னும் இராணுவத்திடம் இருக்கிறது என்பது பற்றியோ வாய் திறக்கவில்லை.

ஒரே நாடு - ஒரே மக்கள் என்ற தங்களது தாரக மந்திரத்தை தமிழர் தாயகத்திலும் பிரசாரப்படுத்தும் கைங்கரியத்தையே அனுர தரப்பு மேற்கொண்டு வருகிறது. அதற்கு அனுரவின் தமிழ் அடிவருடிகளும் ஒத்தூதி வரும் அதேவேளை, தமிழ்த் தேசியவாதிகள் என்று கூறிக் கொள்வோர் தங்களது தேர்தல் அரசியலுக்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும், கடந்தகால ஜனாதிபதிகள் யாழுக்கு செல்லும் நேரங்களில் வீதிகளில் நின்று போராடிய காணாமல் போனோரின் உறவுகளையும் தற்பொழுது காண முடியவில்லை. இந்த நிலைமைகள் தமிழர் தாயகத்தில் புதியதாக இருக்கும் அதேவேளை, தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அனுர அரசு ஆட்சிக்கு வந்து 16 மாதங்கள் கடந்தும் தமிழ் மக்கள் விடயத்தில் எந்த விவகாரத்திலும் ஒரு அடிகூட முன்னேற்றம் ஏற்படவில்லை. முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதைவிட, ஒரு அடிகூட எடுத்து வைக்கப்படவில்லை.

முன்னைய அரசுகள் கூட ஏதோவொரு சாட்டுக்காவது ஒருசில அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தார்கள். ஒருசில காணிகளை மக்களிடம் ஒப்படைந்திருந்தார்கள். ஆனால் இந்த அரசு அப்படியெல்லாம் தமிழ் மக்களிடம் பிரச்சினை இருப்பதாக காட்டிக்



கொள்ளவே பின்னிற்கிறார்கள். ஆனால் இந்த ஆபத்தான சூழ்நிலைகளை ஒன்றுகூடி ஆராயும் ஒரு அறிவார்ந்த - தைரியமான சமூகம் தமிழர் தாயகத்தில் இருப்பதாக தெரியவில்லை. எது நடந்தாலும் நடக்கட்டும் நாம் எங்களுடைய வேலையைப் பார்ப்போம் என்ற மனநிலை கொண்டவர்களே இன்று தமிழ் மக்கள் மத்தியில் தலைவர்களாகவும் புத்திஜீவிகளாகவும் செயற்பாட்டாளர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆகக் குறைந்தது தையிட்டி விகாரைக்கு எதிராக அண்மையில் போராடியவர்கள் கூட ஜனாதிபதியின் யாழ் விஜயத்தின் பொது ஒரு அடையாளத்துக்காகவாவது போராடவில்லை. இது தான் இன்றைய ஈழ தேசத்தின் அரசியல் போராட்டத்தின் நிலைமை.

தமிழினத்துக்கு இன்று தேவை தேர்தல் அரசியல் செய்பவர்கள் அல்ல. இன விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் சமூகத்தின் கனவை நிறைவேற்றித் தரும் போராளிகளே. நாளுக்குநாள் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. அதேபோல், மக்களின் மனங்களை மாற்றி அவர்களை தங்கள் பக்கம் இழுக்கும் வேலைகளும் தடல்புடலாக இடம்பெற்று வருகின்றன.

நீண்டகாலமாக மண்ணுக்காகவும் உரிமைக்காகவும் போராடிய ஒரு இனம் இவ்வாறு இருக்க முடியாது. அப்படி ஒரு இனம் மாறுமானால் அந்த இனம் இந்த பூமிப்பந்தில் வாழ்வதற்கு தகுதியில்லாத ஒரு இனமாகவே அடையாளப் படுத்தப்படும்.

செல்வத்தாலும் வீரத்தாலும் அறிவாலும் உயர்ந்திருந்த ஒரு இனம் அவை அனைத்தும் அழிவதற்கு காரணமான தரப்புகளுக்கு கூஜா தூக்கும் ஒரு சமூகமாக மாறுவது அந்த இனத்தின் பெரும் சாபக்கேடாகும்.

ஜே.வி.பி.அரசாங்கம் தமிழர்களுக்கு நெருக்கமான ஒரு அரசாங்கம் இல்லை. பேரினவாதத்தின் அதியுச்ச இயக்கம் தான் இன்றைய ஆட்சியாளர்கள். தமிழர்களுக்கு எதிராக இந்த இயக்கம் செய்தவை பல. இன்று அவர்கள் நல்லவர்கள் வேஷம் போட்டு தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள்.

மிக விரைவில் மாகாண சபை தேர்தல் நடைபெறும் என்ற பேச்சுக்களும் சிறிலங்காவின் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், மேலும் மேலும் தமிழர்களின் மனங்களை வென்று தமிழர் தாயக



மாகாண சபைகளையும் கைப்பற்றும் நிகழ்ச்சி நிரல்கள் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்கள் தங்களது நிலம், உரிமை, சுதந்திரம் போன்றவற்றை மனதில் நிறுத்தி தங்களது முடிவுகளை எடுப்பது காலத்தின் தேவையாகும்.

1948 இல் பிரித்தானியர் இந்த நாட்டை விட்டு அகன்ற பின்னர், தமிழர் தாயக பகுதியில் தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றிமைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

கல்லோயா திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டமிட்ட செயற்பாடுகள் இன்று தையிட்டி திஸ்ச விகாரை வரையில் நீட்சி பெற்றதாகவே காணப்படுகிறது. மிக அண்மைக் காலமாக வடக்கு கிழக்கு பகுதிகளில் மரபுரிமை சார்ந்த சவால்களாக மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம், கன்னியா வெந்நீர் ஊற்று, வவுனியா வெடுக்கு நாறி மட விவாகரம், முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் , தையிட்டி திஸ்ஸ விகாரை என விடயங்கள் முடிவுக்கு வராமல் மூடி மறைக்கப்படும் நிலையே காணப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வன வள திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை சபை போன்ற நிறுவனங்களூடாக தமிழர்களுடைய இனப்பரம்பலையும் இன அடையாளங்களையும் அழிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவற்றுக்கு எதிராக தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு ஒரு எதிர்ப்பை கூட காட்டமுடியாத நிலையில் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். மாறாக, இந்த அநியாயங்களை அரங்கேற்றி வரும் ஒரு அரச தலைவருக்கு இத்தனை மரியாதை கொடுப்பது தமிழ் இனத்தின் இன்றைய இயலாமையை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

நீண்டகால போராட்ட வரலாற்றை கொண்ட ஒரு இனம் அந்தப் போராட்டப் பாதையிலிருந்து ஒரு சிறுதுளி கூட விலகாமல் இருந்தால் மாத்திரமே அந்த போராட்டத்துக்கான நீதி என்றோ ஒரு நாள் கிடைக்கும்.

ஆனால், இத்தனை உயிர்களைத் தியாகம் பண்ணிய ஒரு இனத்தின் போராட்ட வடிவம் மிக குறுகிய காலத்துக்குள் தடம் புரள்வது ஈழத் தமிழினத்தில் மாத்திரமே. அப்படியென்றால் 70 ஆண்டு போராட்டம் எதற்கு? அந்த போராட்டத்தில் மரணித்த உயிர்களின் தியாகங்கள் தேவையற்றவையா? என்பதை ஒவ்வொரு ஈழத்தமிழனும் மனதிலிருந்து சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

அதைவிட, தமிழ் தரப்புகள் என்று கூறிக் கொள்வோர் இவற்றுக்கு எதிராக தமிழர் தாயகத்தை ஒன்று திரட்ட முடியாத கையறு நிலையில் இருப்பது தமிழர்களின் சாபக்கேடாகும். தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட்டு இவற்றுக்கு எதிராக திரண்டெழும் வரையில் பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல் மேலும் மேலும் வீச்சு பெற்று தமிழ ரின் தாயகத்துக்கான ஆபத்தை நெருங்கிவிடும் என்பதை கூறி வைக்கின்றோம்.

முதலில் தமிழ் மக்கள் தெளிவடைய வேண்டும். இந்த 70 ஆண்டு போராட்டத்தில் அனைத்தையும் இழந்தவர்கள் தமிழ் மக்களே. ஆகவே அவர் களுடைய செயற்பாடுகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஏனோ தானோ என்று செயற்பட முடியாது. ஆகவே தமிழ் மக்கள் தான் தமக்கான தெளிவான பாதையை தெரிவு செய்ய வேண்டும்.

எம்மை யார் ஆட்சி செய்ய வேண்டும்? எமக்கான விடுதலையை யார் பெற்றுக் கொடுப்பார்கள்? என்பதில் மக்கள் தெளிவடைய வேண்டும். மாவீரர் நாளுக்கு ஒன்றிணைவது போல், நினைவேந்தல்களுக்கு ஒன்றிணைவது போல் ஈழத் தமிழர்களுடைய விடுதலைக்கும் தமிழருக்கு எதிராக நிகழும் சம்பவங்களுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் ஒன்றிணைவது அவசியம். அது காலத்தின் கடமை.



**செல்வத்தாலும் வீரத்தாலும் அறிவாலும் உயர்ந்திருந்த ஒரு இனம் அவை அனைத்தும் அழிவதற்கு காரணமான தரப்புகளுக்கு கூஜா தூக்கும் ஒரு சமூகமாக மாறுவது அந்த இனத்தின் பெரும் சாபக்கேடாகும். ஜே.வி.பி. அரசாங்கம் தமிழர்களுக்கு நெருக்கமான ஒரு அரசாங்கம் இல்லை. பேரினவாதத்தின் அதியுச்ச இயக்கம் தான் இன்றைய ஆட்சியாளர்கள். தமிழர்களுக்கு எதிராக இந்த இயக்கம் செய்தவை பல. இன்று அவர்கள் நல்லவர்கள் வேஷம் போட்டு தமிழ் மக்களுடைய வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள்.**



அசோக்

# வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தியாவும்

**வழமை** போன்றே வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த வாரமும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை சந்திப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தின் போது, மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துவதுடன் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தன.

கடந்த மாதம் டித்வா சூறாவளியின் விளைவான பேரழிவில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கான இந்தியாவின் உதவித் திட்டத்தை அறிவிப்பதற்காக ஜெய்சங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக கொழும்புக்கு ஒரு நாள் விஜயமாக கடந்த செவ்வாய்கிழமை வந்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் இந்தியா இல்லத்தில் ஜெய்சங்கரை கூட்டாகச் சந்தித்துப் பேசினர். அவ ரிடம் கூறவேண்டிய விடயங்கள் குறித்து இந்தத் தலைவர்கள் முன்கூட்டியே தங்களுக்குள் வேறு ஒரு இடத்தில் கலந்தாலோசனை நடத்தியது



இந்தத் தடவை வித்தியாசமான ஒரு அணுகுமுறையாக அமைந்திருந்தது. தங்களுக்குள் முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேசும்போது தங்களுக்குள் ஒரு குறைந்தபட்ச புரிந்துணர்வாவது இருப்பது அவசியம் என்று இப்போது தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கத் தொடங்கி இருக்கின்றார்கள் போலும்.

இயற்கை அனர்த்தத்தினால் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகள் குறித்தும் இந்திய வெளியுறவு அமைச்சருடன் இந்தத் தலைவர்கள் பேசினார்கள். மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கு இந்தியா இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே அவர்கள்



பிரதானமாக முன்வைத்தனர். அத்துடன், பிரதமர் மோடிக்கான கடிதம் ஒன்றையும் அவரிடம் இவர்கள் கையளித்தனர்.

மாகாண சபைகளை பற்றி வழமையாக அக்கறை காட்டாமல் இருந்துவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று ஏனைய தலைவர்களுடன் சேர்ந்து ஜெய்சங்கரிடம் கூறியிருக்கிறார். தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்புக்களை இடைநடுவில் நிறுத்திவிட்டு ஜெய்சங்கருடனான சந்திப்புக்காக அவர் அவசரமாக கொழும்பு திரும்பினார்.

மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியத்தை மற்றைய தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சருக்கு கூறிய அதேவேளை கஜேந்திரகுமார் இலங்கையில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கலை உருப்படியாகச் செய்வது சாத்தியமில்லை என்றார். அதனால் கூட்டாட்சி (Federal system) அடிப்படையிலான ஏற்பாடு மாத்திரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்றும் சுட்டிக்காட்டியதன் மூலமாக தன்னை மற்றையவர்களிடம் இருந்து வேறுபடுத்துவதில் அக்கறை காட்டினார்.

ஆனால், தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உடனடியாகவே தாங்களும் இனப்பிரச்சினைக்கு நிலைபேறான அரசியல் தீர்வாக கூட்டாட்சி முறையே இருக்க முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் தங்களைப் பொறுத்தவரை கூட்டாட்சி என்ற அடையாளப் பெயரில் அல்ல, அதிகாரங்களின் உள்ளடக்கத்திலேயே அக்கறை கொண்டிருப்பதாகவும் கூறினார்.

ஜெய்சங்கருடனான சந்திப்புக்குப் பிறகு கஜேந்திரகுமார் நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் மற்றைய தமிழ்க்கட்சிகளுக்கும் தனது கட்சிக்கும் இடையிலான கொள்கை வேறுபாட்டை விளக்கும் நோக்கில் அமைந்திருந்தன.

தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் மாகாண சபை தேர்தல்களிலும் 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலிலும் அக்கறை செலுத்திய அதேவேளை கூட்டாட்சி முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பை இலங்கை அரசாங்கம் கொண்டு வருவதற்கு இந்தியா ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதை ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுறுத்துவதில் மாத்திரமே கவனம் செலுத்தியதாகக் கூறினார்.

பிரதமர் மோடிக்கான கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் அது என்றைக்குமே தெரிய வராமலும் போகலாம் என்றும் கூட கஜேந்திரகுமார் செய்தியாளர்களிடம் கூறினார். அந்தக் கடிதத்தில் மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கியிருக்கிறதே தவிர, கூட்டாட்சிமுறை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.

மாகாண சபை தேர்தல் தொடர்பிலான தமிழ்க் கட்சிகளின் வலியுறுத்தலோ அல்லது கூட்டாட்சி முறை பற்றிய நிலைப்பாடோ ஜெய்சங்கருக்கு புதியவை அல்ல. வெளியுறவு அமைச்சராக மாத்திரமல்ல, அதற்கு முன்னர் வெளியுறவு செயலாளராக பதவி வகித்த நாட்களிலும் அவர் இலங்கை தமிழ்க் கட்சிளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்.

அவர் வெளியுறவு செயலாளராக இருந்தபோது கொழும்பில் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு ஒன்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கவனத்துக்குக் கொண்டுவந்த சந்தர்ப்பத்தில் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு பெருமளவு நிகழ்வுகள் இடம்பெற்றுவிட்டன என்றும் மீண்டும் இரு மாகாணங்களின் இணைப்பு குறித்து கொழும்புடன் பேசக்கூடிய நிலையில் இந்தியா இல்லை என்றும் கூறியிருந்தார்.

வெளியுறவு அமைச்சராக வந்த பிறகு கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்றில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை தானும் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறைப்படுத்தாமல் இருந்துவரும் இலங்கை அரசாங்கங்களிடம் கூட்டாட்சி கோரிக்கையை எவ்வாறு முன்வைக்க முடியும் என்று ஜெய்சங்கர் கேள்வி எழுப்பினார். கஜேந்திரகுமாரும் கலந்துகொண்ட அந்தச் சந்திப்பில் கூட்டாட்சி முறை குறித்து வாழ்நாள் பூராவும் பேசிக் கொண்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த வாரத்தைய சந்திப்பில் அவர் கூட்டாட்சி முறையைப் பற்றி முன்னரைப் போன்று எதையும் கூறியதாக தெரிய வரவில்லை. மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு கொழும்பை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் வேண்டுகோளுக்கு கூட நேரடியான பதில் எதையும் அவர் கூறவில்லை என்று அதில் கலந்துகொண்ட தலைவர் ஒருவர் தெரிவித்த தகவல்களின் மூலம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பதிலாக, இயற்கை அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் சூழ்நிலையில் மாகாண சபை தேர்தல்களை எவ்வாறு நடத்தச் செய்வது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடமே ஜெய்சங்கர் ஆலோசனை கேட்கும் தொனியில் பேசியதாகவும் தெரிய வருகிறது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா புதுடில்லிக்கு வரும்போது மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துவது குறித்தும் மாகாண சபைகள்



**மாகாண சபை தேர்தல் தொடர்பிலான தமிழ்க் கட்சிகளின் வலியுறுத்தலோ அல்லது கூட்டாட்சி முறை பற்றிய நிலைப்பாடோ ஜெய்சங்கருக்கு புதியவை அல்ல. வெளியுறவு அமைச்சராக மாத்திரமல்ல, அதற்கு முன்னர் வெளியுறவு செயலாளராக பதவி வகித்த நாட்களிலும் அவர் இலங்கை தமிழ்க் கட்சிளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்**

முறைமையை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும் அவரிடம் வலியுறுத்திக் கூறுமாறு தமிழ் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் ஜெய்சங்கர் பதில் எதையும் கூறாமல் சகலவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்ததாக சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு தலைவர் கூறினார்.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட தற்குப் பின்னரான 38 வருட காலத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கையை வழிக்குக் கொண்டுவர இந்தியா வினால் முடியவில்லை.

பெருமளவுக்கு மாறிவிட்ட புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் மீது இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவிதமான நெருக்குதலையும் கொடுப்பதற்கு மோடி அரசாங்கம் நாட்டம் காட்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால், மாகாண சபை தேர்தல்களை நடத் துவதுடன் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருக்கும் என்பதை மாத்திரம் எதிர்பார்க்கலாம்.

அதுவும் குறிப்பாக, இயற்கை அனர்த்தத்தின் அழிவுகளில் இருந்து நாட்டை மீளக் கட்டியெ ழுப்புவதில் தீவிர கவனத்தை செலுத்துகின்ற ஒரு அரசாங்கத்திடம் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று உடன டியாக கேட்பதற்கு மோடி அரசாங்கம் முன்வரும் என்றும் எதிர்பார்க்க முடியாது. மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்தைக் கோரும் அரசியல் போராட்ட இயக்கம் ஒன்றை ஜனவரி முதல் முன்னெடுக்கப் போவதாக தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் சூறாவளிக்கு முன்னர் கூறியிருந்தார். மாகாண சபை தேர்தல்களை நடத்துவதில் அக்கறையில்லாமல் இருந்துவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவற்றை மேலும் பின்போடுவதற்கு சூறாவளியின் வடிவில் வசதியான சாட்டு ஒன்று கிடைத்திருக்கிறது.

இந்தியாவிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர, தமிழ்க் கட்சிகளுக்கு வேறு மார்க்கமே இல்லை. ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்காமல் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வொன்றை புதிய அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இந்தியாவைக் கொண்டு நெருக்குதல் கொடுப்பதற்கு தமிழக அரசியல் கட்சிகளின் உதவியை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசியப் பேரவை நாடியிருக்கிறது.

தமிழகத்தில் இன்னமும் நான்கு மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் பிரசாரங்களில் மீண்டும் இலங்கை தமிழர் பிரச்சினையை முக்கியத்துவம் பெறச் செய்வதற்கான ஒரு முயற்சியாகவும் இதை சில அவதானிகள் கருதுகிறார்கள்.

மாகாண சபை தேர்தல் தொடக்கம் கூட்டாட்சிக் கோரிக்கை வரை இலங்கை தமிழர்களின் கதியை இந்தியாவின் காலடியில் சமர்ப்பித்துவிட்டு நிற்கின்றன தமிழ்க் கட்சிகள். இலங்கை அரசாங்கத்தை அசைப்பதற்காக இந்திய அரசாங்கத்தை முதலில் அசைப்பதே தற்போது பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப் பகுதியில் இந்தியாவைக் கையாளுவதில் தமிழர் தரப்பு இழைத்த மாபெரும் தவறையும் அதற்குக் காரணமான முக்கிய சக்திகளையும் பற்றிய தெளிவான விளக்கப்பாட்டை தமிழ்க் கட்சிகள் கொண்டிருப்பது அவசியம். மாகாண சபை முறைமையின் இன்றைய சீரழிவுக்கு தமிழர் தரப்பும் கணிசமானளவுக்கு காரணம் என்பதும் வெளிப்படையாக ஒத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

# வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு



ராஜ் சிவநாதன்

# யாழ்ப்பாணத்திற்கான புதிய அத்தியாயத்தின் தொடக்கம்

**யாழ்ப்பாணத்தில்** நடைபெற்ற வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு (NIS) வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. அது வடக்கு மாகாணத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்பு முனையாக அமைந்துள்ளது. இரண்டு நாட்கள் தீவிரமாக நடைபெற்ற இந்த உச்சிமாநாடு, நீண்ட காலமாக தாமதமாகக் கருதப்பட்ட ஒரு அவசியமான முயற்சியை நிறைவேற்றியது.

அரசியல் தலைமைகள், முதலீட்டாளர்கள், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் புலம்பெயர் சமூகத்தை ஒரே நம்பகமான மேடையில் ஒன்றிணைத்து, வடக்கின் பொருளாதார எதிர்காலத்தைப் பற்றி ஆழமான கலந்துரையாடலை ஏற்படுத்தியது.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, பெரிய அளவிலான, தொழில்முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட முதலீட்டு உச்சிமாநாட்டை யாழ்ப்பாணம் முதல் முறையாக வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இங்கு வெளிப்பட்ட செய்தி தெளிவானதும் ஒரே மாதிரியானதும் ஆகும். வடக்கு மாகாணம் இனி வளர்ச்சித் திட்டங்களின் ஓரத்தில் இல்லை. அது இப்போது ஒழுங்கமைக்கப்பட்ட, வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய முதலீட்டுக்குத் திறந்ததாக உள்ளது.



**வடக்கு மாகாண ஆளுநர் மதிப்பிற்குரிய என். வேதநாயகம் அவர்கள், இரு நாட்களிலும் செயலில் பங்கேற்று, முதலீட்டாளர் ஆர்வம் அதிகரித்து வருகிற நிலையில், நிலையான முதலீட்டுக்கான அடித்தளம் அடிப்படை உட்கட்டமைப்பு வளர்ச்சியே என்பதை வலியுறுத்தினார். அவரது பங்களிப்பு, ஒருங்கிணைந்த திட்டமிடல், மாகாணத்திற்குள் மதிப்பு சேர்த்தல், மற்றும் மாவட்ட மட்டத்தில் சமநிலையான வளர்ச்சி ஆகியவற்றின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியது.**




இந்த உச்சிமாநாட்டின் மிக முக்கியமான பெறுபேறுகளில் ஒன்று, டிஜிட்டல் ஒரே சாளர முதலீட்டு தளம் (One Stop Investment Portal – OSSI) அறிமுகப் படுத்தப்பட்டதாகும். இந்த முயற்சி, செயல்முறைகளை எளிமைப்படுத்துவது, சிதறல்களை குறைப்பது, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உயர்த்துவது என்பனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள 'ஒரே சாளர அனைத்து வள மையத்தின்' (One Stop All Resources Centre) செயலாளர் அலுவலகமாக ஆளுநர் அலுவலகம் செயல்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. இம்மையம் தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் அனைத்து தலைமுறைகளையும் சேர்ந்த பங்குதாரர்கள், குறிப்பாக புலம்பெயர் சமூகத்தினர் ஆகியோருக்கு சேவை செய்யும். உச்சிமாநாடு முழுவதும் காணப்பட்ட கலந்துரையாடல்களின் தரம் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. பல அரச அதிகாரிகள் தொழில்நுட்ப ரீதியாக வலுவானதும், அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையிலும் விளக்கவுரைகளை வழங்கினர்.

இது நிறுவன மனப்பாங்கில் ஏற்படும் ஒரு நேர்மறையான மாற்றத்தை பிரதிபலித்தது. அதேபோல், தென் பகுதியைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முறை நிபுணர்கள் வழங்கிய தரவு சார்ந்த பகுப்பாய்வுகள் மற்றும் சந்தை பார்வைகள், வடக்கு வளர்ச்சியைப் பற்றிய புதிய கண்ணோட்டங்களைத் திறந்தன.

வடக்கு மாகாண ஆளுநர் மதிப்பிற்குரிய என். வேதநாயகம் அவர்கள், இரு நாட்களிலும் செயலில் பங்கேற்று, முதலீட்டாளர் ஆர்வம் அதிகரித்து வருகிற நிலையில், நிலையான முதலீட்டுக்கான அடித்தளம் அடிப்படை உட்கட்டமைப்பு வளர்ச்சியே என்பதை வலியுறுத்தினார்.

அவரது பங்களிப்பு, ஒருங்கிணைந்த திட்டமிடல், மாகாணத்திற்குள் மதிப்பு சேர்த்தல், மற்றும் மாவட்ட மட்டத்தில் சமநிலையான வளர்ச்சி ஆகியவற்றின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியது.

வலுவான தேசிய மட்டப் பங்கேற்பு, இந்த உச்சிமாநாட்டின் நம்பகத்தன்மையை மேலும் உயர்த்தியது. நான்கு அமைச்சரவை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் மூத்த செயலாளர்கள் பல அமர்வுகளில் கலந்து கொண்டனர்.

நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள் பங்கேற்றார். நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார அவர்கள், வடக்கு முதலீட்டு உச்சிமாநாட்டின் மூலோபாய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், வடக்கின் பொருளாதார மாற்றத்தில் புலம்பெயர் சமூகத்தினர் அர்த்தமுள்ள வகையில் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தும் ஒரு தாக்கமிக்க உரையை நிகழ்த்தினார்.

வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு வெறும் வெற்றிகரமான நிறைவையே அடையவில்லை. அது பார்வைகளை மாற்றியுள்ளது, நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

மேலும் நிறுவன ரீதியான அடித்தளங்களை அமைத்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கும், பரந்த வடக்கு மாகாணத்திற்கும், NIS என்பது ஒரு முடிவு அல்ல அது ஒரு புதிய தொடக்கமாகும்.

# கடிகாரம்



உன் முகத்தில் விழித்து
உன்னையே நினைத்து... பேசி
உன் பின்னால் ஓடி....

நீ இல்லா இடம் இல்லை.
நீயோ நானோ
ஓட்டத்தை நிறுத்தினால்..?
மதிப்பில்லை இவ்வுலகில்.

தேர்வில் தாமதித்தால்
கல்வி உனதில்லை!
மருத்துவமனையில் தாமதித்தால்
உயிர் உனது இல்லை!

நேரம்... கையில் இருக்கும்
நீர் போன்றது.
தவறவிட்டால் அள்ள முடியாது.

நேரத்தை வீணாக்கியவன்
வென்றதும் இல்லை!
பயன்படுத்தியவன்
தோற்றதும் இல்லை!

நீ உழைத்துக்
கொண்டிருப்பதாலேயே
ஒய்யாரமாய்
உயரத்தில் இருக்கிறாய்.

நேரத்தில்
நல்ல நேரம் கெட்ட நேரம்
என்றுண்டோ?

பஞ்சாங்கத்தை
பரண்மேல் ஏற்றி
பகுத்தறிவோடு பயணிப்போம்!!

-அன்புடன் முல்லை பாஸ்கர்




நிக்ஷன்

# ஸ்ராலினுக்கு நோகாமல் பேசிய கஜேந்திரகுமார்



**இலங்கை** ஒற்றையாட்சி அரசு என்ற கட்டமைப்பு முறைமை (System) பிழையாகத் தெரிவது தமிழர்களுக்குத் தான். அதில் உண்மை உண்டு.

ஆனால், புவிசார் அரசியல் - பொருளாதார போட்டிச் சூழலில் இந்து சமுத்திரத்தில் உள்ள இலங்கைத்தீவு என்ற ஒரு நாடு (அரசு) அமெரிக்க, இந்திய, சீன அரசுகளுக்கு அவசியமானது. அந்த அடிப்படையில் ஏட்டிக்குப் போட்டியாக ‘இலங்கை அரசு‘ என்ற கட்டமைப்பில் எவர் ஆட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு இந்த நாடுகள் ‘நான் முந்தி நீ முந்தி‘ என்று உதவியளிக்கும்.

2009 இல் கூட இதுதான் நடந்தது. அதாவது, கட்சி அரசியல் குறிப்பாக அநுரகுமார திஸாநாயக்கவின் அரசியல் சாணக்கியம், ரணில் விக்கிரமசிங்கவின் உலக அரசியல் அறிவு, சஜித் பிரேமதாசாவின் அரசியல் நுட்பம் என்ற கோணங்களில் இந்த நாடுகள் உதவி அளிப்பதில்லை.

மேலும் அழுத்திச் சொல்வதானால், அநுரகுமார திஸாநாயக்கவின் இடத்தில் இப்போது சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக இருந்திருந்தாலும் உதவிகள் கிடைத்திருக்கும்.

ஆகவே, டித்வா புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு வெளிநாடுகள் உதவியளிப்பதை அநுரகுமார திஸாநாயக்கவின் அரசியல் நுட்பம் அல்லது ஜேவிபியை மையப்படுத்திய தேசிய மக்கள் சக்தியின் அரசியல் காய்நகர்த்தல் என்றெல்லாம் மிகைப்படுத்திப் பேசுவதை அமைச்சர்கள் நிறுத்த வேண்டும்.

ஆனால், அவ்வப்போது பதவியில் இருக்கும் ஆட்சியாளர்கள் சமகால புவிசார் அரசியல் போட்டிச் சூழலை இனம் காணக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருப்பது அவசியம்.

குறிப்பாக, மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது, அப்போதைய புவிசார் அரசியல் பின்னணிகளை சரி யாகப் பயன்படுத்தினார். அதாவது, விடுதலைப்

புலிகளை அழிக்க அமெரிக்கா தான் பொருத்தமான நாடு என்பதை மகிந்த தெரிந்து கொண்டார். இதனால் 2009 இல் போர் இல்லாது ஒழிக்கப்பட்டது.

2015 இல் உருவான புவிசார் அரசியல் பின்னணிகளை மையப்படுத்தி ரணில் மேற்கொண்ட நகர்வு ஜெனீவாவில் ஈழத்தமிழர் விவகாரத்தை மீள் நல்லிணக்கம் என்ற சொல்லாடலுக்குள் கொண்டு வந்தது. இனப்பிரச்சினை விவகாரத்தை வெறுமனே மனித உரிமைகள் விவகாரமாக அது மடைமாற்றியது.

2020 கோட்டாபய எடுத்த நகர்வும் 2022 இல் ரணில் ஜனாதிபதியாக வந்த போது மேற்கொண்ட நகர்வுகளும், அமெரிக்க - இந்திய அரசுகளை சமாந்தரமாக கையாளும் அணுகுமுறைக்கு வழி வகுத்தது.

அதேநேரம், சீனாவுக்குரிய இடமும் இலங்கையில் சுதந்திரமாக உண்டு. இந்த அரசியல் தேவை, சிறிமா - ஜேஆர் காலம் முதல் உண்டு. இது அமெரிக்க இந்திய அரசுகளுக்கு புரியாத புதிரும் அல்ல.

இதையே தற்போது அநுரகுமார திஸாநாயக்கவும் கையாளுகிறார். ஆகவே இது ஒன்றும் பெரிய இராஜதந்திரம் அல்ல. குறிப்பாக இலங்கையின் சிஸ்ரம் (System) என்பது எப்போதும் அமெரிக்கச் சார்புத் தன்மை கொண்டது. அதன் பின்னர் தான் இந்திய, சீன உறவு என்பது.

ஆனாலும், ஈழத்தமிழர் விவகாரங்களில் மாத்திரம் அமெரிக்கா இன்றுவரை கூட இந்திய மத்திய அரசு எடுக்கும் நிலைப்பாட்டோடு ஒத்துழைக்கிறது.

குறிப்பாக, சீனா - ரசியாவை மையப்படுத்தி அமெரிக்க - இந்திய அரசுகளிடையே பனிப்போர் நிலவினாலும், தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டோடு அமெரிக்கா ஒத்துழைக்கிறது. அதாவது மோடி இருந்தால் என்ன ராகுல் காந்தி இருந்தால் என்ன 13 ஆவது திருத்தச் சட்டமே தீர்வு என்பது இந்திய அரசின் நிலைப்பாடு என்பது அமெரிக்காவுக்குத் புரியும்.

வடக்கு கிழக்கில் உள்ள இயற்கைத் துறை முகங்களை பங்கு போடுவதிலும் அமெரிக்க - இந்திய அரசுகள் ஒரு புள்ளியில் நிற்கின்றன.

இதனை அநுரகுமார திஸாநாயக்க நன்கு விளங்கிக் கொண்டு காய் நகர்த்துகிறார். அநுர புரிந்து கொண்டார் என்பதை விடவும் வடக்கு கிழக்கு தமிழர்களை கையாளும் இராணுவப் பொறிமுறை (Military Mechanism) அநுரவுக்கு அறிவுறுத்தியுள்ளதன் பிரகாரம், அநுரவின் தற்போதைய அணுகுமுறையை அவதானிக்க முடியும்.

அதேநேரம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அமெரிக்க பின்புலம் கொண்ட கட்சி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கும் அதேநேரம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கஜேந்திரகுமார் எதிர்ப்பதில்லை.



ஏனெனில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமெரிக்காவுக்கும் அவசியமான ஒன்று. இது கஜேந்திரகுமாருக்கும் நன்கு தெரியும்.

இவர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றிருப்பது கூட அமெரிக்க - இந்திய அரசுகளின் புவிசார் தேவையின் அடிப்படைகளை மையம் கொண்டதாகக் கூட இருக்கலாம். தற்போது குழப்பமடைந்துள்ள உலக அரசியல் ஒழுங்கு நிலையில் அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளுக்கு இலங்கை போன்ற சிறிய நாடுகள் தேவைப்படுகின்றன.

அந்த அடிப்படையில் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு இந்தியாவுடன் அமெரிக்கா முரண்பாட்டில் உடன்பாடாக பயணிக்க வேண்டிய அவசியம் உண்டு.

இந்தியாவின் ரசிய - சீன கூட்டு அமெரிக்காவுக்கு ஒத்துவராத சூழலிலும், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவுடன் ஏதோ ஒரு புள்ளியில் இணைந்து நிற்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு உண்டு.

ஆகவே, இலங்கையை மையப்படுத்தி அமெரிக்க - இந்திய உறவு இருக்க வேண்டுமானால், முதலில் வடக்கு கிழக்கில் அமைதி நிலவ வேண்டும். இதனால் புலிகள் இயக்கமும் அழிக்கப்பட்டது.

ஆனாலும், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அந்த அமைதி நிலவாத ஒரு பின்னணியில், இலங்கை ஒற்றை ஆட்சி அரசு என்ற கட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய கட்டாயச் சூழல் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சி ஏற்கனவே அமெரிக்க இந்திய அரசுக ளின் கொள்கைக்கு ஏற்ப இணங்கிச் செல்லக் கூடிய பக்குவத்துக்குள்

**அமெரிக்க இந்திய அரசுகள் தமது புவிசார் அரசியல் போட்டிக்குள் இலங்கை அரசு என்ற கட்டமைப்பை தங்கள் பிடிக்குள் வைத்திருக்கும் நோக்கில் இந்த காய் நகர்த்தல்களை செய்கிறார்கள் என்பது புரிகிறது. தமிழ் நாட்டில் ஸ்ராலின் ஆட்சியில் இருந்தால் என்ன விஜய் ஆட்சிக்கு வந்தால் என்ன, ஈழத்தமிழர் விவகாரத்தில் 13 என்ற இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை ஏற்றுத் தான் ஆக வேண்டும். இவை எல்லாவற்றையும் உள்வாங்கியே கஜேந்திரகுமார் சென்னைக்குச் சென்றிருக்கிறார்.**



நுழைந்துவிட்டது . கஜேந்திரகுமார் சற்று வித்தியாசமாக செயற்பட்டு வருவதால், அமெரிக்க - இந்திய நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் அவ்வப்போது வழங்கப்பட்டன.

ஆனாலும் தேர்தல் அரசியலை மையமாக் கொண்டு தூய தமிழ்த் தேசியம் பேசுவது போன்ற தோற்றத்தை கஜேந்திரகுமார் காண்பித்து வருகிறார். இதன் பின்னணியில் கஜேந்திரகுமாருக்கும் அவரது கட்சிக்கும் நோகாமல் நகர்த்தப்படும் அரசியல் தான், இந்த தமிழ் நாட்டுப் பயண ஏற்பாடு.

சஜித் பிரேமதாச ஜனாதிபதியாக இருந்திருந்தாலும் இந்த அணுகுமுறைக்குள் கஜேந்திரகுமார் சென்றிருக்கத் தான் வேண்டும்.

ஆகவே, அமெரிக்க இந்திய அரசுகள் தமது புவிசார் அரசியல் போட்டிக்குள் இலங்கை அரசு என்ற கட்டமைப்பை தங்கள் பிடிக்குள் வைத்திருக்கும் நோக்கில் இந்த காய் நகர்த்தல்களை செய்கிறார்கள் என்பது புரிகிறது.

தமிழ் நாட்டில் ஸ்ராலின் ஆட்சியில் இருந்தால் என்ன விஜய் ஆட்சிக்கு வந்தால் என்ன, ஈழத்தமிழர் விவகாரத்தில் 13 என்ற இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை ஏற்றுத் தான் ஆக வேண்டும். இவை எல்லாவற்றையும் உள்வாங்கியே கஜேந்திரகுமார் சென்னைக்குச் சென்றிருக்கிறார்.

அதேநேரம், அமெரிக்க - இந்திய அரசுகள் தயாரிக்கும் தமிழர் விவகார ஏற்பாடுகளுக்கு அநுரகுமார திஸாநாயக்கவும் ஒரு கட்டத்தில் அடங்கிச் செல்லவில்லை என்றால், அவரது ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டமும் அமெரிக்க - இந்திய அரசுகளிடம் இல்லாமலில்லை.

பாகிஸ்தான் - பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் தமக்கு ஏற்ற மாதிரியான அரசியலைத்தான் அமெரிக்க - இந்திய அரசுகள் தற்போது கையாண்டு வருகின்றன.

அதேநேரம், ரசிய - சீன கூட்டை இந்தியா வளர்த்து வருகின்றது என அமெரிக்கா ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மையமாக் கொண்டு அநுர அரசாங்கம் கையாளும் அணுகுமுறை, ரணில் என்ற தற்காப்பு அரசியல் சாணக்கியனால் மடைமாற்றப்படக் கூடிய ஆபத்துகளும் இல்லாமலில்லை.

ஆகவே, 2009 இற்குப் பின்னரான சூழலில் சரியான உத்தி வகுப்படாத நிலையில், தவறான அரசியல் வியூகத்துடன் தொடர்ந்தும் பயணிப்பதால், கையாளப்படும் சக்தியாக மாத்திரமே தமிழ்த்தரப்பு விளங்குகிறது.

பொருத்தமான பொறிமுறை ஒன்றின் கீழ் தமிழ்த்தரப்பு ஒருமித்த குரலில் 2009 ஆம் ஆண்டிலிருந்து கட்சி அரசியலுக்கு அப்பால், உரிய முறைப்படி இயங்கியிருந்தால், தற்போதைய புவிசார் அரசியல் - பொருளாதார போட்டிச் சூழலில் ஒரு அரசு அற்ற சமூகமாக குறைந்தபட்ச அரசியல் முன்னேற்றங்களை கண்டிருக்கலாம்.

இப்போது கூட சஜித், ரணில், அநுர என்று உள்ளக அரசியல் முரண்பாடுகள் ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டங்கள் சிங்கள அரசியல் பரப்பில் ஆழமாக வேரூன்றி வருகின்றன.

அது சாத்தியமா இல்லையா என்பது வேறு. ஆனால் தென்பகுதியின் அந்த குழப்பமான அரசியல் பின்னணிகளைக் கூட தமக்குச் சாதகமாக மாற்றும் நுட்பங்கள் எதுவும் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இல்லையே!

வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி ஆட்சி முறையில் ஈழத்தமிழர்களின் சுயநிரிணய உரிமை அங்கீகரிக்கப்படாது. ஏனெனில் சமஸ்டிக் கோட்பாடு பல வகைப்பட்டது. அமெரிக்காவில் உள்ள முழுமையான சமஸ்டி ஆட்சியை முறை கஜேந்திரகுமார் கோருகிறாரா அல்லது இந்திய சமஸ்டி முறைமையை கேட்கிறாரா?

எதுவானாலும், 'ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை' என்ற கோட்பாட்டில் இருந்து கஜேந்திரகுமார் விலகிவிட்டார் என்பதும், இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணையை தவிர்த்துள்ளார் என்பதும் இங்கே பட்டவர்த்தனம்.

இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை நடந்தால், சுயநிர்ணய உரிமை என்பதை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழும்.

ஆகவே 'முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்' என்ற ஆழமான சர்வதேசக் கருத்தியலை கஜேந்திரகுமார் ஏற்றுள்ளார் என்பது இங்கே பகிரங்கமான உண்மை.

குறிப்பாக, தமிழக சட்ட சபையில் செல்வி ஜெயலலிதா நிறைவேற்றிய இன அழிப்புத் தீர்மானத்தை முன்கொண்டு செல்ல வேண்டும் என கஜேந்திரகுமார் ஸ்ராலினிடம் கேட்கவில்லை. கட்சி வேறாக இருந்தாலும் தீர்மானம் என்பது தமிழக அரசினுடையது. அத் தீர்மானத்தை அப்போது ஸ்ராலின் எதிர்க்கவில்லை என்பது அவதானிக்கத் தக்கது.



# காதல்

நிலா இறங்கும் நள்ளிரவில்
நினைவு நதியாய் பெருகுதடி
குறிஞ்சி மலர் கண்ட
குன்றம்
கூடல் சொல்லும்
கணமே அது.

அலர்ந்த கூந்தல் மணம் ஏந்தி
அலைபோல் வரும்
தென்றலிடம்,
'அவள் வருவாள்' என்றே
அகம் அறிந்து நின்றேன்.

விழி மொழியால் உரையாடி
விலகும் மௌனம்
இனிமையாய்,
சொல்லாத சொல்
அனைத்தும்
சுடராய் எரியும் உள்ளத்தில்.

பிரிவு பயந்த நெஞ்சம்
பொழுதெண்ணி
கரையும் போதும்,
'கூடி வாழ்தல் இயல்பு' என்று
குறிஞ்சி நிலம் கூறுமே.

காலம் மறைக்கும்
பாதையிலும்
காதல் மாறா செம்மைதான்..
அகநானூறு பாடியது
அன்பு அழியாத நெறி என.

மெல்லிய காற்று
மலைமடியில் வழிநடந்து,
மண் நெஞ்சம்
அறிந்ததுபோல்
மௌனமாய் நின்றது.

நிலம் தாங்கும் விதைபோல்
நெஞ்சம் பொறுத்த கனவு,
அவன் அருகே அவள் நிற்க
அரும்பி மலர்ந்தது.

காற்று சொல்லா செய்தி
காதில் வந்து தங்க.



# காதல்

நிலம் மறைக்க நினைத்தது
நாணம் நெகிழ்ந்த கணம்.

பாதம் தொட்ட
மண்ணெல்லாம்
புது வெம்மை கொண்டது.
இரு உயிர் நடுக்கமும்
இயற்கை உணர்ந்தது.

காற்று சாட்சியாக
நிலம் அணையாக,
சொல்லாது சேர்ந்த அகம்
சேர்க்கைதான் காதல் என.

அன்று கலந்த உணர்வு
அலரல்ல, ஆர்ப்பாட்டமல்ல...
மண்ணும் காற்றும் போல
இயல்பாய் ஒன்றான நிலை.
மாலை மருங்கில்
மயங்கிய குன்றம் மௌனம்
பூண்டது
தலைவன் நிழல் சேர்ந்த
கணமே
தலைவி அகம் தெளிந்தது.

விழி நோக்கு விழுமியம்
வார்த்தை இன்றி
உரைத்தபோது,
நாணம் அணியாகி
நெஞ்சம் தானே தாழ்ந்தது.

கைநெருக்கம் காற்றென
கடந்து போகும் கணத்தில்,
உயிர் இரண்டும்
ஒரே ஓசை கொண்டது.
குறிஞ்சி நிலம் அறிந்த
கூடல் நெறி அது
சொல்லா ஒழுக்கம்
சொல்லைவிட செம்மை.

நிலவும் மறைந்து
நேரமும் மறந்தபின்,
அகமும் புறமும் ஒன்றாய்
அமைதியில் அமைந்தது.

அது காமமல்ல....
காலம் ஒப்புக் கொண்ட
காதலின் இயல்பு.
அகம் நிறைவு பெற்ற கணம்.

-முல்லை பகலவன்



ஒருவன்

# ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக
# தொடரும் சூத்திரதாரி பற்றிய சர்ச்சை

**ஆறு** ஆண்டுகளுக்கும் மேலாக தொடரும் சூத்திரதாரி பற்றிய சர்ச்சை.

கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக, ஒவ்வொரு ஏப்ரல் மாதத்திலும் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்கிறது.

கத்தோலிக்க திருச்சபை அன்று முதல் ஒவ்வொரு வருடமும் அப் பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காமையை இட்டு பதவியில் இருக்கும் அரசாங்கத்தை சாடி வருகிறது.

நீதியென்று அவர்கள் பணத்தைக் கேட்கவில்லை. இழந்த உயிர்களைக் கேட்கவும் இல்லை. இந்தத் தாக்குதல்களின் பின்னால் இயங்கிய சூத்திரதாரி யார் என்பதை விசாரணைகள் மூலம் அம்பலப்படுத்துமாறும் இதற்கு காரண மானவர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்பதுமே அவர்களது கோரிக்கையாக இருக்கிறது.



இத் தாக்குதல்களைப் பற்றி இது வரை நீதிமன்ற விசாரணைகள் உள்ளிட்ட பத்துக்கு மேற்பட்ட உள்நாட்டு விசாரணைகள் நடைபெற்று இருக்கின்றன. பல வெளிநாட்டு விசாரணைகளும் நடைபெற்று இருக்கின்றன. சில நீதிமன்ற விசாரணைகள் இன்னமும் முடிவடையவில்லை.

முடிவடைந்த விசாரணைகள் எதன் மூலமும் இந்த சூத்திரதாரி பிரச்சினை தீரவில்லை. எனவே தாக்குதலின் பாதிக்கப்பட்ட பிரதான சமூகமான கத்தோலிக்க சமூகம் அவ்விசாரணைகள் விடயத்தில் திருப்தி அயடையவில்லை. அதே வேளை, சில அரசியல் கட்சிகளும் இதுவரை நடைபெற்ற விசாரணைகள் விடயத்தில் திருப்தி அடையவில்லை. அவர்கள் இத்தாக்குதல்களின் சூத்திரதாரி என்று நினைத்தவர்கள் சூத்திர

**தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானே என்று 2020 ஆம் ஆண்டு அமெரிக்க எப்.பி.ஐ. நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்று இதே நாட்களில் வெளியே வந்துள்ளது. அவற்றின் மூலம் இதுவரை அம்பலமாகாத சூத்திரதாரி எவரும் இல்லை என்று கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.**

தாரிகளாக எந்தவொரு விசாரணை மூலமும் நிரூபிக்கப்படவோ தீர்ப்பளிக்கப்படவோ இல்லை என்பதே அவர்களது மனக் குறையாகும்.

காத்தான்குடியைச் சேர்ந்த சஹ்ரான ஹாஷிம் என்பவரே மூன்று உல்லாச பிரயாண ஹோட்டல்கள் மீதும் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட இத் தற்கொலை தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கியதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் இடம்பெற்ற நாளுக்கு மறுநாள் முதல், மூன்று விசாரணைக் குழுக்கள் (கமிட்டிகள்), ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

அவற்றுக்குப் புறம்பாக ஜனாதிபதி ஒருவர் உள்ளிட்ட பாதுகாப்புக்குப் பொறுப்பான பலருக்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கொன்று முடிவடைந்துள்ளது. அவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட சிலர் பாதிக்கப் பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

குண்டு வெடிப்புக்களோடு பல்வேறு விதமாக சம்பந்தப்பட்ட சஹ்ரானின் இயக்கமான 'தேசிய தவ்ஹீத் ஜமாஅத்' இயக்கத்தைச் சேர்ந்த 25 பேருக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்றும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட 108 பேர் நட்டஈடு கோரி ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் புறம்பாக அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, பாகிஸ்தான், நியூசிலாந்து, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளின் விசாரணைக் குழுக்களும் இண்டர்போல் சர்வதேச பொலிஸாரும் இத் தாக்குதல்களைப் பற்றி விசாரணைகளை நடத்தியுள்ளன.

எனினும், இந்நாட்டுக் கிறிஸ்தவ மக்கள் அவற்றின் தீர்ப்புக்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே, இலங்கை கத்தோலிக்க மக்களின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று பதவிக்கு வந்த சகல ஜனாதிபதிகளையும் வலியுறுத்தி வருகிறார்.

கர்தினால் முதலில் மைத்திரிபாலவிடம் நீதி கேட்டார். ஆயினும் மைத்திரிபாலவின் மெத்தனப் போக்கே தாக்குதலுக்குக் காரணம் என்ற கருத்து வலுப்பெற்று வரவே கர்தினால் அவரை சாடத் தொடங்கினார்.

தாம் பதவிக்கு வந்து தாக்குதலின் சூத்திரதாரியைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குவேன் என்பதைப்



போல, அப்போது ஜனாதிபதி பதவியில் கண் வைத்திருந்த கோட்டாபய கூறினார். எனவே, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கத்தோலிக்க மக்களில் பெரும்பான்மையினர் கோட்டாபயவுக்கே வாக்களித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டா உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்தில் புதிதாக எதுவும் செய்யவில்லை. எனினும், அவர் பதவிக்கு வந்து சில நாட்களில் கருத்து தெரிவித்த கர்தினால் விசாரணைகள் தொடர்பாக தமது திருப்தியைத் தெரிவித்தார். எனினும், படிப்படியாக கத்தோலிக்கத் தலைவர்கள் கோட்டாவின் அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்கவே, ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுபர் மௌலவியே தாக்குதலின் சூத்திரதாரி என்று 2021 கோட்டாவின் அரசாங்கத்தின் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். கத்தோலிக்கத் தலைவர்கள் அதனை ஏற்கத் தயாராகவில்லை.

இதனிடையே 2020 களில் கோட்டாவின் ஆதரவாளர்களே தாக்குதலின் பின்னால் இயங்கியுள்ளனர் என்று ஒரு கருத்து எங்கோ முளைத்து பரவியது. கட்டுக்கதையாயினும் விரும்பத்தக்கதாயின், மக்கள் அதனை நம்புவார்கள் என்று தொடர்பாடல் பற்றிய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனவே, அக்கதைக்கு சிறகு முளைத்தது. இப்போது பலர் அதனை நம்புகிறார்கள். கத்தோலிக்கத் தலைவர்களும் அதனை நம்புவதாகவே தெரிகிறது. 'வேட்டையைத் தூக்கிச் செல்கிறவனே வேட்டைக்காரன்' என்ற சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே பலர் இக்கதையை நியாயப் படுத்துகிறார்கள்.

அதாவது கோட்டாவே பயங்கரவாத தாக்குதலால் பயன் பெற்றார். எனவே அவரே சூத்திரதாரி என்றே அவர்கள் வாதிடுகின்றனர். இது நடக்க முடியாத விடயம் அல்ல. ஆனால், அதனை நிரூபிக்க எவ்வித ஆதாரமும் அக்கருத்தைத் தெரிவிப்பவர்கள் முன்வைப்பதில்லை.

2023 ஆம் ஆண்டு பிரிட்டனின் செனல் 4 என்ற தொலைக்காட்சி சேவையுடன் நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளர் அசாத் மௌலானாவும் இந்தக் கதையையே கூறினார். 2018 ஆம் ஆண்டு தாம் பிள்ளையானின் ஆலோசனைப் படி, அரச உளவுச் சேவையின் அதிபராக இருந்த மேஜர்



ஜெனரல் சுரேஷ் சலேயை சந்தித்ததாக அவர் சொன்னார். சலேயின் வேண்டுகோளுக்கு இணங்க, தாம் அவருக்கும் தேசிய தவ்ஹீத் ஜமா அத் அமைப்பின் தலை வர் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ததாகவும் சொன்னார். கோட்டா பதவிக்கு வர வசதியாக, நாட்டில் பதற்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அப்போது சலே கூறியதாகவும் மௌலானா செனல் 4 தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது கூறினார்.

சலேயின் அக் கருத்துப்படியே உயர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பதே அவரது வாதமாகும்.

பின்னர் கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. தாம் பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறினார்.

எனவே, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போது, கத்தோலிக்க மக்கள் தேசிய மக்கள் சக்திக்கே ஆதரவளித்தனர்.

ஆயினும், அனுரகுமார பதவிக்கு வந்து வருடங்கள் கடந்த போதும், அந்த விடயத்தில் எதுவும் நடக்கவில்லை. எனவே, தாக்குதலுக்கு ஆறு வருடங்கள் பூர்த்தியாகும் கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான எதுவும் நடைபெறாவிட்டால் தமது மக்கள் மீண்டும் வீதியில் இறங்கிப் போராட நேரிடும் என்று கர்தினால் எச்சரிக்கை விடுத்தார்.

அதனாலோ என்னவோ ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணை களில் பல விடயங்கள் வெளிவரும் என்று ஜனாதிபதி கூறினார். கத்தோலிக்கத் தலைவர்கள் அதனை நம்பினார்களோ என்னவோ ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் கர்தினால் கூறியதைப் போல் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம் பெறவில்லை.

ஏப்ரல் 20 ஆம் திகதி ஜனாதிபதி தமது அலுவலகத்தில் இருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக மைத்திரிபால நியமித்த ஜனாதி பதி ஆணைக்குழுவின் அறிக்கையையும் அதனோடு சம்பந்தப்பட்ட இரகசிய ஆவணங்களையும் விசாரணைக்காக இரகசிய பொலிஸாரிடம் கையளித்தார். உண்மையிலேயே அவரால் அது மட்டுமே செய்ய முடியும். இது வரை தெரிய வராத தாக்குதல் சூத்திரதாரி ஒருவர் இருந்தாலும் அதனை ஜனாதிபதியால் அம்பலப்படுத்த முடியாது. அதனை விசாரணையாளர்களே செய்ய வேண்டும்.

இதற்கிடையில் 2006 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் காணாமல் போன சம்பவம் தொடர்பாக பிள்ளையான் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் மூலம் உயர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக பல தகவல்கள் கிடைத்தாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார். அந்த சம்பவத்தோடு தெற்கில் சில அரசியல்வாதிகள் கலக்கமடைந்தமை காணக்கூடியதாக இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுப்பு காவலில் இருக்கும் பிள்ளையானுடன் தொலை பேசியில் பேசுவதற்கு இரகசிய பொலிஸ் பணிப் பாள ரிடம் அனுமதி கேட்டிருந்தார்.

அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் கடும் பேரினவாதி என தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் கருதப்படும் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தாம் பிள்ளையானின் சட்டத்தரணி என்று கூறி பிள்ளையானை சந்திக்க அனுமதி கோரினார் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அத்தோடு தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானே என்று 2020 ஆம் ஆண்டு அமெரிக்க எப்.பி.ஐ. நிறுவனம் வெளியிட்ட அறிக்கையொன்று இதே நாட்களில் வெளியே வந்துள்ளது. அவற்றின் மூலம் இதுவரை அம்பலமாகாத சூத்திரதாரி எவரும் இல்லை என்று கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.



**2018 ஆம் ஆண்டு தாம் பிள்ளையானின் ஆலோசனைப் படி, அரச உளவுச் சேவையின் அதிபராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயை சந்தித்ததாக அவர் சொன்னார். சலேயின் வேண்டுகோளுக்கு இணங்க, தாம் அவருக்கும் தேசிய தவ்ஹீத் ஜமா அத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ததாகவும் சொன்னார்.**




# இஸ்லாமியத் தமிழ் மக்களின் குருட்டுப் பக்கம்

**இன்றைக்கு** அது பிழையான முடிவாக தெரிந்தாலும் அன்றைக்கு அது தான் சரியான முடிவாக இருந்த ஒரேயொரு தெரிவாகும். 1990 அன்று யாழ்ப்பாணத்தில் சுமார் 500 வரையான இஸ்லாமிய தமிழ்க் குடும்பங்களும் ஐந்து லட்சம் வரையான தமிழ்க் குடும்பங்களும் வாழ்ந்து வந்தனர்.

இன்று இஸ்லாமிய தமிழ் மக்களில் சிலர் தமிழ் மக்கள் மீதான காழ்ப்புணர்வுகளைக் கொட்டி வருவதை காணக்கூடியதாக உள்ளது. 1990 இல் இஸ்லாமிய தமிழ்ச் சகோதரர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப் பட்டதையும், 1990 ஆம் ஆண்டு ஆயுததாரிகளால் நடத்தப்பட்ட குருக்கள் மடம் கொலைகளையும் நினைவு கூர்கிறோம்.

புதைகுழி தோண்டுகிறோம் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீதான, குறிப்பாக எமது போராட்டம் மீதான வக்கிரமப் பார்வையை தான் வெளிப்படுத்துகின்றனர்.

உண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப் படுவதானது ஒரு துன்பியல் நிகழ்வாக இருந்தாலும், இன்றைக்கு அது பிழையான முடிவாகத் தெரிந்தாலும், அன்றைக்கு அது தான் சரியான முடிவாக இருந்த ஒரேயொரு தெரிவாகும்.

அன்று யாழ்ப்பாணத்தில் சுமார் 500 வரையான இஸ்லாமிய தமிழ்க் குடும்பங்களும் ஐந்து லட்சம் வரையான தமிழ்க் குடும்பங்களும் வாழ்ந்து வந்தனர். இந்த 500 குடும்பங்களினுள் அனேகர் இராணுவத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவவுடன் தொடர்பில் இருந்தனர். அத்துடன் காட்டிக் கொடுப்புக்களும் செய்தனர்.

அப்போது கொப்பேக்கடுவ ஒரு மாஸ்டர் பிளான் போட்டார். அதாவது அவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டு தமிழ் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் ஊடுருவ விட்டு இஸ்லாமியத் தமிழர்களை வைத்தே புலிகள் அமைப்பின் போராளிகளை கொல்வதுதான் கொப்பேக்கடுவவின் திட்டம்.

நீங்கள் கேட்கலாம் ஏன் இதற்கு தமிழ் ஆயுதக் குழுக்களை பயன்படுத்தலாம் தானே? ஏன் இஸ்லாமிய தமிழர்களை பயன்படுத்தினார்? என்று. இதற்கான காரணம் இஸ்லாமியத் தமிழ் இளைஞர்களும் விடுதலைப் போராட்டத்தில் இணைய ஆரம்பித்தமையும் இஸ்லாமிய தமிழ் மக்களிடமும், தமிழ் மக்களிடமும் காணப்பட்ட பலமான இணை உறவு நிலையுமாகும்.

இஸ்லாமிய தமிழ்மக்களும் தமிழ் மக்களும் உறவாக இருந்தால் விடுதலைப் போராட்டம் பலமடைந்தால் அதனை அழிக்க முடியாது. எனவே இஸ்லாமியர்களையும் தமிழர்களையும் மனநிலை ரீதியாக



எதிரிகளாக்கி அடிபட விடவேண்டும் என்பதே அவரது எண்ணம். தமிழர்களின் பகுதிகளில் போராளிகளைக் கொல்ல இஸ்லாமியர்களை பயன்படுத்தினால் தமிழர்களின் கோபம் அவர்கள் மீது திரும்பும் என்பதும் அதேவேளை தமிழர்களைப் போன்று வேடமிட்ட குழுக்களை வைத்து இஸ்லாமியர்களில் சிலரை கொலை செய்தால் அவர்களின் கோபம் தமிழ் மக்கள் மீது திரும்பும் எனவும் அன்றைய சிங்கள மூளைகள் யோசித்தன.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் இஸ்லாமிய கைக்கூலிகளால் தமிழர் பகுதிகளில் பல படுகொலைகள் நடத்தப்பட்டன. முஸ்லிம் ஊர்காவல் படை, ராசிக்குழு, ஜிகாத் அடிப்படை வாத அமைப்பு போன்றன இதற்காக களத்தில் இறக்கப்பட்டன. மாறாக தமிழர்களில் காணப்பட்ட சில சிங்கள கைக்கூலிகளை வைத்து குருக்கள் மடம், காத்தான்குடி போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் மீது வன்முறைகளும் படுகொலைகளும் நிகழ்த்தப்பட்டன.

யாழ்ப்பாணத்திலும் இது போன்ற தமிழ் முஸ்லிம் மோதலை உருவாக்க இஸ்லாமியர்களின் சில வீடுகளுக்கு ஆயுதங்கள் தருவிக்கப்பட்டதை புலிகளின் புலனாய்வுத்துறை கண்டு பிடித்து விடுகின்றது. சிந்தித்து பாருங்கள் ஐந்து லட்சம் தமிழர்கள் வாழும் இடத்தில் சொற்ப அளவான இஸ்லாமியர்களோடு மோதல் ஆரம்பித்தால் என்ன நிகழும்?

இருக்கும் இஸ்லாமியர்கள்கள் அத்தனை பேருமே கொலை செய்யப்படக்கூடிய சாத்தியம் உண்டு. அது ஒரு இஸ்லாமியர்கள் மீதான தமிழ் மக்களின் இனப் படுகொலையாக மாறியிருக்கும்.

இதனைவிட முஸ்லிம்களை தமிழ் ஆயுதக் குழுக்களையோ அல்லது சிங்கள இராணுவத்தை வைத்தோ கொலை செய்துவிட்டு அதற்கான பழியை புலிகள் மீது போட்டால் அதுவும் சிக்கலான நிலையை கொண்டுவந்து ஆகக்கூடிய இழப்பை இஸ்லாமிய மக்களுக்கே ஏற்படுத்தி விடும்.

இதனை தடுக்க இந்த மோதலுக்கு சிங்கள தரப்பால் கருவியாக பயன்படுத்தப்பட்ட இஸ்லாமியர்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டனர். தலைமையால் மிகவும் சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவாகும். அதுவே அன்றைய ஆகச் சிறந்த சரியான முடிவாகும்.

இதன் மூலம் இஸ்லாமியர்களுக்கு தமிழ் மக்களால் நிகழ இருந்த அசம்பாவிதங்களிலிருந்து அவர்கள் காப்பாற்றப் பட்டதுடன் சிங்களத்தின் கனவுகளும் பலிக்காமல் போனமை வரலாறு.

அதன் பின்னர் சிங்களம் தட்டைத் திருப்பி மாற்றி போட்டது. அதாவது 'வடக்கிலிருந்து உங்களை விரட்டிவிட்டார்கள். அவர்கள் வன்மம் பிடித்தவர்கள். உங்களை தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ விடமாட்டார்கள். நீங்களும் புலிகளின் எதிரிகளே. குருக்கள் மடம், காத்தான் குடி போன்ற இடங்களில் உங்களை கொன்றது புலிகளே' என்று முஸ்லிம்களின் மனதை தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு மாற்றினார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை அந்த காழ்ப்புணர்வு, குரோத மனநிலை இஸ்லாமியர்களுக்கு தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றது. அது 2009 இல் முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்த போது வெற்றிக் களிப்பில் சிங்களவரோடு சேர்ந்து பால் சோறு சாப்பிடுமளவுக்கு இருந்துள்ளது.

ஆனால் தமிழ் மக்களோ பல முறை அவர்களுக்காக விட்டுக் கொடுத்துள்ளனர். கடந்த மாகாணசபையில் முதலமைச்சர் பதவியை கூட விட்டுக் கொடுத்துள்ளனர். 2004 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசியத் தலைவர் அவர்கள் இஸ்லாமியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை ஒரு துன்பியல் நிகழ்வு என வருத்தம் தெரிவித்து அதற்காக ரவூப் ஹக்கீமிடம் மன்னிப்பும் கேட்டார். மேலும் அவர்கள் விரும்பினால் வடக்கில் மீளவும் குடியேறலாம் என பொது அறிவிப்பும் விடுத்தார்.

இதனை விட இஸ்லாமிய மக்களின் தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் எவற்றையும் ஆவணப் படுத்துவதையோ பேசுபொருள் ஆக்குவதையோ அல்லது நினைவேந்தல் செய்வதையோ தலைவர் விரும்பவில்லை. அதற்கு தடை விதித்தார்.

அது சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவர்கள் சிங்கள கைக்கூலியாகி, தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட விடயம். அவற்றை நாம் பேசினால் இன்னும் எமக்கும் அவர்களுக்கும் முரண்பாடே வளரும். அதனால் அவற்றை மறந்து விடுவோம் என தலைவர் பலமுறை தெரிவித்தார். ஆனால் இஸ்லாமியர்களோ சிங்கள மூளைகளின் கதை களை நம்பி இன்றுவரை காத்தான்குடி பள்ளிவாசலை இன்றும் அப்படியே வைத்திருக்கிறார்கள். புலிகள் செய்யாத கொலைகளை புலிகள் தான் செய்ததாக பொய்யாக நம்பிக்கொண்டு இன்றுவரை அடுத்த சந்ததிக்கும் அந்த வரலாற்றை கடத்தி தமிழ் மக்கள் மீதான குரோதத்தை வளர்த்து வந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியே குருக்கள் மடத்தை தோண்டுகின்ற செயற்பாட்டிற்கான முனைப்புகளுமாகும். ஆயுததாரிகளின் கொலைகள் அனைத்தும் அன்றைக்கு புலிகள் மீதே போட்டு கொலைகாரர்கள் தப்பித்து வந்துள்ளமையும் கண்கூடு. ஆட்சியை பிடிக்க ராஜபக்சாக்களும் இதே வழிமுறையைத் தான் கையாண்டுள்ளனர். ஸஹ்றான் கும்பல் இதற்கான கருவியாக அவர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளனர்.

ஆனாலும் தமிழ் மக்கள் சிங்கள மூளைகளுக்குள் சிக்காமல் சுயமாக சிந்தித்து இஸ்லாமிய மக்களையும் தமிழ் பேசும் சகோதரர்களாக கருதியமையால், அவர்கள் செய்த துன்பங்களை மறந்து மன்னித்துவிட்டார்கள்.

தமிழ் மக்கள் இஸ்லாமிய மக்களுக்கு நடந்த கொடுமைகளுக்கு மன்னிப்பும் கேட்டுவிட்டார்கள். ஆனால் அவர்களோ இன்றும் குருட்டுப் பக்கத்தையே பார்த்துக்கொண்டு தமிழ் மக்களை விரோதிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் தான் வடக்கு கிழக்கு இணைவதை கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இஸ்லாமிய மக்கள் உண்மைகளை புரிந்து சிங்களத்தின் நிகழ்ச்சி நிரலை கைவிட்டு வெளிவந்து அதற்குள் சிக்காமல் சுயமாக சிந்திக்கும் வரை, விழிப்படையும் வரை இந்த குரோத மனநிலை இருந்து கொண்டே தான் இருக்கும்.



- தீக்கதிர்

# இலங்கைத் தமிழர் குடியுரிமைப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு தேவை

**தமிழகத்தில்** உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படை வசதிகளையும் புதிய குடியிருப்புகளையும் மேம்படுத்தத் தமிழக அரசு எடுத்து வரும் முன்னெடுப்புகள் மிகுந்த வரவேற்புக்குரியவை. ஒரு நீண்டகாலத் துயரத்திற்குப் பிறகு அம்மக்களின் வாழ்வில் ஒளி ஏற்ற இத்தகைய நடவடிக்கைகள் அவசியம்.

இருப்பினும், இத்தகைய வாழ்வாதார முன்னேற்றங்களுக்கு அப்பால், பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாமல் புரையோடிப் போயிருக்கும் 'குடியுரிமை' எனும் அடிப்படைச் சட்டச் சிக்கல் ஒரு சமூகத்தின் ஒட்டு மொத்த எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பாக, இந்தியக் குடிமக்களைத் திருமணம் செய்துகொண்ட இலங்கைத் தமிழர்கள் மற்றும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் நிலை, இந்திய ஜனநாயகத்தின் மனிதாபிமான முகத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு பெரும் சவாலாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

தற்போதைய இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்படி, பெற்றோரில் ஒருவர் 'சட்ட விரோதக் குடியேறி' என்று வகைப்படுத்தப் பட்டால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்தியக் குடியுரிமை கோரும் தகுதி சட்டப்பூர்வமாக மறுக்கப்படுகிறது.

இதன் விளைவாக, 2004 டிசம்பர் 4 ஆம் திகதிக்குப் பிறகு இந்தியாவில் பிறந்த ஆயிரக்கணக்கான குழந்தைகள், தங்கள் பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடியுரிமை பெற்றவராக இருந்தும், சட்டத்தின் பார்வையில் 'அந்நியர்களாகவே' நடத்தப்படுகிறார்கள்.

இங்கேயே பிறந்து, இங்கேயே படித்து, இங்கேயே வளர்ந்து முடித்த ஒரு தலைமுறை, தங்களின் வேர்கள் எங்கே என்று தெரியாமல் தங்களுக்குச் சொந்தமான மண்ணிலேயே அடையாளச் சிக்கலில் தவிப்பது ஒரு வரலாற்றுப் பிழையாகும்.

இந்த இளைஞர்கள் கல்வி முடித்தும் முறையான வேலைவாய்ப்பு பெற முடியாமலும், ஜனநாயகக் கடமையான வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டும் முடங்கிக் கிடப்பது அவர்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகும்.

கிட்டத்தட்ட 3,000 முதல் 8,000 வரையிலான மக்கள் இத்தகைய இக்கட்டான சூழலில் சிக்கியிருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. உயர் நீதிமன்றங்கள் பலமுறை இவர்களுக்குச் சாதகமான தீர்ப்புகளை வழங்கியிருந்தாலும், காவல் துறை சரிபார்ப்பு மற்றும் அதிகாரத்துவத் தாமதங்களால் அத் தீர்ப்புகள் நடைமுறைக்கு வராமல் வெறும் காகித அளவிலேயே தேங்கிக் கிடக்கின்றன.

இந்த விவகாரத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஒரு சிறப்புக் கொள்கை ரீதியான தலையீட்டை (Special Policy Intervention) அவசரமாக முன்னெடுக்க வேண்டும். நீண்ட காலமாகத் தொடரும் இந்தச் சட்டப் போராட்டங்கள் அடுத்தடுத்த தலைமுறைக்கும் பாரமாக மாறிவிடக் கூடாது.

வரலாற்றின் பின்னணியையும் மனிதாபிமானத்தையும் முதன்மைப்படுத்தி, ஒரு தெளிவான கொள்கை முடிவை எடுப்பதன் மூலமே இந்தத் தலைமுறை கடந்த அநீதிக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

# தை பிறந்தது!



ஈழவன் அனுராஜ்

தைத் திங்கள் உதவுதலால்
தரணி துயர் துறந்து மகிழும்!
விதையிட்ட வியர்வை துளி
விழுமிய நெல்லாய் விளையும்!!

கதிரவன் அருள் புரிய,
களம் கனிந்து களிகூர,
உழவர் உழைப்பு தெய்வமென
உலகம் உணர்ந்து உளங்குளிரும்!!

பொங்கும் பால் அகம்நிறைய
புறம்நிறையும் புகழ்வாழ்வு
நன்றி உணரா நெஞ்சமெல்லாம்
நிலமறந்தார் நிலை போலே.

கரும்பின் சுவைபோல் இனிய
கருணை குடிமை காத்திட,
மண்..மக்கள்... விண் இணைவு
மாட்சிமை பெறும் நாள் இந்நாள்.

வெற்றிலை, மஞ்சள், வாழை
விழாவுக்குச் சான்று மொழிய,
பழந்தமிழ் நாகரிகம்
புதுநாளில் புகழ் பெறுமே!!

செய்யுள் சொல்லா ஒழுக்கமே
செம்மை காட்டும் சான்றிதழ்
உழைப்பை வணங்கும் இனமே
உயர்வை அடையும் எந்நாளும்!

தைப்பொங்கல் திருநாளில்
தமிழ் நிலைபெற்று தழைத்தோங்கும்!!



சு.நிஷாந்தன்

# அமெரிக்க – இந்திய இராஜதந்திர நகர்வுகளை அவதானிக்கும் அநுர

## ஜெய்சங்கர் மாகாண சபைத் தேர்தல்களை 2026 இல் நடத்தும் நோக்கம் இல்லை; அநுரவின் நிலைப்பாட்டை செவிமடுத்த ஜெய்சங்கர்

**அநுரகுமார** திஸாநாயக்கவின் அரசாங்கம் அமைவதற்கு முன்னராகவே அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தனிக் கவனம் இலங்கை மீது அதிகரித்திருந்தது. அநுர ஜனாதிபதியான பின்னரும் இந்த நாடுகளின் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஆனாலும் அநுர ஆட்சிக்குப் புதியவர் என்ற கோணத்தில் சில பரிந்துரைகளை இந்த நாடுகள் குறிப்பாக அமெரிக்க, இந்திய அரசுகள் வழங்கியிருந்தன.

குறிப்பாக மீள் நல்லிணக்கம் என்பதும் அரசியல் தீர்வு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் போன்ற சர்வதேசச் சொல்லாடல்களுக்கு உரிய பரிந்துரைகள் அநுர அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தன.

ஆனாலும் அதனைக்கூட செய்யாமல், அதற்கான முயற்சிகளைக் கூட எடுக்காமல் முன்னைய அரசாங்கங்கள் எவ்வாறு செயற்பட்டதோ அதேபோன்ற ஒரு அணுகுமுறையை அநுர அரசாங்கம் கடந்த ஒரு வருடமாகக் கையாண்டு வருகின்றது. இது டில்லிக்கும் தெரியும்.

இப் பின்னணியில் தான் கடந்த நவம்பர் மாத இறுதியில் டித்வா புயல் ஏற்பட்டு இலங்கைத்தீவில் பெரும் உயிரழிப்புகளும் பொருளாதார அழிவுகளும் ஏற்பட்டன.

இதனைப் பயன்படுத்தி இந்தியா உடனடி உதவிகளை செய்துள்ளது. அமெரிக்காவும் நிவாரணங்களை வழங்கியுள்ளது. ஏனைய நாடுகளும் உதவி செய்திருந்தாலும் இந்திய உதவி என்பது இலங்கைக்குப் பெரும்



ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் இருந்தது. முதற் பொறுப்பாளி (First Responder) என்ற அடைமொழியுடன் உடனடியாக இலங்கைக்கு வந்து 'ஒப்பரேசன் சகர் பந்து' (Operation Sagar Bandhu) என்ற பெயரில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இந்தியா ஈடுபட்டது.

இந்திய உதவிகளின் பின்னால் அமெரிக்க செல்வாக்கு அல்லது அமெரிக்க ஆதரவு இல்லாமலில்லை. இச் சூழலில் தான் சீனா, இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல் என்ற ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறது.

ஆனாலும், அநுர அரசாங்கத்தைப் பொறுத்தவரை சீன உதவி முக்கியமானது என்று கருதினாலும், அமெரிக்க, இந்திய உதவிகள் உள்ளூர் அரசியல் நிலைமைகளை சமாளிக்க அவசியம் தேவை என்பதை முன் நிறுத்திச் செயற்படுகிறார்.

உள்ளூர் அரசியல் நிலைமை என்பது ஆட்சி அதிகாரத்தை தக்க வைப்பதற்கு மாத்திரமல்ல, ஈழத்தமிழர் விவகாரத்தை சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்கம் செய்ய, மீள் நல்லிணக்கம் என்ற சொல்லாடலைக் கூட தவிர்ப்பதற்கான பின்னணியில் அமெரிக்க இந்திய உதவிகள் தேவை என்ற நிலைப்பாடு அநுர அரசாங்கத்துக்கு உண்டு. நம்பிக்கையும் உண்டு.

இந்த நிலைப்பாட்டையே ரணில், மகிந்த, கோட்டாபய ராஜபக்ச, சந்திரிகா ஆகியோரும் முன் நிறுத்தியிருந்தனர்.

ஆனால், அநுர அதனை முன் நிறுத்தியிருப்பதன் பின்னணி என்பது, ஈழத்தமிழர் விவகாரத்தை தனது பதவிக் காலத்திலேயே உள்ளூர் விவகாரமாக மாற்றி, அந்த விவகாரத்தில் இருந்து முற்றாக அமெரிக்க, இந்திய அரசுகளின் அழுத்தங்களை தவிர்ப்பது பிரதான நோக்கமாக உள்ளது.

இது தங்கள் பிரதான அணுகுமுறை என்ற கோணத்தில் றில்வின் சில்வா ஜேவிபியின் தேசிய சபைக் கூட்டத்தில் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த வாரம் கொழும்புக்கு வந்த போது அநுரவை சந்தித்தார். அப்போது டித்வா புயலினால் ஏற்பட்ட அழிவுகளை ஈடு செய்ய இந்தியா வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த அநுர, இலங்கைத்தீவின் பொருளாதார நிலைமைகள் பற்றியும் விளக்கிக் கூறியிருந்தார். இந்த இடத்திலேதான் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த பத்து பில்லியன்கள் தேவை எனவும், உடனடியாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாது என்ற தொனியிலும், ஜெய்சங்கரிடம் சுட்டிக்காட்டியதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக, டித்வா புயல் அழிவுகளினால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், அதிக நிதி இழப்புகள் பற்றி பிரதமர் ஹரிணி ஜெய்சங்கரிடம் எடுத்து விளக்கியுள்ளார்.

ஆனால், இலங்கைக்கான உதவிகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான அதிகாரபூர்வமான உரையாடலில், 13 பற்றியோ மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பற்றியோ எதுவும் பேசப்படவில்லை என்றே உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

பரிமாறப்பட்ட செயற்திட்ட அறிக்கை ஒன்றிலும் 13 பற்றி இல்லை என்றே உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்பது இந்தியாவின் மென் போக்கான அழுத்தம். ஆனாலும், தமது தேவைகளை இலங்கை பூர்த்தி செய்தால் போதும் என்பது இந்திய அரசின் பிரதான நிலைப்பாடு.

இதற்காகவே இலங்கையின் இறைமையில் இந்தியா தலையிடாது என்ற வார்த்தையை டில்லி அடிக்கடி பிரயோகித்து வருவதை அவதானிக்க முடியும். ஆகவே, ஈழத்தமிழர் விவகாரம் என்பது இந்தியாவுக்குப் பத்தோடு பதினொன்று என்ற கணக்கில் ஆகிவிட்டது.

இப் பின்புலத்தில்தான், டித்வா புயலினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு உதவிகளை வழங்குதல் என்ற பெயரில், முழுமையாக இலங்கையை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது இந்தியா என்ற அவதானிப்புகள் சிங்கள அரசியல் மட்டங்களில் உண்டு.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கட்சிகளை சந்தித்தபோது 13 ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் என்றெல்லாம் பேசியிருந்தாலும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் பலவீனம், ஒருமித்த செயற்பாடு அற்ற காரண காரியங்களினால், அநுர அரசாங்கத்திற்கு உதவி வழங்கி, தமது நோக்கத்தை நிறைவேற்றுதல் என்ற கோணத்தில் ஜெய்சங்கர் தனது கொழும்பு பயணத்தை நிறைவு செய்திருக்கிறார்.

ஏறத்தாழ கடந்த பத்து வருடங்களில் 14 தடவைகள் கொழும்புக்கு வருகை தந்தார் ஜெய்சங்கர். அதில் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்தில் இலங்கை எந்த வகையிலும் இந்திய நலன்களுக்கு ஏற்ற முறையில் ஆதரவு வழங்க வேண்டும்,

**2009 மே மாதத்துக்குப் பின்னரான 16 வருடங்களில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் நேரடியாகக் கண்டு வரும் அனுபவங்கள். ஆனால் பட்டறிவு இதுவரை ஏற்படவில்லை. அதேநேரம் ரணில் - மகிந்த அணியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கம் தற்போதைக்கு அமெரிக்க - இந்திய அரசுகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை**

சீனாவின் பொருளாதார உதவிகளை இலங்கை பெற்றாலும் பிராந்திய விவகாரத்தில் அதுவும் இராணுவ செயற்பாட்டு முறைகளில் இலங்கை இந்தியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற நோக்கமே பிரதானமாக அமைந்துள்ளது.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில், பாதுகாப்பான கடல் வழித்தடங்கள், வர்த்தகம் மற்றும் பிராந்திய பாதுகாப்பை மேம்படுத்துதல், போன்ற விவகாரங்களில் இலங்கை அமெரிக்காவுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற நிலைப்பாடும் உண்டு. அதற்கான பேச்சுக்களும் நடக்கின்றன.

டித்வா புயலுக்குப் பின்னர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அநுரவை சந்தித்து பேசியிருக்கிறார். அமெரிக்க உதவிகள் மற்றும் அமெரிக்க விமானம் யாழ் பலாலி விமானத் தளத்தில் தரையிறங்கி நிவாரண பொருட்களை கையளித்தமை உள்ளிட்ட விவகாரங்கள், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க ஸ்திரத்தன்மைக்கு ஏற்றதான அணுகுமுறை கள் என்பதை அமெரிக்கா அநுரவுக்கு உணர் த்தியிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பு, கடத்தல் தடுப்பு, பேரிடர் நிவாரணம் போன்ற செயற்பாடுகளில் இலங்கை அமெரிக்காவுடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்றும் அநுரவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு உதவும் வகையில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துதல், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்தல், மற்றும் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துதல் ஆகியவற்றில் அமெரிக்கா கவனம் செலுத்துகிறது,

இப் பின்னணியில் "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்ப சீனாவின் முழுமையான ஒத்துழைப்பு" என்ற வாசகங்களுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது மத்திய குழுவின் உறுப்பினரும், தன்னாட்சி பிராந்திய கம்யூனிஸ்ட் கட்சி குழுவின் செயலாளருமான வோங் யுன்சங் (Wang Jun-zheng) உள்ளிட்ட சீனத் தூதுக் குழு அநுரவை சந்தித்திருக்கிறது.

அநுரவைப் பொறுத்தவரை தற்போதைக்கு அமெரிக்க - இந்திய சார்புத் தன்மையுடன் செயற்பட வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது.

இலங்கை நோக்கிய அமெரிக்க வியூகங்கள் இந்தியாவுக்கு சிறிய எச்சரிக்கையாக இருந்தாலும், சீன இராணுவ ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என்ற நோக்கிலான இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்தில், அமெரிக்கா இந்தியாவுடன் விரும்பியோ விரும்பாமலோ இணைந்து செய்பட வேண்டும் என்ற நிலைப்பாடு உண்டு என்பது புதுடில்லிக்கு ஆழமாக தெரியும்.

அதன் பின்னணியில் அமெரிக்காவை விடவும் சீன ஆதிக்கம் இலங்கையில் வேரூன்றி விடக் கூடாது என்ற இலக்கு இந்தியாவுக்குப் பிரதான மானது. அதற்காக என்ன விலை கொடுக்கவும்



இந்தியா தயாராக உள்ளது. இதன் ஒரு கட்டமாகவே, டித்வா புயல் பாதிப்புகளுக்காக இலங்கைக்கு 4,032 கோடி இந்திய ரூபாவை நிவாரண மாக ஜெய்சங்கர் கொழும்பில் அறிவித்திருக்கிறார். இதற்கு அநுர மனதார நன்றியும் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் 4032 கோடியில், 895 கோடி இந்திய ரூபா இலங்கைக்கு மானியமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த தொகையை இலங்கை மீள செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், மீதி 3,133 கோடி இந்திய ரூபா இலகு கடனாக வழங்கப்படுகிறது. ஆகவே அநுர அரசாங்கம், இந்திய அரசின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது என்று கூறும் அதே நேரம், அமெரிக்க செல்வாக்கும் இலங்கை மீது அதிகரித்துள்ளது எனவும் யாரும் கூறினால், அதில் மாற்றுக் கருத்தில்லை.

ரசிய - இந்திய உறவு, இந்திய - சீன வர்த்தகம் போன்ற நகர்வுகளில் அமெரிக்கா, இந்தியாவுடன் முரண்படுகிறது என்பதும், அமெரிக்காவுடனான இந்திய வெளியுறவுக் கொள்கையில், புதுடில்லி இரட்டைத் தன்மையை பின்பற்றி வருவதும், அநுரவுக்குச் சாதகமான ஒன்று.

இதனை அவதானித்த நிலையில் தான் அநுர, அமெரிக்க - இந்திய அரசுகளை கையாளுகிறார் என்பதையும் இங்கே அவதானிக்க வேண்டும். இது ரணில் விக்கிரமசிங்கவின் உத்தி எனலாம்.

இப் பின்னணியில்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் கோரிக்கைகளை இந்தியா ஏற்றிருந்தாலும், அநுர கூறுகின்ற காரண காரியங்களையும் இந்தியா நம்புகின்றது. அல்லது நம்புவது போன்ற காண்பித்து தமது புவிசார் நலன்களை இந்தியா நிறைவேற்றுகின்றது எனவும் கூறலாம்.

அதாவது தேர்தலை நடத்த நிதியில்லை என்பதும் புதிய அரசியல் யாப்பில் அதிகாரப் பரவலாக்கம் என்ற அநுரவின் சொல்லாடல்களையும் இந்தியா மெருகூட்டிப் பார்க்கிறது. நம்புகிறது.

இலங்கை அரசு கூறுகின்ற அத்தனை விடயங்களையும் சர்வதேச அரசுகள் நிச்சயமாகச் செய்யக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம். அதனையே கடந்த 16 வருடங்களில் செய்துமிருக்கின்றன.

இவை, 2009 மே மாதத்துக்குப் பின்னரான 16 வருடங்களில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் நேரடியாகக் கண்டு வரும் அனுபவங்கள். ஆனால் பட்டறிவு இதுவரை ஏற்படவில்லை.

அதேநேரம் ரணில் - மகிந்த அணியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கம் தற்போதைக்கு அமெரிக்க - இந்திய அரசுகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை..

# ஈரானில் ஆட்சி மாற்றம்?



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# அமெரிக்க இராணுவ தலையீடு: முரண்பட்ட உறவில் அரபுலகு

**(1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது)**

**ஹர்முஸ்** நீரிணை முதல் காஸ்பியன் கடல் வரை பரந்து விரிந்திருக்கும் ஈரானின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிலப்பரப்பு. உலக வல்லரசுகள் ஒவ்வொன்றும் தங்களுக்குச் சாதகமான ஒரு அரசை அங்கு உருவாக்க வரலாற்று ரீதியில் முனைந்துள்ளன.

1979 இல் தொடங்கிய கொமேனியின் ஆன்மீக ஆட்சிமுறை இன்று அதன் இறுதி மூச்சுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் உள்ளது. 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஈரானிய மக்களின் விதியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு மற்றும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை அடுத்த சில தசாப்தங்களுக்கு மாற்றி எழுதப் போகும் சூழல் உருவாகியுள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்று பெயரிடப்பட்டிருக்கும் ஈரான், இன்று அதன் 47 ஆண்டுகால குடியரசு வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு ஆட்சி கவிழும் போராட்டத்தை எதிர் கொண்டுள்ளது. ஈரானில் தற்போது நிலவி வரும் கடுமையான உள்நாட்டுக் கலவரங்களை ஒடுக்க, அந்நாட்டு அரசு இணைய சேவையை முழுமையாக முடக்கியுள்ளது. ஈரானில் இராணுவ ஆட்சி, அமெரிக்க பொம்மையாட்சி, ஜனநாயக ஆட்சி ஆகிய மூன்று முடிவுகளில் எதுவும் சாத்தியமாகலாம் என்ற நிலையில் தான் உள்ளது. ஈரானில் பொருளாதாரச் சரிவு மற்றும் உணவுப் பொருட்களின்



விண்ணைத் தொடும் விலை உயர்வுக்கு எதிராக 2025 டிசம்பர் 28 அன்று தொடங்கிய மக்கள் கொந்தளிப்பு, 'ஜனவரி புரட்சி' அல்லது '14 நாள் எழுச்சி" என்ற பெயரில் ஒரு முழுமையான அரசியல் மாற்றத்திற்கான போராட்டமாக தற்போது பரிணமித்திருக்கிறது.

## '14 நாள் எழுச்சி" தொடருமா?

190 க்கும் மேற்பட்ட நகரங்களில் பரவியுள்ள இந்தப் போராட்டங்கள், வெறும் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமல்ல என்பதும், அவை 1979 இல் உருவான விலாயதுல் ஃபகீஹ் ஆன்மீக அதிகார அமைப்பை வேரோடு பிடுங்கி எறியும் தருணம் என்றும் மத்திய கிழக்கு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தற்போது ஈரானின் 31 மாகாணங்களும் போராட்டக் களங்களாக மாறியுள்ளன. மனித உரிமைகள் அமைப்பான (HRANA) வின் தரவுகளின்படி, கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 3500 இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 10,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும், நாட்டின் முக்கிய மருத்துவமனைகளிலிருந்து கசிந்துள்ள தகவல்கள் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 4000 ஐத் தாண்டியிருக்கக் கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆனாலும் ஆட்சியைத் தக்கவைக்க ஈரான் அரசாங்கம் தற்போது ஒரு வீதம் என்ற மிகக் குறைந்த அளவிலான இணையத் தொடர்பை மட்டுமே அனுமதித்து, ஒட்டுமொத்த நாட்டையும் ஒரு இணைய இருட்டறையில் வைத்துள்ளது. ஆனால் இந்த அடக்கு முறையையும் மீறி பாதுகாப்புப் படையினரிடையே ஏற்பட்டுள்ள சோர்வும், சில இடங்களில் வீரர்கள் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்து பின்வாங்குவதும், ஆட்சியின் அஸ்திவாரம் வெகுவாகப் பலவீனமடைந்துள்ளதைக் காட்டுகிறது.

இந்த 2026 ஆம் ஆண்டு மக்கள் புரட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமென அரசியல் ஆய்வாளர்கள் கருதுவதற்கான மிக முக்கிய காரணமாக அதன் புவிசார் அரசியல் சூழல் பார்க்கப்படுகிறது.

## 2025 ஜூனில் இஸ்ரேலின் 12 நாள் போர்:

கடந்த 2025 ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களால் ஈரானின் அணுசக்தி தளங்கள் மற்றும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் பெருமளவில் சிதைக்கப்பட்டன. இது ஈரானின் பிராந்திய செல்வாக்கை பாரிய அளவில் முடக்கியுள்ளது. குறிப்பாக, ஈரானின் நீண்டகாலத் தூண்களாக இருந்த ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் மிகவுமே பலவீனமடைந்துள்ள நிலையில், சிரியாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், ஈரானின் எதிர்ப்பின் வீரியம் மிகவுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதே யதார்த்த நிலையாகும்.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது ஈரான் இன்று மிகவும் பலவீனமான ஒரு நிலையிலேயே காணப்படுகிறது. 2026 ஜனவரி தொடக்கத்தில், ஈரானின் முக்கிய பொருளாதாரக் கூட்டணியான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ அமெரிக்காவால் சிறைபிடிக்கப்பட்டதும், ஈரானின் நிழல் கப்பற்படையின் எண்ணெய் விநியோக நடவடிக்கைகள் முடக்கப்பட்டதும் நாட்டின் வருமானத்தைக் கிட்டத்தட்ட அடியோடு நிறுத்தியுள்ளது எனலாம்.

ஈரானிய ரியால் நாணயம் படுபயங்கரமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வங்கிப் பணப் பரிமாற்றங்களும் முடங்கியுள்ளதால், நடுத்தர வர்க்கம் முதல் பெரிய வணிகர்கள் வரை அனைவரும் இன்று வீதிக்கு வந்துள்ளனர். வரலாற்றில் ஓர் ஆட்சி கவிழ்வதற்குத் தேவையான அனைத்துக் காரணிகளும் ஒரே புள்ளியில் இணைந்துள்ள ஒரு நிலையாகவே இந்நிலை காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## டிரம்ப் கடுமையான எச்சரிக்கை:

மறுபக்கத்தில் டொனால்ட் டிரம்ப்பின் கடுமையான எச்சரிக்கைகள் ஈரானிய இராணுவத்திற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன. போராட்டக்காரர்கள் மீது கடும் வன்முறையைப் பிரயோகித்தால், ஈரானின் முக்கிய மையங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதே வேளையில், ஈரானின் ஆன்மீக தலைவர் அயதுல்லா அலி கொமேனி நிலைமை மோசமானால் ரஷ்யாவிற்குத் தப்பிச் செல்ல ஒரு ரகசியத் திட்டத்தைத் தயாரித்துள்ளதாகவும் சில உளவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவும் தற்போது தனது சொந்தப் பிரச்சனைகளில் உள்ளது. ஈரானுக்கு இந்தத் தடவை வெளிநாடுகளிலிருந்து எந்தப் பெரிய உதவியும் கிடைப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.




ஈரானின் தற்போதைய நிலையானது இன்றோ நாளையோ வெடிக்கக் காத்திருக்கும் ஓர் எரிமலையை ஒத்திருக்கிறது. பழைய மதவாத ஆட்சிக்கு இனி எதிர்காலம் இல்லை. எதிர் காலத்தில் ஒரு புதிய ஈரானிய அரசு உருவாக வாய்ப்பு உள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சு, ஈரானியப் போராட்டக்காரர்களின் அடுத்தகட்ட நகர்வுகள், ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் புவிசார் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைக்கப் போகின்றனவா என்ற கேள்வி இப்போது சர்வதேச அரசியல் வட்டாரத்தில் முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது.

## புதிய உலக ஒழுங்கின் மாற்றம்?

ஈரான் என்பது வெறும் உள்நாட்டு அரசியல் கொந்தளிப்பால் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு போராட்டக் களம் மாத்திரமல்ல. அது 21ம் நூற்றாண்டின் புதிய உலக ஒழுங்கைத் தீர்மானிக்கப் போகும் ஒரு புவிசார் அரசியல் காய்நகர்த்தல் இடம்பெறும் ஒரு சதுரங்கப் பலகை என்று சொல்வதே பொருத்தம். ஒருபுறம், ஈரானின் எதிர்ப்பின் அச்சு முழுமையாக சிதைந்து போயிருப்பது இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கத்திற்கு வழி வகுத்துள்ள நிலையில், மறுபுறம் சீனாவின் எரிசக்தி பாதுகாப்பும் ரஷ்யாவின் மத்திய ஆசிய செல்வாக்கும் ஈரானின் நிலைத் தன்மையிலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

## ஈரானும் அரபு நாடுகளும்:

ஈரானை தாக்குவதற்காக அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் உங்களது இராணுவ தளங்களை வழங்குவதனை தவிர்க்குமாறு ஈரான் தனது அருகில் உள்ள அரபு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஈரானின் இந்த வேண்டுகோளினை அரபு ஐக்கிய எமிரேட்சை தவிர ஏனைய அனைத்து அரபு நாடுகளும் ஏற்றுக் கொண்டதுடன், ஈரானை தாக்குவதற்கு தங்களது நாட்டு தளங்களை பாவிக்கக் கூடாதென்று அமெரிக்காவினை வேண்டியதாக அறிய முடிகின்றது.

ஆனால் இது புவி அரசியல் என்பதனால், இதற்குள் ஏதாவது மறைமுக இரகசியங்கள் உள்ளதா என்பது பற்றி நாட்கள் சென்ற பின்புதான் அறியமுடியும். அதாவது தங்களது தளங்களை பாவிக்க கூடாதென்று வெளிப்படையாக அறிவித்துவிட்டு மறைமுகமாக அமெரிக்காவுக்கு ஏதாவது ஆதரவு வழங்கப்படுமா என்பது பற்றி இப்போது கூற முடியாது.

## சவுதி அரேபியாவின் முடிவு:

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், சவுதி அரேபியா மிக முக்கியமான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா ராணுவத் தாக்குதல் நடத்த தனது வான் பரப்பையோ (Airspace) அல்லது தனது நாட்டில் உள்ள ராணுவத் தளங்களையோ அமெரிக்கா பயன்படுத்த சவுதி அரேபியா அனுமதி அளிக்காது என்று அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

அமைதி முயற்சிகளை மேற்கொள்ளவும், இந்த பிராந்தியத்தில் போர்ச் சூழல் உருவாவதைத் தவிர்க்கவும், பதற்றத்தைக் குறைக்கவும் சவுதி அரேபியா இந்த முடிவை எடுத்துள்ளது என்று கூறியுள்ளது.

நீண்ட காலமாக ஈரானுடன் நல்லுறவு இல்லாமல் இருக்கும் நிலையில், ஈரான் மீதான எந்தவொரு ராணுவ நடவடிக்கையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள சவுதி விரும்பவில்லை. தூதரக ரீதியான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் சவுதி அரசு உறுதியாக உள்ளது.

மத்திய கிழக்கில் தனது நாட்டின் பாதுகாப்பையும் நிலைத் தன்மையையும் உறுதி செய்ய சவுதி இந்தத் தீர்க்கமான முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. சவுதி அரேபியா, ஓமன் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று வெள்ளை மாளிகையை ரகசியமாக வலியுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை முக்கிய அரபு ஊடகமான 'அல் அரேபயா நியூஸ்' சவுதி அரேபியா தனது இறையாண்மையைப் பாதுகாக்கவும், பிராந்திய அமைதிக்காகவும் அமெரிக்காவிற்கு வான்பரப்பு அனுமதியை மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத் தளங்களின் பயன்பாடு குறித்து நிலவும் கட்டுப்பாடுகளை இந்தச் செய்திகள் விளக்குகின்றன.

மேலும் ஈரானிய புரட்சி படைகளின் தளபதி, 'எதிரிகள் செய்யும் கணக்குகளில் எந்த தவறுக்கும் தீர்மானமாக பதிலளிக்க நமது படைகள் தயாராக உள்ளன.

டிரம்ப் மற்றும் நெதன்யாகு ஆகியோர் நமது இளைஞர்கள் மற்றும் நமது பாதுகாப்பு படைகளின் கொலையாளிகள். அவர்களின் குற்றங்களுக்கு நாம் சரியான நேரத்தில் பதிலளிப்போம்' என்று சூளுரைத்துள்ளார்.






- பவித்திரா ராகவன்

# விடை தெரியாத கேள்விகள்

**கைகளிலே** தூக்க மாத்திரைகளை எடுத்து எண்ணிக்கொண்டே ஜன்னலின் வெளியே பார்க்கிறேன். பசுமையாய் காட்சியளிக்கும் மரங்களும், பூக்களும், சிறகடிக்கும் பறவைகளும் எனக்கு எவ்வித உற்சாகத்தையும் தரவில்லை.

சொல்லப் போனால், இதே இடத்தில் நின்றவாறு மணிக்கணக்காய் அவற்றை பார்த்து ரசிப்பதையே ஒரு வாடிக்கையாக வைத்திருந்தவன் நான். கண்கள் இயற்கையை ரசிக்க, காதுகள் அவள் குரலைக் கேட்க, மனமோ அவள் எனக்காக இங்கே வரும் நாளுக்காய் ஏங்க.. என் இரவுகளிலும் நினைவுகளிலும் ஏகாந்தமான இனிமைகள் அளவற்று நிறைந்திருந்தன.

எந்தக் காட்சிகள் எனக்கு இனிமையை ஆண்டாண்டுகளாக அளித்தனவோ அவை இன்று வெறுமையாக தெரிகின்றன.

தூரத்தில் அங்கே அழகிய கறுப்பு நிற பூனையொன்று மரக்கிளையிலே சிக்கியிருந்த சிறியதோர் பந்தை எடுக்க நெடுநேரமாய் முயற்சித்துக் கொண்டிருந்தது. பாய்வதும், கிளையைப் பிடித்து இழுப்பதுமென தன்னால் முடிந்தவரை முயன்று கொண்டுதான் இருந்தது.

இருப்பினும், ஏதும் பயனளிக்கவில்லை. சரி பூனையின் கதையை விடுவோம். என் கதைக்கு வருவோம். எத்தனையோ மனிதரைக் குணப்படுத்த மட்டுமே மாத்திரைகள் கொடுத்த என் கைகள் இன்று எனக்கு மாத்திரம் தூக்க மாத்திரைகளைக் கொடுத்தது ஏன்? மாற்ற முடியாத துக்கம் நிரந்தரத் தூக்கத்தால் மறைந்திடுமா?

“திவ்யா“ என் ஆருயிர் தோழி. அன்பான காதலி, அழகான மனைவி என எனக்கு அனைத்துமாய் இருந்தாள். நாங்கள் இருவருமே கொக்கட்டிச்சேலையைச் சேர்ந்தவர்கள்.

பாடுமீன் என்று அனைவராலும் அழைக்கப்படும் இலங்கையின் வளமிகு மாவட்டங்களில் ஒன்றான மட்டக்களப்பை அறியாதவர்கள் இருக்க முடியாது. பால்யப் பருவம் முதலே நாம் நல்ல நண்பர்கள். இரு வீட்டாரும் ஒருவருக்கொருவர்

நன்கு அறிமுகமானவர்கள். எங்கள் காதலுக்கு எதுவுமே தடையாக இருக்கவில்லை. இன்று நான் மெல்பேனில் ஒரு மனோதத்துவ மருத்துவனாக இருக்கிறேன் என்றால் அதற்கு ஆரம்பம் முதலே வித்திட்டவள் திவ்யா தான். எனக்குள் இருந்த திறமையை எனக்கே காட்டியவள்.

போர்க்காலங்களில் கல்வி கற்க முடியாமல் நான் சோர்ந்திருந்த போதெல்லாம் என்னைத் தட்டிக் கொடுத்தவள். கொழும்பு பல்கலைக்கழகத்தில் எனக்கு அனுமதி கிடைத்த போது எனக்கான வதிவிடம் முதற்கொண்டு அனைத்தையும் தானே ஒழுங்கு செய்தாள்.

விடுதியுணவு எனக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்து, கருவாட்டுக் குழம்பையும் பிட்டையும் இறால் வறுவலையும் தனது ஒன்றுவிட்ட அண்ணன் கொழும்பு வரும் போதெல்லாம் கட்டிக் கொடுத்து விடுவாள்.

என் தந்தை மறைவிற்குப் பின்னால் எனக்கு உறுதுணையாக இருந்து வந்தாள். அப்படிப்பட்டவளா இன்று இப்படி? எப்படி முடிந்தது அவளால்? அவளின் அறிவுரைப்படிதான் மேற்படிப்பிற்காய் அவுஸ்ரேலியா வந்தேன். வருவதற்கு முன்னர் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம். கொஞ்சம் உழைத்து பணம் சம்பாதித்த பின்னர் திருமணம் செய்வோம் என்று முடிவெடுத்திருந்தோம்.

நான் இங்கு வந்து ஐந்து வருடங்களாகின்றன. அடுத்த வருடம், உறவுகளை அழைத்து கோலாகலமாக திருமணம் செய்வதாய் உத்தேசம். அனைத்தும் சரியாகத்தானே போனது. பிறகு எப்படி இப்படி? அப்படி என்ன நடந்தது?

ஒரு மாதத்திற்கு முன்னர் அவளுடைய சட்டத்தரணியிடம் இருந்து எனக்கு விவாகரத்து அறிவிப்பு வந்திருந்தது. தன்னை வேண்டுமென்றே உறவறுத்து விட்டதாகக்கூறி விவாகரத்து கோரியிருந்தாள். அதில் சொல்லப்பட்ட விடயங்கள் அனைத்துமே உண்மைக்குப் புறம்பானவை. சென்ற வருடம் கூட அவளது பிறந்தநாளை அண்மித்து இலங்கை சென்றிருந்தேன்.

அப்போது கூட எவ்வித வெறுப்பையும் அவள் காட்டவில்லை. ஆனாலும் முன்பைப்போல் பெரிய உற்சாகம் இருக்கவில்லை. ஆனால் எனக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. எதையுமே பெரிதாகக் காட்டிக் கொள்ளாதவள் திவ்யா. ஆடம்பரத்தை விரும்பாதவள். மற்றவர்களுக்காகப் போலி வாழ்க்கை வாழாதவள். பணத்தை விட மனதிற்கு மதிப்பளிப்பவள். பொருளாதாரப் பட்டதாரியான அவளுக்கு எத்தனையோ கம்பனிகளில் வாய்ப்புக் கிடைத்தும் படித்த பாடசாலையிலேயே ஆசிரியையாகப் பணிபுரிந்து வருகிறாள். ஆசிரியராவதே தனது இலட்சியம் என சிறுயதிலிருந்தே தீர்மானமாக இருந்தாள். அவளின் பிரிவை விட பிரிவிற்கான காரணம் யாதென அறியாது மிகவும் குழப்பத்தில் இருக்கிறேன்.



எத்தனையோ தடவைகள் அவளைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றும் அவளுடன் பேச முடியவில்லை. உற்றாரும் உறவினரும் பல கதைளை ஒப்புவித்தார்கள். இருப்பினும் அவை எவற்றையுமே மனம் ஏற்கவில்லை.

சொல்லப் போனால் அம்மா எனக்கு அடுத்த வரன் பார்க்கவே தொடங்கி விட்டார். திவ்யாவுடனான எனது வாழ்க்கைப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கும் முன்னரே முன்னுரையுடன் அது கிழிக்கப்பட்டு விட்டது. என்றேனும் ஒருநாள் இதனைச் சரி செய்து விடலாம், இன்னும் ஒரு வாரத்தில் எனது மேற்படிப்பு முடிந்துவிடும், நேரில் சென்று அவளுடன் கதைத்து நல்ல முடிவொன்றை எடுக்கலாம். சொல்லப் போனால் அடுத்த வாரம் எனக்கு ஆறு நாட்கள் விடுமுறை. அதன் போது இலங்கை சென்று கூட இதனைத் தீர்க்கலாம் என்று இன்று வரை நம்பியிருந்தேன்.

ஆனால் இன்று எதேச்சையாக திவ்யாவின் தோழியை சந்தித்திருந்தேன். கடந்தமாதம் தான் திருமணமாகி அவுஸ்ரேலியா வந்திருந்தாள். இயல்பாக ஆரம்பித்த எமது சந்திப்பு, பெரும் பூகம்பத்தையே ஏற்படுத்தி விட்டது.

உற்றாரும் உறவினரும் எமது பதிவுத் திருமணத்திற்குப் பின்னர் திவ்யாவில் ஏற்பட்ட மாற்றம் பற்றி ஒப்புவித்தது உண்மையென அறிந்து கொண்டேன். திவ்யா எக்காரணத்தைக் கொண்டும் தனது முடிவிலிருந்து மாறப் போவதில்லை என்பதை அவள் தோழி ஆணித்தரமாகக் கூறியிருந்தாள்.

இதுதான் எனது நிலை குலைவிற்கான காரணம். இருப்பினும் திவ்யாவின் இந்த உறுதியான முடிவிற்கான காரணத்தை நானும் அத்தோழியிடம் கேட்கவில்லை. அவளும் கூறவில்லை. ஒருவேளை, எனக்கு முன்னரே தெரிந்திருக்கும் என எண்ணியிருந்தாள் போலும்.

இறுதியாக ஒருமுறை திவ்யாவுடன் கதைத்தால் என்ன? வழமைக்கு மாறாக இன்று அவள் எனது கையடக்கத் தொலைபேசியை எடுக்கலாம் அல்லவா? பல நிமிட சிந்தனையின் பின் ஐந்து முறை முயன்றேன். ஆம் உண்மைதான். இன்று நான் அதிஷ்டம் செய்தவன்.



ஐந்தாவது முறை....

"ஹலோ......!"

"ஹலோ திவ்யா! , நான் சுகுமார் கதைக்கிறேன்."

"தெரியும்.... சொல்லுங்கோ."

"நாங்க கொஞ்சம் அவசரப்படாமல் முடிவெடுக்கலாம் என நினைக்கிறன். நாங்க நேரில் சந்தித்து இதைப் பற்றி பேசலாம் என நினைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?"

"இனிக் கதைக்க ஒன்றுமில்லை.... எதுவும் மாறப் போவதில்லை."

"திவ்யா! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளு.... என்ன காரணம் என்றாவது சொல்லு...!"

"சுகுமார்! இது நான் எனக்காக எடுத்த முடிவு. என்னை வற்புறுத்தாதையுங்கோ.... முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும்."

"திவ்யா...!!..." எனத் தொடரும் முன்னமே தொடர்பைத் துண்டித்தாள்.

எதற்காக திவ்யா இந்த இந்த முடிவினை எடுத்தாள்? என்ற கேள்வி சுகுமாரை நச்சரிக்கத் தொடங்கியது. திவ்யா எனக்கு எப்படி இப்படிச் செய்யலாம்? அவள் என்னை எப்படி மறக்கலாம்? எங்கள் உறவை எப்படிக் துறக்கலாம்? நான் என்ன பிழை இழைத்தேன்? திவ்யாவின் மன மாற்றத்திற்கான காரணம் என்ன? என ஓராயிரம் கேள்விகள் அவன் மனத்திற்குள். விடையில்லா வினாக்கள் தொடர்ந்தன. இதற்கான பதில்கள் கிடைக்காவிடில்?

இதற்கிடையில்... கையிலிருக்கும் தூக்க மாத்திரைகள் என்னைக் கேலி செய்தன. முதலில் எனது முடிவென்ன? என மாத்திரைகள் என்னைக் கேட்க, தண்ணீர் எடுக்க யன்னலருகே சென்றேன். தூரத்தில் பந்திற்காகப் பல மணிநேரம் போராடிய பூனை ஒருவாறாகப் பந்தைப் பற்றிக் கொண்டதைப் பார்த்தபோது எனக்கு மனதில் சுள் என்றது.

ஐந்தறிவு பூனை கூட தன் முயற்சியை தளராது தொடர்ந்து செய்து வெற்றியும் பெற்றது. மனிதர்கள் நாங்களே ஒவ்வொரு சின்னத் தோல்விகளுக்கும் பெரிய முடிவுகளை எடுத்து விடுகிறோம். அதுவும் நான் வைத்தியன். மனோதத்துவ வைத்தியன். ஓராயிரம் நோயாளிகளுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறேன். எனக்கொரு பிரச்சினை என்றதும் என் அறிவு எங்கே போனது? மாத்திரைகளைத் தூக்கிப் போட்டேன்.

சிந்தித்து விட்டு விவாகரத்து அறிவித்தலில் கையொப்பமிட்டேன். இதற்கு மேலும் எதுவும் மாறப் போவதில்லை என்பதை நன்கு உணர்ந்து விட்டேன். சேர்ந்து வாழ்வதற்கோ பிரிந்து செல்வதற்கோ காரணம் எதுவும் கட்டாயம் தேவையில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். சேரப் போவதில்லை என்று முடிவான பின்னர் பிரிவதற்கான காரணங்களை தேடிப் பயனில்லை.

இருவரில் ஒருவருக்கு விருப்பமில்லையெனில் வற்புறுத்தி வாழ முடியாது. அதற்காக எமது வாழ்க்கையும் நின்று போவதில்லை. என்னைப் பொறுத்தவரை "திவ்யா" எனக்கு நல்லதொரு தோழி. நான் இந்த நிலைக்கு வர ஏதுவாக இருந்தவள். இன்று அவளது முடிவினை நான் மதிக்கிறேன்.

அதற்கான காரணத்தை இனி நான் தேடப் போவதில்லை, என் பயணமும் நிற்கப் போவதில்லை. எனக்குள் ஏற்பட்ட திடீர் மாற்றம். இது ஆனால் நல்லதொரு மாற்றம்.



# ஏகாதிபத்திய ரவுடித்தனம்

## கே.பாலா

**இரண்டாம்** உலகப் போருக்குப் பிறகு கட்ட மைக்கப்பட்ட சர்வதேச விதிமுறைகளும், நாடுக-ளின் இறையாண்மையும் இன்று கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

அமெரிக்கா கிரீன்லாந்தைக் கைப்பற்ற முயல்வது வெறும் பூகோள அரசியல் பிரச்சனை அல்ல. அது ஏகாதிபத்தியத்தின் அடிப்படை இயல்பை அம்ப லப்படுத்தும் நிகழ்வாகும்.

'கிரீன்லாந்து விற்பனைக்கு அல்ல' என்று டென்மார்க்கும், அந்த நாட்டு மக்களும் தெளி வாகக் கூறிய பிறகும், அவர்கள் மீது பொருளா தார வரிகளை விதிப்போம் என மிரட்டுவது அப்பட்டமான ரவுடித்தனமாகும். ட்ரம்ப் தன் ஆக்கிரமிப்பு எண்ணங்களுக்கு நியாயம் கற்பிக்க, சீனா மற்றும் ரஷ்யாவைக் காட்டி ஐரோப்பிய நாடு களை அச்சுறுத்துவது ஒரு பழைய தந்திரம்.

வியட்நாமில் கம்யூனிச அச்சுறுத்தல், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள், ஆப்கானிஸ்தானில் பயங் கரவாதம் இவையெல்லாம் ஆக்கிர மிப்புக்கான சாக்குப் போக்குகளாகவே அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டன.

ஆர்க்டிக் பிராந்தியத்தின் கனிம வளங்களையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல் பாதைகளை யும் தன் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவே அமெரிக்கா துடிக்கிறது. காலனியாதிக்க காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் ஆபிரிக்காவையும் ஆசியா வையும் கொள்ளையடித்தது போல், இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் வளங்கள் நிறைந்த பிராந்தியங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் துடிக்கிறது.

பலப்பிரயோகம் அல்லது அச்சுறுத்தல் மூலம் பிரதேசத்தைக் கைப்பற்றுதல் சர்வதேச சட்டத்திற்கு முரணானது. ஐ.நா. சாசனமும் இதைத் தடை செய்கிறது. ஆனால், அமெரிக்கா இந்த விதி களை காலில் போட்டு மிதிக்கிறது. வெனிசுவெலா கப்பல்களைக் கடத்துதல், நிகரகுவாவில் தலையீடு, இப்போது கிரீன்லாந்து இவையெல்லாம் ஒரே வடிவத்தின் வெளிப்பாடுகள்.

கிரீன்லாந்தில் கனிம சுரண்டல் நடந்தால், அதன் விளைவுகள் உலகளாவியதாக இருக்கும். கிரீன்லாந்தின் பனிப்படலம் முழுவதும் உருகினால், உலகக் கடல் மட்டம் சுமார் 7 மீட்டர் (23 அடி) வரை உயரக்கூடும்.

இலண்டன், நியூயார்க், ஷாங்காய் போன்ற




உலகப் புகழ் பெற்ற நகரங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும். குறிப்பாக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தையும் இது நேரடியாகத் தாக்கும். கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவார்கள். மூலதனம் இயற்கையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இலாபம் மட்டுமே அதன் இலட்சியம்.

வலிமை உள்ளவர்கள் தங்கள் விருப்பத்தைத் திணிப்பதை எதிர்க்கும் சக்திகள் ஒன்றுபட வேண்டிய தருணம் இது. ஏகாதிபத்தியம் தானாகக் கட்டுப்படுவதில்லை, அது கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

கிரீன்லாந்து இன்று போராடுகிறது, நாளை வேறொரு நாடு இதே நிலைக்குத் தள்ளப்படலாம். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகளாவிய எதிர்ப்பு இப்போதே உருவாக வேண்டும். விதிகளற்ற உலகம் அல்ல, சமத்துவமும் நீதியும் நிலவும் உலகமே நமக்குத் தேவை.

# அமெரிக்க அதிபரின் ‘டூம்ஸ்டே விமானம்’



நவீனன்

# பேரழிவுகளை தடுக்கும் பறக்கும் அணு உலை

(டூம்ஸ்டே விமானம் வானில் பறக்கும் ஒவ்வொரு முறையும், உலக அமைதி எவ்வளவு நுணுக்கமான நிலையில் உள்ளது என்பதை பலருக்கும் நினைவூட்டுகிறது. இது ஒரு சாதாரண விமானம் அல்ல. அமெரிக்க அரசின் மிக மோசமான அவசர சூழ்நிலைகளிலும் நிர்வாகம் மற்றும் இராணுவ கட்டளைத் தொடர் தடைப்படாமல் செயற்படுவதற்காக உருவாக்கப்பட்ட பறக்கும் கட்டளை மையம் ஆகும்.)

**அமெரிக்க** அதிபரின் அவசர கால பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் ‘டூம்ஸ்டே விமானம்’ (Doomsday-Plane) பொது வான்பாதையில் அண்மையில் பறந்தது. இந்த விமானம் இப்படி பறந்த நிகழ்வு உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்துள்ளது. சாதாரண நேரங்களில் அரிதாகவே காணப்படும் இந்த விமானத்தின் இயக்கம், மக்களிடையே பல கேள்விகளையும், ஒரு விதமான அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.



டூம்ஸ்டே விமானம் வானில் பறக்கும் ஒவ்வொரு முறையும், உலக அமைதி எவ்வளவு நுணுக்கமான நிலையில் உள்ளது என்பதை பலருக்கும் நினைவூட்டுகிறது.

இது ஒரு சாதாரண விமானம் அல்ல. அமெரிக்க அரசின் மிக மோசமான அவசர சூழ்நிலைகளிலும் நிர்வாகம் மற்றும் இராணுவ கட்டளைத் தொடர் தடைப்படாமல் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட பறக்கும் கட்டளை மையம் ஆகும். இது திடீரென வானில் தோன்றியது ஏன் என்ற பதற்றம் ஏற்பட்டது.

## 51 ஆண்டில் முதல் முறையாக:

கடந்த 51 ஆண்டுகால வரலாற்றில் முதற் தடவையாக, கடந்த வாரத்தில் அமெரிக்க வான்வெளியில் டூம்ஸ்டே விமானத்தைக் கண்டதாக பலரும் தெரிவித்தனர். பதற்ற நிலையின் போது மட்டுமே இந்த விமானம் பறக்க விடப்படும் என்பதால், பொது மக்கள் அச்சமடைந்தனர். அந்த சமயத்தில் டூம்ஸ்டே விமானத்தை பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தான் பயன்படுத்தியதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

அமெரிக்காவை தாக்க ஏதேனும் அணு ஆயுதம் அல்லது கதிர்வீச்சுகள் வரும் நிலையில் அனைத்தையும் இந்த விமானத்தால் தடுக்க இயலும். அமெரிக்காவில் நான்கு டூம்ஸ்டே விமானங்கள் உள்ளன. பனிப்போரில் இந்த விமானங்கள் 'தேசிய வான்வழி செயல்பாட்டு மையமாக' செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இவை இப்போது அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் மற்றும் பிற முக்கிய ஊழியர்கள் உலகம் முழுவதும் பாதுகாப்பாக பறக்க பயன்படுகிறது.

அமெரிக்காவில் உலகளவிலான பதற்ற நிலை அல்லது போர்ப் பதற்றம் ஏற்படும்போது மட்டுமே அமெரிக்க அதிபரின் ரகசிய விமானங்களில் ஒன்றான டூம்ஸ்டே விமானம் (Boeing E-4B Nightwatch) போயிங் இ-4பி நைட்வாட்ச் பறக்கவிடப்படும். இந்த விமானத்துக்குள் இருந்தவாறே அரசை இயக்கும் அளவுக்கு வசதிகள் இருக்கும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க ராணுவத்தில் இடம்பெற்றுள்ள டூம்ஸ்டே, மிகவும் இரகசியமான ஒரு போர் விமானம் ஆகும். தரையில் பாதுகாப்பு இல்லை என்ற நிலை வரும்போது, அதிபரும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் இந்த விமானத்தைப் பயன்படுத்திக் கொள்வர்.

இந்த விமானத்தில் பாதுகாப்பான தகவல் தொடர்பு அமைப்புகள், அறைகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. விமானத்தில் இருந்தவாறு ராணுவ கட்டளைகள் மட்டுமின்றி, அணு ஆயுதத் தாக்குதல் உத்தரவைக் கூட பிறப்பிக்க முடியும் என்று கூறப்படுகிறது.



## பறக்கும் அணு உலை:

இது ஒரு பறக்கும் அணு உலை என்றும் கூறப்படுகிறது. டூம்ஸ்டே விமானங்கள் அணுசக்தி தாக்குதல் போன்ற பேரழிவு ஏற்பட்டால், அரசாங்கத்தை இயக்கவும், நடமாடும் கட்டளை மையங்களாக செயல்படவும் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்த விமானங்கள் மிகவும் உயர் தொழில்நுட்பம் கொண்டவை. மேலும் அவர்களின் முக்கிய வேலை இராணுவ நடவடிக்கைகளுக்கான தகவல் தொடர்புகளை வைத்திருப்பது ஆகும்.

நாற்பது ஆண்டுகளாக செயல்பாட்டில் இருக்கும் இந்த டூம்ஸ்டே விமானங்கள் ஒரு உயர் ரகசிய ராணுவ திட்டமாகும். பேரழிவை எதிர்க்ககூடிய சக்தி அணு குண்டுவெடிப்பைச் சமாளிக்க உதவும் விமானங்களின் "கவசம்" போல இது செயல்படும். இந்த விமானத்தின் முக்கிய திறன்கள், பாதுகாப்பான, குறியாக்கம் செய்யப்பட்ட தகவல் தொடர்பு அமைப்புகள் வானிலிருந்தே இராணுவத்திற்கு உத்தரவிடும் திறன், அணு ஆயுத தாக்குதல் தொடர்பான கட்டளைகள் வழங்கும் வசதி,அதிபர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளுக்கான பாதுகாப்பான அறைகள், நடுவானிலேயே எரிபொருள் நிரப்பும் வசதிகளுடன், பல நாட்கள் தொடர்ந்து பறக்க முடியும்.

இந்த விமானம், குறிப்பாக அமெரிக்க அதிபரின் உயிர் பாதுகாப்பையும், அதே நேரத்தில் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் உறுதி செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஆஸ்டிராய்டு போன்ற சிறு வானவியல் கற்களை எதிர்க்கும் திறன் கூட இந்த விமானத்திற்கு உள்ளது. அணு ஆயுத






தாக்கம் நடக்க வாய்ப்பில்லை என்றாலும், அது எவ்வளவு சாத்தியம் என்றாலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் வான்படை தயாராக இருக்க விரும்புகிறது. அதனால்தான் டூம்ஸ்டே விமானங்களை ஒரு சிறுகோள் தாக்கியாலும் வீழ்த்த முடியாத அளவுக்கு வலிமையானது.

## 2001 நியூயோர்க் தாக்குதல் :

2001 ஆம் ஆண்டு உலக வர்த்தக மையத்தின் மீது தாக்குதல்கள் நடந்த நாளில் வெள்ளை மாளிகையின் மீது E-4B நைட்வாட்ச் பறந்து கொண்டிருந்ததாக செய்திகள் வந்தன. E-4B நைட்வாட்ச் மிகவும் கடினமாக உழைக்கும் திறன் கொண்டது. அத்துடன் இந்த பிரமாண்டமான விமானங்களை இயக்கும் பணியாளர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

## அமெரிக்க அதிபரின் ரகசிய விமானம்:

பழைய டூம்ஸ்டே விமானங்கள் உண்மையில் மாற்றி அமைக்கப்பட்ட போயிங் விமானங்கள் ஆகும். அவை முதன்மையாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப் பட்டுள்ளன. தற்போதைய டூம்ஸ்டே உண்மையில் E-4 நைட்வாட்ச் என்று அழைக்கப்படுகிறது. 1985 இல் பறந்த முதல் விமானமே முதல் டூம்ஸ்டே விமானமாகும்.

அதிநவீன தொழில்நுட்பம் விமானத்தில் இயங்குவதுடன், உலகம் எங்கும் அணுகுண்டுகளை வெடிக்கச் செய்யக்கூடிய பாரிய கட்டுப்பாட்டு மையங்கள் உள்ளன. இந்த அடிப்படையில் விமானத்தில் இருந்து முழு நாட்டையும் கட்டுப்படுத்த முடியும். அணுசக்தி வெளிப்படுவதைத் தடுக்கக்கூடிய சிறப்புத் தொழில்நுட்பங்கள் இதில் உள்ளன. மேலும் இது கிட்டத்தட்ட ஒரு வாரம் தொடர்ந்து பறக்கக்கூடிய சக்தியும் இதற்கு உண்டு.

## மூலோபாய ஆயுதம் தாங்கிய விமானம்:

ஆயுதப் படைகளின் மூலோபாய முடிவின் மூலம் எதிரிக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் அனைத்தும் இந்த விமானத்தில் உள்ளன. விமானத்தில் தரையில் அணு ஏவுகணையை ஏவுவது அல்லது அமெரிக்க கடற்படையின் பாலிஸ்டிக் ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து பேரழிவு தரும் அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவுவது போன்ற செயல்களை கூட செய்ய முடியும்.

அத்துடன் அணு வெடிப்பால் ஏற்படும் மின்காந்த அலைகளால் கூட (Electromagnetic Pulse – EMP) இதன் அமைப்புகளை பாதிக்க முடியாது. தரை இனி பாதுகாப்பாக இல்லை என்ற நிலையை எதிர்பார்த்தே இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய போர் அல்லது அணு மோதல் போன்ற அதிகபட்ச அவசர நிலைகளின் அடையாளமாக இது கருதப்படுகிறது.

உண்மையில் இந்த விமானங்களைப் பற்றி வெளி உலகிற்கு தெரிந்த அனைத்து விஷயங்களும் அவற்றின் திறன்களில் ஒரு சிறிய பகுதியாக இருக்கலாம். இந்த விமானங்களின் சரியான இருப்பிடம் மிகச் சிலருக்கு மட்டுமே தெரியும். அவர்களில் யாரும் அதைப் பற்றி பேசவோ அல்லது அதை வெளிப்படுத்தவோ முடியாது என்பது இராணுவ இரகசியமாகும்.




எழுவதற்காக
ஓராயிரம் தடவைகள்
எத்தனிக்கிறோம்!
வீழ்ந்து கிடப்பதை
விரும்ப மாட்டோம்!

நிமிர வேண்டும் என்ற
உறுதியுடன் இருக்கிறோம்!!

இலக்கொன்றே குறியாக
பாதைகளை மாற்றி
பயணிக்கிறோம்!

ஒவ்வொரு விடியலிலும்
இதற்காகத்தான் போராடுகிறோம்!
இதோ! இன்னுமொரு தை பிறக்கிறது.

எங்களை வீழ்த்தவென
எத்தனை துர்சக்திகள்
இரவும் பகலும்
இடையறாது திட்டம் தீட்டுகின்றன?

இன அழிப்பின்
பகுதிநேர தொழில்களாக
புகுத்தப்பட்ட
போதைப்பொருட்கள்... விபசார விடுதிகள்
பாலியல் துன்புறுத்தல்கள்...
கொலைகள், கொள்ளைகள்
திட்டமிட்ட விபத்துகள்
அரசியலின் பெயரில் கழுத்தறுப்புகள்...
அடுக்கிக்கொண்டே போகலாம்...!

ஆயிரம் சக்திகள்
எமை அழிக்க ஒன்று திரண்டன.
இனியும் திரளும்.

எவர் வந்தாலென்ன?
மீட்பர் இல்லாத
மந்தைகள் நாங்கள்
ஓய்ந்து விடுவோமா...? - அதற்கு
ஒன்றுபட வேண்டாமா?




கற்ற வித்தைகள்
கடந்துவந்த
அனுபவங்கள்
பட்டறிவுகள், உள்ளுணர்வுகள்
ஆளுமைகளை
உருவாக்கிய
ஆளுமையின் வழிகாட்டல்!!

இனத்தைப் பற்றிய
இடையறா சிந்தனை
தமிழின் மூச்சு
நெஞ்சிலே விதைக்கப்பட்ட
மாவீரங்கள்....!!

அப்பப்பா....!!
எத்தனை விடயங்கள்
எம்மை முன்னோக்கி தள்ளும்?

விட்டுவிட முடியுமா
எங்கள் விடுதலையை?
வீரம் விளைந்த பூமியில்
வருடங்கள்
கடந்தாலும் - தணியுமோ
விடுதலை தாகம்?

உத்வேகத்துடன் வாருங்கள்!
உறுதியாய்
சொல்கிறேன் கேளுங்கள்!

பாதைகள் திறக்கும் - புதியதோர்
விடியல் பிறக்கும்!
தமிழன் வாழ்வில்
நிம்மதி பிறக்கும்!!

-பொழில்

# வணல்

**கொற்றவை** **அங்கம்: 39**



**நீண்ட** நாட்களின் பின்னர் வதனியைக் கண்டது ஆனந்தனின் மனதுக்கு ஆறுதலாக இருந்தது. அவனுக்கும் சாந்திக்கும் இடையில் ஏற்பட்டிருந்த மனக்கசப்புக்கூட -மனக்கசப்பு என்பதை விட மனவருத்தம் என்றுதான் சொல்ல வேண்டும் - காணாமற் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். முன்புபோல இயல்பாக, “அக்காவுக்கு தேத்தண்ணி போடுங்கோவன்“ என்று அவன் சொன்னதும் சாந்தி அவன் தன்னை மன்னித்து விட்டான் என்று அகமகிழ்ந்து விட்டாள்.

ஆனால், வதனியோ ஒரு வருத்தம் தரும் விசயத்தை சுமந்து வந்திருக்கிறா. தேவியக்கா தனது வேதனைகளையும் பயத்தையும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை என்று வதனி சொன்னது அவனுக்கு ஆச்சரியமாக இல்லை. அவதான் தற்துணிச்சலும் மனவுறுதியும் கொண்ட ஒரு பெண்புலி ஆச்சே?

ஆனந்தனும் அப்படித்தான். தனக்கு என்ன வந்தாலும் அதை சகித்துக் கொள்வான். வேறு யாராவது கஷ்டப்படுவதை அவ-னால் தாங்கிக் கொள்ள இயலாது.

வதனியின் பிள்ளைகள் வேறு தேவியக்காதான் தங்களுடைய அம்மா என்பதுபோல் அவ்வளவு அன்பாக இருக்கிறார்கள். அவர்களால் அவ படும் வேதனையை எப்படி பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

“அவங்கள் பிடிச்சு வைச்சிருந்த நேரம் ஊசி ஏதும் போட்டவங்களா..? உங்களுக்கு ஏதும் தெரியுமா?“ ஆனந்தன் விசாரித்தான்.

“நானும் கேட்டனான்... என்னையும் அவ இருந்த இடத்துக்கு கிட்டத்தான் அடைச்சு வைச்சிருந்தவங்கள். போராளியா இருந்தவையை வேறயா தனிய அடைச்சு வைச்சிருந்தவங்கள்.... தேவி அக்காவோடை வேற காயப்பட்ட அக்காவையும் இருந்தவை... அவைக்கு மருந்து கட்ட வந்த நேரமே ஊசி போட்டுட்டாங்கள் எண்டு சொன்னவா... தேவியக்கா எப்பிடியோ இழுத்தடிச்சு போடவிடாமல்தான் இருந்தவா...

பிறகு..., முகாமை விட்டு வெளியில வாறதுக்கு கொஞ்ச நாளைக்கு முதல் அவவுக்கு வயித்துக் காயம் சீழ் பிடிச்சிட்டுது எண்டு வேற எங்கையோ கொண்டு போனவங்கள். அங்கை வைச்சு ஊசி போட்டுட்டாங்களாம்....“

“அது இந்த ஊசிதான் எண்டு என்னெண்டு தெரியும்? வேதனையைக் குறைக்கிறதுக்கான ஊசியாகவும் இருக்கலாம் அல்லோ..? ஊசி போடுப்பட்ட மற்ற ஆக்கள் எங்கை இருக்கினம்? அவை சுகமா இருக்கினமோ...?“

வதனி வேதனையுடன் பெருமூச்சு விட்டார்.

“எங்கை...? எனக்குத் தெரிஞ்சு ரெண்டு மூன்று பேர் எப்பவோ போய்ச் சேர்ந்திட்டினம். மற்ற ஆக்கள் எங்கை எண்டு

எனக்குத் தெரியேல்லை. திருகோணமலை, மட்டக்களப்பு பிள்ளையளா இருக்க வேணும்...

அவைக்கு ஊசி போட்ட கொஞ்ச நாளைக்குப் பிறகு காய்ச்சலடிச்ச மாதிரி ஒருமாதிரி பலவீனமா ஒரு பத்து நாளைக்குக் கிட்ட இருந்தவை.... அதே மாதிரி தேவியக்காவும் ஏலாமக் கிடந்தது ஞாபகம் இருக்கு... எனக்கென்னவோ ரெண்டும் ஒண்டுதான் எண்டு படுகுது....“ வதனியின் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

இயலாமையுடன் கோபம் கொப்பளித்தது ஆனந்தனுக்கு. நேரடியான இன அழிப்பு செய்தார்கள். வெளி உலகிற்கு தெரியாமல் எங்கள் இனத்தை ஒட்டுமொத்தமாக கருவறுத்து மண்ணோடு மண்ணாக்குவதற்காக மறைமுகமாக என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள்? இன்னும் செய்துகொண்டு இருக்கிறார்கள்?

“நாங்கள் கட்டாயம் அக்காவைப் பாக்க வருவம். இப்ப எங்கை இருக்கிறா? தெல்லிப்பழையிலயா?... சரி! ஏன் திடீரெண்டு என்னைப் பார்க்க வேணும் எண்டு அக்கா சொன்னவா? ஏதும் முக்கியமான அலுவலோ...? உங்களுக்கு எதுகும் தெரியுமோ...?“

“இல்லை! முதற்கட்ட சிகிச்சை முடிஞ்சு வீட்டை வந்திட்டா. இப்ப வலி கொஞ்சம் குறைவா இருக்கு எண்டு சொல்லுறா.... ஆனா, இது நிரந்தரமில்லை.... எனக்கு அவ உங்களோடை என்ன கதைக்கப்போறா எண்டு ஒரு யூகம் இருக்கு.... ஆனா, வேண்டாம்.. அக்காவே சொல்லட்டன்.. என்ன..?“

பேச்சு நாட்டுநடப்பு பக்கம் திரும்பியது. வெண்ணிலா மும்முரமாக வேலை செய்வதை அறிந்து உண்மையாகவே சந்தோசப்பட்டா வதனி. அதிலும் வெண்ணிலா அவசர நேரங்களில் தானாகவே சரியான முடிவுகள் எடுத்த சம்பவங்களைக் கேட்டு இன்னும் சந்தோசப்பட்டா.

விதுரனின் விசயம் பூராவும் அறிந்ததும் சாந்தியை உரிமையுடன் கடிந்து கொண்டா அவ.

“உங்கடை வீட்டுக்காரன்ரை சுகத்தை மட்டும் பார்க்கேலுமோ...? என்ன சாந்தி இது..? ஒரு சின்னப் பெடியனின்ரை உயிர் மட்டுமில்லை... சமுதாயச் சீரழிவும் இல்லையோ..? சில சமயங்களில நீயும் சரி, காவேரியும் சரி கொஞ்சம் குழந்தைத்தனமா... நடக்கிறியள்... பாத்து பதனமா நடக்க வேண்டாமோ?“

வதனியிடம் திட்டு வாங்கியதும் சாந்தி கொஞ்சம் ஆறுதலடைந்து விட்டாள். வதனி விடைபெறும்போது...

“நீங்கள் வரும்போது மறக்காமல் வெண்ணிலாவையும் கூட்டி வாங்கோ... அக்கா சந்தோசப்படுவா...“ வலியுறுத்திச் சொல்லிவிட்டுத்தான் புறப்பட்டா.

வீட்டில் இருந்தாலும் ஆனந்தனால் சும்மா இருக்க முடியவில்லை. தர்மாவும் இல்லாததால் அவனே வேலையிடங்களுக்கு ஃபோன் பண்ணி முடியக்கூடியளவுக்கு வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்தான். அப்படியிருந்தும் நேரம் போகவே மாட்டேன் என்று அடம் பிடித்தது.

இரவு தர்மாவின் அழைப்பு வந்தது. தொலைபேசியில் வெளிப்படையாகப் பேச முடியாவிட்டாலும் அவனுக்குப் புரியும்படி விசயத்தை சொன்னார். தமக்குத் தெரிந்த தகவல்களை அங்கு முறைப்பாடாக எழுதிக் கொடுத்திருக்கிறார். அவர்களும் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

தர்மாவை போகச்சொல்லி விட்டார்களாம். கொழும்பில் வேறு சில வேலைகளை முடித்துக்கொண்டு இரண்டொரு நாட்களுக்கிடையில் திரும்பி வந்து விடுவதாகச் சொன்னார்.



“ஆர் கண்டது..? நான் உங்கை வரக்கிடையில ஆள் வெளியில வந்து உங்கை வந்தாலும் வந்திடும்...“ பகிடிபோல அவர் சொன்னாலும் அதன் பின்னால் உள்ள கேடுகெட்ட அரசியலின் நிதர்சனம் சுட்டது.

அந்த வாரத்திலேயே ஒருநாள் தேவியைப் பார்க்கப் புறப்பட்டுப் போனார்கள். சாந்திக்கு புனர்வாழ்வு முகாமில் தேவியுடன் பரிச்சயமில்லை. ஆனால், ஆஸ்பத்திரியில் வைத்து தேவியுடன் பேசிப் பழகியிருக்கிறாள். அதனாலோ என்னவோ போவதற்கு முதல்நாள் இரவு பரபரப்பாக இருந்தாள் அவள்.

“இதில தேவியக்காவுக்கும் பிள்ளையளுக்கும் பிடிச்ச பலகாரம் இருக்கு...“ என்று ஒரு பையை அவள் நீட்டியபோதுதான் முதல்நாள் இரவு அவள் அவற்றை சுட்டிருக்கிறாள் என்று தெரிந்தது.

தேவி சற்று மெலிந்திருந்தா. ஆனாலும், இடையிடை முகத்தை சிணுங்கியது அவ வேதனையில் அவதிப்படுவதைச் சொல்லியது. மற்றபடி அவவில் பெரிதாக எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

“பிரச்சனை கூடினால் இங்க டொக்டர் பார்த்து தானே மகரகமவுக்கு அனுப்புவம் எண்டு சொன்னவை. ஆனா, இப்ப பயப்படும்படியா இல்லை... எண்டு சொன்னவை“ மெல்லிய தொனியில் பேசினா தேவி.

சம்பிரதாய விசாரிப்புகளுக்குப் பிறகு தேவி விசயத்துக்கு வந்தா. பக்கத்தில் இருந்த மேசை லாச்சிக்குள் இருந்து தடிமனான ஒரு கொப்பியை எடுத்தா.

“இதில நான் எனக்குக் கிடைச்ச அனுபவங்களை எழுதி வைச்சிருக்கிறன். அதோடை... பெம்பிளையள், சமூகம், மாணவர்கள் எண்டு எல்லாரும் சந்திக்கிற பிரச்சனையளுக்கு என்ன தீர்வு காணலாம்,... இந்தப் பிரச்சனையளே வராம எப்பிடி நடந்து கொள்ளலாம் எண்டு எனக்கு மனசில பட்டதை எழுதியிருக்கிறன். இதில ஏதாவது நாட்டுக்கு பிரயோசனப்படலாம். அதுதான்.... நான் இதை உங்களட்டைத் தர ஆசைப்படுறன்...

நீங்களும் எவ்வளவோ நல்லது செய்யத் துடிக்கிறியள்... எங்கடை கைகள் கட்டிப் போடப்பட்டிருக்கு... உண்மைதான்... அதுக்காக நாங்கள் சும்மா இருக்க ஏலாதல்லோ..?“



ஆனந்தன் எதுவும் பேசவில்லை. மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான். முடங்கிப் போயிருக்கும் அத்தனை போரா ளிகளினதும் குரலாக இருந்தது தேவியின் பேச்சு.

"இது, எனக்கு வருத்தம் வந்திருக்கு என்று தெரியிறதுக்கு கன நாளைக்கு முதலே நான் யோசிச்சதுதான்... எங்கடை வாழ்க்கை எவ்வளவு காலம் நீடிக்கும் எண்டு யாருக்கும் தெரி யாது.... அது சட்டென்று முடிஞ்சு போகவும் கூடும். எங்கடை ஆக்களின்ரை தியாகம், வீரம் எல்லாம் அடுத்த சந்ததிக்கு தெரிய வேணும். கடத்தப்பட வேணும்.

அவங்கள் வரலாற்றை பிழையாக்க படாதபாடு படுறாங்கள்... நாங்கள் சரியாக வரலாற்றைக் கடத்த வேணும்... அடுத்த தலைமுறைக்கு ஒன்றுவிடாமல் எல்லாம் தெரிய வேணும்... அப்பிடியே அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்த வேணும்.

அதுதான்... என்னால முடிஞ்சதை நான் செய்திருக்கிறன். அதோடை... எனக்கு கொஞ்சம் எழுதும் பழக்கமும் இருக்கு...."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே அலுமாரியைத் திறந்த வதனி ஒரு பெரிய கட்டு காகிதங்களையும் நான்கைந்து பெரிய கொப்பிகளையும் எடுத்து நீட்டினா.

"இதெல்லாம் நான் எழுதினதுதான்... இன்னும் இருக்கு...." சற்று கூச்சத்துடன் சொன்னா தேவி. "எனக்கு பட்டதை எழுதினனான். எப்பிடி இருக்கு எண்டு நீங்கதான் சொல்ல வேணும். இதுகளை நேரம் கிடைக்கிற நேரம் வாசிச்சு எனக்கு அபிப்பிராயம் சொல்லுவியளோ...?"

"நானும் வாசிக்கலாமோ..?" சாந்தி ஆர்வமாகக் கேட்டாள்.

"கட்டாயமா... முதல்லை கவிதை எழுதின இந்தக் கொப்பியளில ரெண்டை எடுத்துக்கொண்டு போறன். அது முடிய மற்றவை.. எனக்கு எல்லாத்துக்கும் முதல் உங்கடை அனுபவங்களை எழுதின இந்தக் கொப்பியை முதல்லை வாசிக்க வேணும்.." ஆனந்தனும் ஆர்வமாகச் சொன்னான்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வாசலில் சலசலப்பு கேட்டது.

"பெரியம்மா...! உங்கடை ஆக்கள் வந்திட்டினம்..." கொஞ்சம் பொறாமையுடன் முறுகிக்கொண்டு சொன்னான் சேந்தன்.

தேவியும் வதனியும் சிரித்தனர்.

"அவை என்ரை மாணவர்கள். நான் பள்ளிக்கூடம் போகாம இருக்கிறனல்லோ..? அதாலை அவை இங்கை என்னைப் பார்க்கவெண்டு வந்திடுவினம்... அதுதான் சேந்தனுக்கு கொஞ்சம் பொறாமை.."

பெரிய வகுப்பு மாணவ, மாணவிகள் சிலர் அமைதியாக அறைக்குள் நுழைந்தனர். ஆனந்தன் குடும்பம் விடைபெற்றது.

"ஒரு நல்ல ரீச்சர் பள்ளிக்கூடம் வரேல்லையெண்டால்... அதுகும் அவைக்கு சுகமில்லை எண்டால் படிக்கிற பிள்ளையளால தாங்கேலாது.. இல்லையோ...? எனக்கு நான் படிச்ச காலம் ஞாபகத்துக்கு வருகுதப்பா.. நானும் அப்பிடித்தான்.. செல்லமணி ரீச்சர் தமிழ் படிப்பிச்சவா... சூப்பராப் படிப்பிப்பா. அவ படிப்பிக்கிற முறையில நான் பைத்தியம் மாதிரி அவவுக்குப் பின்னாலையே திரிவன். அவா ஒருநாள் வரேல்லை எண்டாலும் நான் வீடு தேடிப் போடுவன். அதெல்லாம் மறக்க முடியாத நினைவுகள்...." சாந்தி பெருமூச்சு விட்டாள்.

ஆனந்தனும் தன்னுடைய கணக்கு வாத்தியார்தான் அப்ப தன்னுடைய கடவுள் என்றான்.

"பெம்பிளைப் பிள்ளையளுக்கு முன்னாலை பெடியளைக் கழுவிக் கழுவி ஊத்துவார்.... அவரில இருக்கிற பிடிப்பில நாங்கள் அதை அவமானமாகவே நினைக்க மாட்டம்.." ஆனந்தனும் சிரித்தான்.

வெண்ணிலாவுக்கு இவையெல்லாம் புதியதாக இருந்தன.

"இப்ப இப்பிடியான ரீச்சர்களைப் பார்ப்பதே அருமை.... என்னப்பா..?" என்றாள்.

வரும் வழியில் ஆனந்தனின் ஃபோன் விடாமல் அடித்தது. போக்குவரத்தில் அவனால் அதை எடுக்க முடியவில்லை. வீட்டுக்கு வரும் வழியில் பழங்கள் வாங்கிக்கொண்டு போய் விதுரனையும் பார்த்துவிட்டு வந்தார்கள். அவனுடன் பேசிக்கொண்டு இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. வீட்டுக்குத் திரும்பி வரும்போது இருட்டி விட்டது. வந்ததுமே சமையல் சாப்பாடு என்று பொழுது ஓடிவிட்டது. படுப்பதற்கு முன் தேவியின் கவிதைக் கொப்பிகளில் ஒன்றை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்தான். இவையெல்லாவற்றையும் நேரமெடுத்து நிதானமாக ரசித்துப் படிக்க வேண்டும்.

வாசித்தவரைக்கும் தேவி ஒரு நல்ல கவிஞர்தான் என்று பட்டது. அவவின் எழுத்தில் மெருகேறிய தமிழ்நடை அழகாக விழுந்திருந்தது.

'இன்றையப் பொழுது நீண்ட பொழுதாகிவிட்டது' என்ற அலுப்புடன் படுக்கையில் சரிந்தான் ஆனந்தன்.

'விடிய அஞ்சு மணிக்கு அலாரம் வையுங்கோ அப்பா... வரேக்குள்ள ஆரோ விடாம ஃபோன் அடிச்சினம்.. ஆரெண்டு பாத்தனீங்களோ?" சாந்தி கேட்டதும்தான் ஆனந்தனுக்கு ஞாபகம் வந்தது.

பார்த்தால்.. மணிவண்ணன்.... வலிகாமம் வடக்கில் அவன் முன்பு போராளியாக தங்கியிருந்த முகாமொன்றுக்கு பக்கத்து வீட்டில் இருந்தவன். அப்போது சின்னப் பையன். அவனில் உயிராக இருந்தான். இப்போதும் அவனுடன் தொடர்பில் இருப்பவன். படித்து நல்ல உத்தியோகமொன்றில் இருக்கிறான்.

அழைப்பிற்கு ஆனந்தன் பதிலளிக்கவில்லை என்றதும் குறுந்தகவல் விட்டிருந்தான்.

'அண்ணை..! உங்களைப் பிடிக்கேலாமப் போச்சுது.... மணியத்தார்.... அதுதான் நீங்கள் இங்க போய்வாற சுப்பிரமணியத்தார் காலமாகீட்டார்... அதை உங்களுக்குச் சொல்லத்தான் எடுத்தனான்'

தொடரும்.....

# டிரம்பின் அதீத ஆசைகள்




ஐங்கரன்

# உலகை மிரட்டும் அரசியல்

**(அமெரிக்க அதிபர் டிரம்ப் இரண்டாம் முறையாக பதவியேற்று ஓராண்டை நிறைவு செய்யும் நிலையில், அவரின் அதீத ஆசைகளாலும், உலகை மிரட்டும் அரசியலாலும் பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.)**

**வெனிசுலா,** கனடா மற்றும் கிரீன்லாந்தை அமெரிக்கப் பகுதிகளாகக் காட்டும் செயற்கை நுண்ணறிவு வரைபடத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அண்மையில் வெளியிட்டுள்ளார். அவரின் எண்ணம் தான் என்ன திட்டங்கள்தான் என்ன என்பதை எவரும் அறிய முடியாதுள்ளது.

பொருளாதார ரீதியாக நாடுகளை அவர் வசப்படுத்துகிறார். அவரால் உலகின் பல நாடுகளில் அவரது வரிச் சுமை அதிகரித்து வருகிறது. பிரான்ஸ் மீதான மிரட்டல் என்று கூறுமளவிற்கு, தனது டிரம்பின் அமைதி வாரியத்தில் இணையாத பிரான்சின் மதுபானங்கள் மீது இருநூறு வீத வரி விதிப்பதாக மிரட்டியுள்ளார். அவரது அதீத விருப்பங்களுக்கு இது ஒன்றே உதாரணமாகும்.

டொனால்ட் டிரம்பின் அதீத ஆசைகளில் இன்னொரு முக்கிய ஆசை, தொடர்ந்து மூன்றாவது முறை அதிபராகும் திட்டமாகும். டிரம்ப்பின் ஆட்சியில் அதிகாரத்தை நிலைநாட்டுதல், அரசி யல் எதிரிகளை பழிவாங்குதல், குடிவரவாளர்கள் மீது கடுமையான கொள்கைகள், புதைபடிவ எரிபொருட்களை அதிகரித்தல், மற்றும் தனது கொள்கைகளுக்கு உலக நாடுகளின் ஆதரவை பெறதல் என அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறார்.

இது போன்ற செயல்கள் அவரது அதிபர் பதவிக்கு திரும்பும் லட்சியத்தால் உந்தப்படுகின்றன என்றே கூறலாம். ஒருமுறை அல்ல அதற்கும் அதி-கமாக இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு



முறைகள் அமெரிக்க அதிபராக சேவை செய்ய முடிவது என் வாழ்வில் மிகுந்த பெருமைக்குரிய விஷயம் என்று அண்மையில் தெரிவித்து இருந்தார்.

## அதீதம் நிறைந்த டிரம்பின் ஆசைகள்:

மூன்றாவது முறை அதிபராகும் கனவில் 2028 தேர்தலில் வெற்றி பெற்று, அமெரிக்க அதிபராக மீண்டும் பதவி வகிப்பதே அவரது முக்கிய ஆசைகளில் ஒன்று. தொடரும் அதிபர் பதவி குறித்த ஆசைகளுக்காக அடிக்கடி அதிகார கொள்கையை மாற்றுதல், அதிகாரத்தை குவித்தல் போன்ற அவரது நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்கைக் கொண்டிருப்பதாக சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் தனக்கு எதிராக உள்ளவர்களை பழிவாங்க ஆட்சி அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்துவதாகவும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. மேலும் குடிவரவு கொள்கைகளை மீறி, குடியேறியவர்களை முகாம்களில் அடைத்து, பாரிய நாடுகடத்தல் நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்கிறார்.

சர்வதேச உறவு நிலையில் காசா அமைதி வாரியம் போன்ற திட்டங்களை நிறுவி, நாடுகளை அதில் இணைய கட்டாயப்படுத்தி அழைப்பு விடுப்பது, அதன் மூலம் தனது செல்வாக்கை நிலைநாட்டுவது அவரது ராஜதந்திரத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

பிரான்ஸ் மீதான மிரட்டலாக, தனது அமைதி வாரியத்தில் இணையாத பிரான்ஸ் மதுபானங்கள் மீது இருநூறு வீத வரி விதிப்பதாக மிரட்டியமை அவரது அதீத விருப்பங்களுக்கு உதாரணமாகும். மேலும் சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய செயல்களின் மூலம் டிரம்பின் அதீத ஆசைகள் தொடர்கிறது. அதிபர் பதவி மீண்டும் கிடைப்பது, அதிகாரத்தை நிலைநாட்டுவது, மற்றும் உலக அரங்கில் அமெரிக்காவின் அதிகாரத்தை தனது விருப்பப்படி மாற்றுவது போன்றவற்றை மையமாகக் கொண்டு பல நாடுகளை மிரட்டியும் வருகிறார்.

## டிரம்பின் நோபல் பரிசு ஆசை:

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஆசைப்பட்டு, ஏழு போர்களை நிறுத்தி விட்டேன் என்று அதிபர் டிரம்ப் தம்பட்டம் அடித்தாலும், அவர் தேர்வு செய்யப்படவில்லை.

எந்த ஆண்டும் இல்லாத வகையில் 2025 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு முக்கியத்துவம் பெற்றது. அதற்கு காரணம் அதிபர் டிரம்பின் கடந்த கால பேச்சும், திரும்ப திரும்ப நான் பல போர்களை நிறுத்தி விட்டேன் என்றும் கூறியதும் தான். அதுமட்டுமின்றி அவர் ஒரு படி மேலே போய், 'எனக்கு நோபல் பரிசு தராவிட்டால் அது அமெரிக்காவுக்கு பெரும் அவமானம்' என்றும் தெரிவித்தது தான் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

கடந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசை, வெனிசுலாவை சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ வென்றாலும், டிரம்பின் அதீத ஆசைக்கனவு குறைந்தபாடில்லை. அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்காதமையால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடும் கோபமடைந்தார்.

என்ன தான் டிரம்ப் தனது அதிகாரத்தை பயன்படுத்தி, பாரிய தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், அமைதிக்கான நோபல் பரிசு குறி தவறியது என்பதே வெளிப்படை. டிரம்ப் ஏழு போர்களை நிறுத்திவிட்டேன் என்று கூறி வந்தாலும், டிரம்புக்கு நோர்வே குழுவினர் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கவில்லை என்பதே உண்மை ஆகும்.

இதனையடுத்து நோர்வே நோபல் குழு அமைதியை விட அரசியலுக்கு முன்னுரிமை அளிப்பதாக வெள்ளை மாளிகை குற்றம் சாட்டியது. உலகின் மிகவும் மதிப்புமிக்க விருதை வெல்ல ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பல மாதங்களாக முயற்சி செய்து பிரச்சாரம் செய்து வந்தமையும் குறிப்பிடத் தக்கது.

வெனிசுலா அதிபர் நிக்கலஸ் மதுரோ கைதானதற்கு மாற்றீடாக, கடந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசை வென்ற வெனிசுலா எதிர்கட்சி தலைவர் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோ தனது பரிசை அதிபர் டிரம்பிற்கு வழங்கியுள்ளார்.

## மூன்றாவது முறை அதிபராகும் ஆசை:

டொனால்ட் டிரம்ப் தனது சொந்த விருப்பப்படி, அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்திருத்தம் கொண்டு வர விரும்புகிறார். இது சாத்தியமாகவல்ல கனவா, அல்லது கானல் நீரா என்று விரைவில் தெரியவரும்.






இரண்டாவது பதவிக்காலம் முடியும் சமயத்தில் 82 வயதை நிறைவு செய்யப் போகும் டிரம்பிடம், அமெரிக்க நாட்டின் மிகக் கடினமான வேலையில் தொடர்ந்து சேவை புரிய விருப்பமா என்று கேட்கப்பட்டது, மூன்றாவது முறையாக அதிபராக வேண்டும் என்று தான் விரும்புவதாக கூறியுள்ளார்.

ஆனாலும், எந்த நபரும் இரண்டாவது முறைக்குப் பிறகு தேர்வாகக் கூடாது என்று அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால், டிரம்ப் ஆதரவாளர்கள் சிலர் அதற்கு வேறு வழிகள் இருக்கக் கூடும் என்று பரிந்துரைக்கிறார்கள். மூன்றாவது முறை தேர்தலில் போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி கேட்கப்பட்டபோது, அதற்கென உள்ள சில வழிமுறைகளின் மூலம் அதைச் செய்ய முடியும் என்று கூறினார்.

அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டுமென்றால் செனட் மற்றும் பிரதிநிதிகள் அவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், அதோடு நாட்டின் மாகாண அரசுகளிடம் இருந்து நான்கில் மூன்று பங்கு ஆதரவும் வேண்டும். ஆனால் டிரம்பின் குடியரசுக் கட்சி நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கட்டுப்படுத்தினாலும் தேவையான பெரும்பான்மை அதற்கு இல்லை. அதோடு மாகாண அவைகளில் 50 இல் 18 ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

ஆனாலும் அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தில் நீதிமன்றத்துக்கு தெரியாத ஒரு ஓட்டை இருப்பதாக டிரம்ப் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ஒரு நபர் இரண்டு ஆட்சிக்காலத்துக்கும் மேல் தேர்வாவதைத் தான் தடை செய்கிறதே தவிர, பின்தொடர்வதைப் பற்றி அத்திருத்தம் எதுவும் குறிப்பிடவில்லை.

இந்தக் கோட்பாட்டின்படி இன்னொரு வேட்பாளருக்கு டிரம்ப் துணை அதிபராக இருக்கலாம். 2028 தேர்தலின் போது இப்போது அவருக்கு துணை அதிபராக இருக்கும் ஜே.டி.வான்ஸ்/க்குக் கூட வென்றால் அந்த வேட்பாளர் அதிபராக பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும். மற்றும் உடனே ராஜினாமாவும் செய்யலாம் அவரைத் தொடர்ந்து டிரம்ப் பதவியேற்க வழிவகுக்கலாம் என்ற ஊகங்களும் உள்ளன.

இரண்டு முறைக்கு மேல் அமெரிக்க அதிபராக இருந்த ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட் நான்கு முறை தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். தனது நான்காவது பதவிக்காலம் தொடங்கி மூன்றாவது மாதம் முடிந்த நிலையில் 1945ம் வருடம் ஏப்ரல் மாதம் அவர் உயிரிழந்தார். அவர் ஆட்சிக்காலத்தின் முக்கியப் பகுதிகளான பெரும் பொருளாதார வீழ்ச்சியும், இரண்டாம் உலகப்போரும் அவர் அதிபர் காலம் தொடர்ந்ததற்கான காரணிகளாகக் கூறப்படுகின்றன.

அதுவரை அதிபர்கள் இரண்டு முறைக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது என்பது சட்டமாக எழுதப்படவில்லை. அதற்கு மாறாக 1796 இல் ஜார்ஜ் வாஷிங்டன் மூன்றாவது முறை பதவி ஏற்க மறுத்ததன் தொடர்ச்சியாக பின்தொடரப்பட்ட ஒரு சடங்காகத்தான் இருந்தது. இதன் பின்னரே ரூஸ்வெல்ட் தொடர்ந்து பதவியில் இருந்ததால் இந்தச் சடங்கை சட்டமாக, 22வது சட்டத்திருத்தமாக 1951இல் நிறைவேற்றினார்கள்.

## வெனிசுலா, கனடா, கிரீன்லாந்து அமெரிக்க வசமாகுமா?

சர்வதேச அளவில் சர்ச்சையை ஏற்படுத்திய வெனிசுலா, கனடா கிரீன்லாந்தை அமெரிக்கப் பகுதிகளாகக் காட்டும் செயற்கை நுண்ணறிவு வரைபடத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

உலகின் அதிக எண்ணெய் வளமிக்க நாடான வெனிசுலா மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கப் படைகள், அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவை சிறைப் பிடித்து சென்றது. தொடர்ந்து அந்நாட்டை அமெரிக்கா நிர்வாகம் செய்யும் என்றும் டிரம்ப் அறிவித்துள்ளார்.

டென்மார்க் நாட்டின் தன்னாட்சிப் பகுதியாக விளங்கும் கிரீன்லாந்தை முழுவதுமாக அமெரிக்கா ஆக்கிரமிக்க வேண்டும் என ட்ரம்ப் கூறி வருகிறார். அமெரிக்காவின் பாதுகாப்புக்கு கிரீன்லாந்து மிகவும் முக்கியம் என்றும், நாங்கள் கிரீன்லாந்தை கைப்பற்றாவிட்டால் சீனா அல்லது ரஷ்யா கைப்பற்றிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆனால் டிரம்ப் அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. இதேவேளை அமெரிக்காவின் இந்த முடிவுக்கு, டென்மார்க் மற்றும் ஏராளமான ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வெனிசுலா, கனடா நாடுகள் மற்றும் கிரீன்லாந்தை அமெரிக்காவின் பகுதிகளாகக் குறிப்பிட்டு செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட வரைபடத்தை அதிபர் டிரம்ப் நேற்று சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளமைக்கு பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.



# ஆர்ப்பாட்டப் பேரணி

சிறுகதை...



-பிரபா அன்பு

"அம்மா! வணக்கம்."

"வணக்கம் தம்பி!"

"அம்மா! நான் றிப்போட்டர். உங்களை பேட்டி எடுக்கலாம் என்று வந்திருக்கிறன்."

"ஆ..!சரி தம்பி!"

"நீங்கள் காணாமல் போனோர் பேரணிக்கு வந்திருக்கிறியள். இந்த போட்டோவில் நிற்பது யாரம்மா?"

"அது தம்பி... இவா என்ர மகள். 1999 ஆம் ஆண்டு மே மாசம் அரியாலையில வச்சு காணாமல் போனவா...."

"அம்மா...! உங்கட மகள் வீட்ட இருக்கும்போது காணாமல் போனவாவா? அல்லது வெளிய எங்கும் போனபோதா?"

"ஓம் தம்பி!.... என்ர பிள்ளை வேலைக்கு போய் வரேக்க காணாமல் போனவா."

"மகள் ஆமிக்காறனாலதான் காணாமல் ஆக்கப்பட்டவா என்று சரியாத் தெரியுமோ?"

"அது தம்பி..! அவாவை பிடித்து சிங்களவன் கொன்று போட்டான். இண்டைக்கு வெளிநாட்டில இருந்து பெரிய ஆட்கள் வரிகினம் எண்டதாலதான் வந்தனான். என்ர பிள்ளையை வாழவேண்டிய வயசில சாக்கொண்டவங்கள் உந்தச் சிங்களவர். உப்பிடி எத்தனை இளம் பிள்ளையளை சாக்கொன்று தாட்டவங்கள். உதுகள் எல்லாத்துக்கும் நீதி கிடைக்கவேணும் என்றுதான் தம்பி ஆர்ப்பாட்டத்துக்கு வந்தனான்."

"அப்படியென்றால்..... உங்கட மகளை எங்க வச்சு பிடிச்சவங்கள் ஆமிக்காறர். கொஞ்சம் சொல்லுங்கோம்மா"

"மகள் வேலைக்குப் போய்வாற றோட்டில செக்பொயின்ட் போட்டிருந்தவனுகள். போய்வாற ஆட்களின்ர ஐசி பார்த்துத்தான் விடுறவங்கள். அப்பேக்க மகள் சைக்கிளால இறங்கி ஐசியை காட்டப் போனதையும் மகளை பொயின்ரடியில மறிச்சு வச்சிருந்ததையும் ஊரில இருக்கிற ஒராள் பார்த்திட்டு வந்து சொன்னவர்.அவர் வந்து சொன்ன கையோட நான் பக்கத்து வீட்டுக்காற பெடியன உடனும் கூட்டிக்கொண்டு போன்னான். பிள்ளையின்ர சைக்கிள் நிண்டதை கண்டிட்டம். என்ர மகளை



உள்ளதான் கொண்டு போனனீங்கள். சைக்கிள் நிற்குதென்று சொல்லி அழவும் அதில நிண்டவங்கள் என்னோட வந்த பக்கத்து வீட்டுப் பெடியனுக்கு அடிச்சுப் போட்டாங்கள் துவக்கால.

நாங்கள் பிறகு என்ர மகளின்ர சைக்கிளையும் கொண்டுவந்து பொலிசுக்கு, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கெல்லாம் அறிவிச்சனாங்கள். ஆனால் ஆமிக்காறனுகள் தங்களுக்குத் தெரியாதென்றும் தாங்கள் கைது செய்யேல எண்டும் சொல்லிப்போட்டாங்கள்.

பிறகு விசாரணை செய்ததிலதான் எல்லாம் பிடிபட்டது. மகளின்ர உடலை புதைச்ச இடத்தில இருந்து தோண்டி எடுத்தவயள். அதுக்குப் பிறகு பொலிஸ் விசாரணைக்கு கொண்டுபோய் விசாரணை முடிய உடலை தந்தவங்கள்.

மகளின்ர உடலை வீட்டகொண்டுபோய் அவவின்ர இறுதிச் சடங்கெல்லாம் செய்துபோட்டு சுடலையில கோட்ஸ் ஓடரின்படி தாட்டனாங்கள்.

அப்பன்...! என்ர பிள்ளை எவ்வளவு வடிவென்று தெரியுமே?அவளின்ர முடியை பார்க்க மாட்டியள். என்ர கண்ணே பட்டிடும்போல கிளிக்குஞ்சு மாதிரி சரியான வடிவு. ஊரிர எல்லாரும் சொல்லுறது. உன்ர மூத்தவளை கவனமாகப் பார் என்று. அதுதான் சிங்களவனும் என்ர பிள்ளையின்ர வடிவைப் பார்த்து ஆசைப்பட்டு கொன்று போட்டானுகள்.

என்ர பிள்ளை சாகேக்க என்ன பாடுபட்டிருக்கும்....? பெத்த வயிறு பத்தி எரியுது. என்ர பிள்ளை எப்ப அநியாயமாக செத்தாளோ அண்டையில இருந்து நான் நிம்மதியான சாப்பாடு தண்ணிவென்னி இல்லை. நித்திரை இல்லை...."

"அம்மா....! அழாதேங்கோ..."

"அப்பன்....! என்னென்று நான் அழாம இருப்பன்? என்ர மூத்த குஞ்சு. என்னை வேலைக்கு போக வேண்டாமென்று மறிச்சுப்போட்டு தான் உழைக்கிறன் என்று போனது. என்ர பிள்ளை சின்ன வயசில இருந்தே குடும்பப் பொறுப்பு தெரிந்து வளர்ந்த பிள்ளை. அநியாயமாக சிங்களவன் கொன்று போட்டான். என்ர ராசாத்தி....! நீ சாகேக்க என்னம்மா நினைச்சனி? என்ர அம்மா வந்து என்னை காப்பாற்ற மாட்டாவோ என்றுதானே நினைச்சிருப்பாய்? உன்னை காப்பாற்ற முடியாத பாவியாப் போட்டனம்மா. என்ர செல்லம் அம்மாட்ட ஓடியாணை என்ர குஞ்சு.....! என்ர பவுண்குட்டி...! அம்மா உன்னை காப்பாத்தேலாத பாவியாப் போட்டனே? நான் என்ன செய்வேன்? என்ர அம்மா....!"

"அம்மா...! அழாதேங்கோ...! நீங்கள் அழுறதை எங்களால பார்க்கேலாம கிடக்குது. அழாமல் என்ன நடந்ததென்று சொல்லுங்கோ. இதை பார்க்கிற மக்கள் எல்லாருக்கும் தெரிய வேணும் என்ன நடந்ததென்று."

"ஓம் தம்பி...! சொல்லுறன்...."

கடந்தகால நினைவுகளில் மூழ்கிப்போனேன்.....

"அம்மா நான் போட்டுவாறன்"

"ஓம் பிள்ளை..! போட்டு வா. இண்டைக்கு மத்தியானச் சாப்பாடு சமைக்கேல. அதுதான் பாசல் கட்டேல"

"அது பரவாயில்லை அம்மா. வேலை செய்யிற இடத்தில பக்கத்து கோயில்ல இண்டைக்கு அன்னதானம் கொடுக்கிறதென்று கதைச்சவயள். நான் அங்க வாங்கி சாப்பிடுறன்."

"சரி பிள்ளை! கவனமாகப் போட்டு வா."

"ஆ..!சரி அம்மா!"

சைக்கிளை மிதித்துக்கொண்டு புறப்பட்டாள் என் மகள் தர்சி. அரியாலை சந்தியில்தான் மகள் வேலை செய்யிற கடை இருந்தது. தர்சி வேலைக்கு சேர்ந்து ஒரு மாதம்தான் ஆகியிருந்தது. உயர்தரப் பரீட்சை எடுத்த கையோடு ரைப்பிங் கடை ஒன்றில் வேலைக்கு சேர்ந்திருந்தாள்.

என்னுடைய கணவர் குமார் இருதய நோய் காரணமாக நான்கு வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அதன் பின்னர் நான்தான் கிடுகு பின்னிக் கொடுக்கிற வேலைக்கும் வீடு வளவுகள் கூட்டிப் பெருக்கிற வேலைக்கும் போய் எனது மூன்று பிள்ளைகளையும் வளர்க்கிறன். என்ர மகள் தர்சி படிப்பில நல்ல கெட்டிக்காரி. ஏ.எல்.பரீட்சை எழுதிப்போட்டு சகோதரங்களை படிப்பிக்க வேணும், என்னையும் வேலைக்கு விடாமல் பார்க்க வேணுமென்று வேலைக்கு போனாள்.

என்ர மகளோட பக்கத்து கடையில் வேலை செய்யும் ராதாவும் ஒன்றாகச் சேர்ந்துதான் வேலைக்குப் போய்வாறவே. ராதாவும் நல்ல பிள்ளை. என்னை கண்டால் அன்ரி என்று கூப்பிடாம போகாது.

ஒரு நாள் வந்த ராதா "அன்ரி! தர்சியோட ஆமிக்காறன் ஒருத்தன் சேட்ட விடுறான்" என்றாள்.

அதைக் கேட்டதும் என்ர ஈரல்குலையே கருகிப் போச்சுது. அவங்கள் பொம்பிளையளை பிடிச்சால் சும்மா விடமாட்டாங்கள் என்று ஊரில கதைக்கிறவே. அதால வேலைக்குப்போய் உழைக்காட்டிலும் பரவாயில்லை வேலையைவிட்டு நிற்பாட்டுவம் என்று நினைத்துக் கொண்டேன்.

வேலைக்குப் போன மகள் எப்ப திரும்ப வருவாள் என்று வீதியையே பார்த்துக் கொண்டிருந்தேன். வழமையை விட நேரம் மெதுவாக ஓடுவதுபோல் இருந்தது. பொறுமை இழந்தவளாக வீட்டுக்குள் வந்து மணிக்கூட்டைப் பார்ப்பதும் வாசலுக்குப் போவதுமாக இருந்தேன்.

நேரம் ஆறு மணி இருக்கும். எனது மகளும் ராதாவும் சைக்கிளில் வருவது தூரத்தே தெரிந்த போதுதான் என் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

"அம்மா...! என்ன வாசல்ல நிற்கிறியள்?"

"அது பிள்ளை... சும்மா நிண்டனான்."

"நீங்கள் வழமையாக இப்படி நிற்கிறேலயே?"

"சரி...! அதைவிட்டிட்டு வா பிள்ளை உள்ள."



வேலையால வந்த மகள் எப்போது குளித்துவிட்டு வருவாள் என்றிருந்தது. தேத்தண்ணியை கொண்டுபோய் கொடுத்தேன்.

"அம்மா... என்னம்மா? பே அடிச்ச ஆட்களைப்போல ஒரு மாதிரியாக இருக்கிறீங்கள்? ஏன் முகம் சரியில்லாமல் இருக்குது?"

"அது பிள்ளை... ஒன்றுமில்லை...."

"அம்மா..! எனக்கு உந்த சுத்துற கதை பிடிக்காது. என்ன நடந்ததென்று சொல்லுங்கோ." எண்டதும் என்னால உண்மையை மறைக்கேலாமல் போட்டுது.

"பிள்ளை! ஆமிக்காறன் ஒருத்தன் உன்னை கதை கேக்கிறானாம். உண்மையே?"

"அதை யாரம்மா உங்களுக்கு வந்து சொன்னது?"

"ராதாதான் பிள்ளை சொன்னவள். அதுவும் நல்லதுக்குத்தானே. நீ இனி வேலைக்குப் போகாத. நான் முதல் போறபோல வேலைக்குப் போய் உங்களைப் பார்க்கிறன்"

"அம்மா...! உங்களுக்கென்ன விசரே? உவங்களுக்குப் பயத்தில நான் வேலைக்குப் போகாமல் விடுறதே? அது... ஆட்களோட சேர்ந்துதானே நான் போறனான்? ராதாவும்தானே வாறவள்? அது பயமில்லை..."

"எனக்கு என்னவோ பயமாக்கிடக்குது பிள்ளை. கவனமாக போய்வா என்ன? செக் பொயின்ரடியில எங்கட சனங்கள் இல்லாட்டி நீ அவடத்துக்குப் போடாத."

"ஓமம்மா... நான் பார்த்துத்தான் போறனான். றோட்டால போய்வாற ஆட்கள் எல்லாம் அவடத்தில இறங்கி ஐ.சி காட்டிப் போட்டுத்தானே போயினம். எந்த நேரமும் அவடத்தில ஆட்கள்தான். அதால நீங்கள் பயப்பிடாதையுங்கோ."

இந்த சம்பவம் நடந்ததில் இருந்து நான் வயிற்றில நெருப்பை அள்ளிக் கட்டிக்கொண்டு திரிந்த போலதான் இருந்தேன். வேலைக்குப் போன என்ர பிள்ளை எப்ப வீட்ட வரும் என்றுதான் பார்த்துக் கொண்டிருப்பேன்.

"பிள்ளை..! இண்டைக்கு ஆமிக்காறன் ஏதும் கதை கேட்டவனே?"

"ஓமம்மா...! அவன் கதை கேட்கிறவன்தான். நான் சொல்லாமல் போனாலும் கோபத்தில ஏதும் செய்திட்டால் என்ன செய்யிறது? அதால சிங்களத்தில கேட்கிறது ஏதும் விளங்கினால் சும்மா சைகையில சொல்லுவன். எனக்கென்ன சிங்களம் தெரியுமே அவனுக்கு பதில் சொல்லுறதுக்கு?"

"அது சரிதான். என்ன கேட்டவன்?"

நாங்கள் இரண்டு பேரும் வேலைக்குப் போகேக்க

"ஏய் நங்கி! ஐ.சி தெண்ட?"

"ஓம் சேர்! இருக்குது."

"கோ..?"

"விளங்கேல சேர்"

"இங்கிலிஸ்"

"யெஸ் சேர்"

"வேக் வெயார்?"

"யெஸ் சேர்! வேலைக்கு சேர்."

"வேக் கோ..?"

"சொப்ல சேர்"

"நீங்க ரெண்டும்?"

"இல்லை சேர்! பக்கத்து பக்கத்து கடையில வேலை செய்யிறம்."

"பொறு?"

"இல்லை சேர்! உண்மையாகத்தான் சொல்லுறன்."

"பேர் என்ன?"

"தர்சி சேர்."

"பொறுக் கியன்ட எப்பா..?"

"உண்மையாக தர்சிதான் சேர்"

"ஒயா சுது நங்கி லஸ்சண. மங் ஆதரே"

"சேர் ஐசியை தாங்கோ"

"ஆ..தர்சி. அபே பெரியதொறே இன்னவா"

"ஐசியை தாங்கோ சேர் போக."

"ஆ..தர்சி! மங் ஆதரே"

இப்படி எல்லாம் ஏதோ சொல்லுவான் அம்மா. அவன் கதைக்கிற கதையில எனக்கு முக்கால்வாசி விளங்காது. அவன் சிங்களத்திலதான் கதைப்பான். கொஞ்சம் கொஞ்சம்தான் தமிழ் கதைப்பான். நீங்கள் உதை எல்லாம் நினைத்து கவலைப்படாதையுங்கோ அம்மா.

என்னதான் மகள் எனக்கு ஆறுதல் கதை சொன்னாலும் எனக்கு மனம் ஆறுதல் இல்லாமலே இருந்தது. என்ர மூத்தவளால என்ர நிம்மதியும் பறிபோட்டுது.

"உந்த அம்மா மனிசி கவலைப்படுது. நான் வேலையை விட்டு நின்றால் ஆர் எங்களை பார்க்கிறது? பிறகு... தான் வேலைக்குப் போறனென்று வெளிக்கிட்டிடுவா."

தினமும் இவ்வாறான கெடுபிடிகளுக்கு மத்தியில்தான் நான் வேலைக்குப் போய் வாறனென்று எப்படி அம்மாக்கு சொல்லுறது? அப்பா இல்லாதபடியால் என்ர குடும்பத்தை பார்க்க வேண்டிய கடமை எனக்குத்தான் இருக்குது. ஏனென்றால் நான்தான் வீட்டில் மூத்த பிள்ளை. ஆமிக்காறனின் இத்தகைய அருவருப்பான செயற்பாடுகளை காதில போட்டுக் கொள்ளுவனாக இருந்தால் என்ர தம்பி தங்கச்சியாக்களை நான் படிப்பிக்கேலாம போடும்.

வேலைக்கு போகும்போதும் வேலை விட்டு வரும்போதும் நானும் ராதாவும் சேர்ந்தே வீட்டிற்கு வருவோம்.

செக் பொயின்ரில் இறங்கித்தான் ஐசி காட்டிவிட்டு நாம் செல்ல வேண்டும். காலையும் மாலையிலும் இதேதான் தொடர்ந்தது.

வீட்டுக் கஸ்ரத்தில் வேலைக்குப் போகும் எனக்கு காதல் என்ற பெயரில் ஒரு சிங்களவனின் தொல்லை அதிகமாகியது.

சில வேளைகளில் வேறு இராணுவம் நின்றால்கூட என்னைக்



கண்டதும் என்னை காதலிக்கக் கேட்கும் இராணுவத்தை கூப்பிட்டு நான் வருகிறேன் என்று காட்டும் நிலைக்கு சென்றது.

வீதியால் போய் வருவோரும் ஊராரும் இதை அவதானிக்காமல் இல்லை. எங்கள் குடும்பம் மீதுள்ள அக்கறையில் அம்மாவுக்கும் வந்து ஒரிருவர் கூறிவிட்டனர். அம்மா சும்மாவே 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டாதெல்லாம் பேய்' என்ற நிலையில இருக்கிறவா. சனங்கள் சொல்லுற கதையள கேட்டிட்டு சும்மா இருப்பாவா? மறுபடியும் குழம்பினா வேலைக்குப் போகாத என்று.

"அம்மா....! உவங்களுக்காக நான் வேலைக்கு போகாமல் நிற்கிறதே.?"

"பிள்ளை! உவங்கள் கடத்திக் கொண்ட ஏதும் செய்து போடுவாங்கள். நாங்கள் ஆம்பிளை துணை இல்லாதனாங்கள். பிறகு என்ன செய்யிறது.?"

"அம்மா...! நான் வேலையை விட்டு நின்றால் தம்பி தங்கச்சியை யார் படிப்பிக்கிறது? உங்களுக்கும் வருத்தமெல்லே? தயவு செய்து வேலையை விடச்சொல்லி மட்டும் கேட்காதையுங்கோ."

"மோட்டு சிங்களவங்கள் உன்னை ஏதும் செய்து போடு வாங்கள் என்றுதான் பிள்ளை எனக்குப் பயமாக் கிடக்குது. உனக்கு தெரியும்தானே? எத்தனையோ பேர் காணாமல் போய்க் கொண்டிருக்குதுகள்"

"ஓம் அம்மா! நான் ஆமி பொயின்ரடியில போகேக்க ஆட்களோட சேர்ந்துதான் போறனான். தனியப் போறேல"

"கவனமாக பார்த்து போய் வா பிள்ளை. தின்னாமல் கிடந்தாலும் பரவாயில்லை. உனக்கொன்று நடந்தால் நான் தாங்கமாட்டன்"

"அம்மா...! யோசிக்காதையுங்க" என்று அம்மாவை ஆறுதல் படுத்தினேன்.

ஞாயிற்றுக் கிழமை தவிர்த்து ஏனைய நாட்களில் தினமும் காலையும் மாலையும் செக்பொயின்ரை கடந்தே வேலைக்கு சென்றுவர நேர்ந்தது.

"ஏ...ஒயா யேஸ்ரடே வந்து இல்லே?

"சேர்! எனக்கு விளங்கேல?"

"யூ யேஸ்ரடே நொட் கம்?

"நேற்று வேலை லீவு சேர்"

"ஏ..மம ஓயாவ லவ் கறன்னவா?ஓயாட கமத்தித?.."

"சேர்! எனக்கு ஒன்றும் விளங்கேல."

"ஏய்! ஓயா மெகெம கியண்ட எபா. மம லவ் கறனவா ஹரித?"

"சேர்! எனக்கு ஒன்றும் விளங்கேல நான் வீட்ட போகோணும். ஐசியைத் தாங்கோ"

"ருமோறோ கம். லவ் ஓகே?" என்று கூறியபடி ஐசியை தந்தான்.

"என்னடி தர்சி! உந்த குரங்கன் உன்னை விடமாட்டான் போல. அவனும் அவன்ர இங்கிலீசும். நாளையில இருந்து வேற பாதையால வேலைக்கு போவமே?"

"ஓமடி... சனியன் என்னைப் போட்டு படுத்துறபாடு. அதுவும் அதின்ர மூஞ்சயும். இஞ்சி திண்ட குரங்கைப்போல"

"தர்சி..! இதால வராமல் சுத்திப் போறமாதிரி வேற பாதை ஏதும் இருக்கோடி?"

"எனக்குத் தெரியாதடி"

"அந்த ஒற்றைக் கை பிள்ளையார் கோயிலடியோட ஒரு றோட்டுப் போகுதெல்லே. அது எங்க போகுது?"

"அது எனக்குத் தெரியாதடி. ஒருக்கா அதால போய்ப் பார்ப்பமே?"

"சும்மாவே சைக்கிளை உழக்கிக்கொண்டு போறதில 8-30 கடந்துதான் லேலைக்கே போறம். அதிலையும் தெரியாத பாதையாலபோய் அது எங்கயும் போற பாதை என்றால் என்ன செய்யிறது?"

"ம்... அதுவும் சரிதான். அப்ப நீ வீட்டபோய் உங்கட அம்மாட்ட சொல்லன். இவன் இப்படி கேட்கிறான் என்று"

"அம்மாக்கு நான் சொன்னனான் இப்படி சொல்லுறான் என்று. அவா வேலைக்கு போகவேண்டாம் என்று சொல்லுறா. வேலைக்கு போகாவிட்டால் அம்மா பாவம். அதாலதான் நான் சமாளிக்கிறன்."

"அது சரிதான். நேற்று எங்கட சொந்தக்கார அண்ணா ஒராளை உவங்கள் பிடிச்சுப் போட்டாங்கள்"

"உண்மையாவோ?"

"ஓமடி... உனக்குத் தெரியுமே உயரமான வட்டத்தொப்பி போட்ட ஒரு தடியன். செக் பொயின்ரில நிற்கிறவன். மற்றவனுகள் அவனை பெரேரா என்றுதான் கூப்பிடுறவனுகள். அவன்தானாம் பிடிச்சவன்"

"ஆ.. சும்மாவே அவனைப் பார்க்க பயமாத்தானே கிடக்கிறது? உவங்களுக்காக வேலையை விட்டிட்டு என்ன செய்யிறது. நாங்கள் கஸ்ரத்திலதானே வேலைக்குப் போறம்?"





"ம்... உவங்களுக்கு எங்க அது விளங்கப்போகுது? நாளைக்கு நான் வேலைக்கு வரமாட்டன்."

"ஏன் வரமாட்டாய்?"

"எங்கட தங்கச்சி சாமர்த்தியப்பட்டிட்டாள். அவளுக்கு நாளைக்கு தலைக்கு தண்ணி வார்க்கிறம்."

"ஆ.. சரியடி"

காலையில் நேரத்தோடு எழுந்து வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு வேலைக்குப் புறப்பட்டேன். சைக்கிளை மிதித்துக்கொண்டு ஆமியின்ர காம்படிக்கு சென்றுவிட்டேன்.

"ஏய் கூட்டாளி கோ?"

"தெரியாது சேர்"

"ஐசி தாங்க"

"ஒயா லவ்"

"இல்லை சேர். நான் தமிழ்"

"தெமழ கட்டிய தமாய் அபிட ஆசய்"

"சேர் ஐசியை தாங்கோ"

"ஒயா அதுலட்ட என்டகோ"

எனக்கு அழுகை அழுகையாக வந்தது. இண்டைக்கென்று றோட்டால யாரும் வருகுதுகளே இல்லை. வந்தால் விட்டிடுவான். இருபது நிமிடமளவில் என்னை மறித்து வைத்திருந்தான். பொறுமை இழந்தவனாக

"ஏ ஓயா எல்.. ரீ.. ரீ..?"

"சேர் நான் இயக்கம் இல்லை. எனக்கு இயக்கத்ததை தெரியாது. என்னை விடுங்கோ சேர்."

"பொறுக் கியண்ட எபா."

"இல்லை சேர். எனக்கு எதுவும் தெரியாது."

"ஓயா கொட்டியா? அபிட்ட தண்ணவா. ஓயா அதுலட்ட எண்ட கோ."

நான் மறுக்க மறுக்க அவனோடு இன்னொருவனும் வந்து என்னை பிடித்து இழுத்துக்கொண்டு போனான்"

"சேர்...! விடுங்கோ..! என்ர அம்மா என்ன தேடப்போறா. நான் படிக்கிற பிள்ளை சேர். எனக்கு இயக்கத்தை தெரியாது. என்னை விடுங்கோ சேர்"

"ஏய்! சத்தம் வேணாம்" என்று ஒருவர் என் வாயைப் பொத்திய பின்னர் சிங்களத்தில் எனக்கு புரியாமல் கதைத்தனர். அதன் பின்னர் யாரோ பலமாக என் தலையில் கட்டையால் அடிப்பது தெரிந்தது. நான் மயக்கமாகிப் போனேன். என் அம்மாதான் என் கண் முன் வந்து போனாள்.

அரை மயக்க நிலையிலேயே பலர் சேர்ந்து என்னை சீரழித்தனர். என் உடல் கீறல் காயங்களால் எரியத் தொடங்கியது. கத்தி அழமுடியாதவாறு என் உள்ளாடையை கழற்றியே எனது வாயிற்குள் அடைந்து வைத்திருந்தனர். பல காமுகர்களால் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டேன்.

ஏதோ எல்லாம் சிங்களத்தில் கதைத்தவர்கள் குற இழுவையாக இழுத்து வந்து ஒரு கட்டடத்தின் பின்னால் போட்டுவிட்டு சென்றனர். தண்ணீர் தாகமெடுத்தது. வாயிற்குள் துணி இருந்ததால் என்னால் சீராக சுவாசிக்க முடியாமல் போனது. அரைமயக்க நிலையில் இருந்த என்னை மீண்டும் யாரோ ஒருவன் வந்து சீரழித்தான்.

அவன் சென்ற பின்னர் ஒரு அரை மணி நேரந்தில் எனது கைகளையும் கால்களையும் பிடித்து இழுத்தபடி சென்றனர். எனது உடல் கல்லுகள் முள்ளுகளின் மேலால் இழுபட்டுச் சென்றது. உடல் நோவாகவும் எரிவாகவும் இருந்தது.

இப்போது மண் வெட்டும் சத்தம் கேட்டது. என்னை இழுத்து வந்தவர்கள் ஏதோ சிங்களத்தில் கதைப்பது கேட்டது. என்னை புதைக்கத்தான் கிடங்கு வெட்டுகிறார்களோ தெரியேல. சிலவேளை என்னை உயிரோடு கிடங்கில் போட்டு மூடப்போகிறார்களோ என்னவோ. காடையனுகள் என்ன கதைக்கிறாங்கள் என்று பாசை புரியாமல் போனது. இப்போது யாரோ ஒருத்தன் பெரிய கல்லை என் தலையில் போட்டான். என்னுயிர் எனது உடலை விட்டுப் பிரிந்துபோனது. நான் இவ்வுலக வாழ்வில் இருந்து விடைபெற்றேன்.....

"தம்பி...! என்ர பிள்ளையின்ர தலையில கல்லைப் போட்டுத்தான் சிங்களவன் சாக்கொண்டவன். அவளின்ர சாவுக்கு காரணமானவங்களை விடக்கூடாது தம்பி. அவங்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேணும். என்ர மகளைப்போல எத்தனை இளம் பிள்ளைகளை கொன்று புதைச்சவங்கள்?"

"ஓம் அம்மா...! யோசிக்காதையுங்கோ."

என் மகளின் புகைப்படத்தை அணைத்தவாறு கண்களில் கண்ணீர் வழிய நின்றேன்.

"என்ர செல்லம் இருந்திருந்தால இப்ப ஒரு குடும்பகாரியாக இருந்திருப்பாள். என்ர பவுண் அம்மவோட இருக்கேக்க ஒரு நல்ல உடுப்புப்போட்டு நல்ல சாப்பாடு சாப்பிட்டு அறியாது. கஸ்ரத்திலயே வளர்ந்து சித்திரவதைகளையும் அனுபவிச்சு செத்துப்போச்சுதே..

என்ர கடவுளே...! உனக்கு கண்ணே இல்லையா? என்ர பிள்ளையை சிரழிச்சுக் கொன்றவங்களுக்கு தண்டனை கொடுக்கமாட்டியா? என்ர அம்மாச்சி...! இந்த அம்மா படுற பாட்டை பார்க்கமாட்டியா? நான் சாப்பாடில்லாம அலைஞ்சு திரியிறன்டா. உன்னை கொன்றவங்களுக்கு தண்டனை கிடைக்க வேணும். என்ர அம்மா.. பெத்த வயிறு துடிக்குதணை.

நீ இல்லாத வீடு இருண்டுபோய் கிடக்குது. எங்கட சந்தோசமே எங்கள விட்டு நிரந்தரமாகப் போட்டுது" என அழுதபடி இருந்த எனக்கு அருகில் நின்றவர்களும் எனது கதையைக் கேட்டு கண்ணீர்விட்டு அழுதபடியே எனக்கு ஆறுதல் கூறி நின்றனர்....

பவானி




# "சல்லியர்கள்" திரைப்பட விமர்சனம்

**தமிழீழப்** போராட்ட வரலாற்றில் மாவீரர்களினதும், போராளிகளினதும் தியாகத்தின் ஒரு துளியே 'சல்லியர்கள்' என்ற திரைப்படமாக்கப் பட்டுள்ளது. தமிழீழப் போராட்டமானது எவ்வளவு புனிதமானது, நியாயமானது, தன்னலமற்ற தியாகங்களை தன்னுள் கொண்டுள்ளது என்பதை மனதை தொடும் வகையில் அழகாக இத் திரைப்படத்தில் காட்சிப்படுத்தி உள்ளனர்.

ஆங்காங்கே போர் நுணுக்கங்களில் சில சில குறைகள் தெரிந்தாலும் திரைப்படம் உணர்வுகளுடன் ஒன்றி மீண்டும் தமிழீழ போராட்ட களத்தில் நிற்கும் உணர்வைத் தூண்டுகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

ஈழ மண் விடுதலைப் போரின் சரியான தலைமையைத் தேர்ந்தெடுத்திருந்தது. எம் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் பல்லாயிரக் கணக்கான உயிர்த் தியாகங்களின் மத்தியில் உருவானது இந்த விடுதலைப் போராட்டம்.

விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரர் லெப் சங்கர் அவர்கள் போதிய மருத்துவ வசதியின்மையாலேயே வீர மரணத்தை தழுவினார். இதனால், எமக்கான மருத்துவ தேவையின் அவசியத்தை கருத்திற்கொண்டு தேசியத் தலைவரால் தமிழீழ சுகாதார சேவைகள் ஆரம்பிக்கப்பட்டது.

படக்கதையின் சுருக்கம். சிங்களப் பிரதேச இராணுவத்தை எதிர்த்து தமிழ்ப் பிரதேச மக்களால் உருவான போராளி அமைப்பினர் போராடுகின்றனர். அங்கு காயப்படும் போராளிகளைக் கவனிக்க என எல்லைப் பகுதிக்கு அண்மித்து நிலக்கீழ் பதுங்ககழி அமைத்து மருத்துவம் பார்க்கின்றனர்.

அங்கு கடமையில் பணியாற்றும் பெண் மருத்துவ போராளியாக நந்தினியும் (சத்யாதேவி), அவருடன் இன்னுமொரு பெண் மருத்துவ போராளியும் பணியாற்றுகின்றனர்.

அதேநேரத்தில் வேறு ஒரு பகுதிக்கு அந்த மற்றைய பெண் போராளி செல்ல, நந்தினி காயப்பட்ட போராளிக்கு தனியனாக நின்று முதலுதவி அளிக்கிறார். முதலுதவி பெற்ற போராளி மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்லப் படுகிறார்.

அதே வேளை அங்கு இன்னொரு மருத்துவ ஆண் போராளி வருகிறார். தனித்து நிற்கும் போராளியின் மனத் துணிவை வியந்து பார்க்கிறார். காலடி சத்தத்தை கவனித்தே வருவது யாரென கூற முடியும் என நந்தினி திடுக்கிடாமல், பதற்றமின்றி கூறும் போது பெண் போராளிகளின் அவதானிப்பும், துணிச்சலும் வெளிப்படுகின்றது.

எல்லையில் சண்டை நடை பெறுகிறது. அதில் காயப்பட்ட போராளியை தூக்கிக்கொண்டு வந்து மருத்துவ போராளிகளிடம் கொடுக்கிறார்கள். மிகவும் ஆபத்தான நிலையில் காயப்பட்ட அந்த போராளி காணப்படுகின்றார். எனினும் தங்களால் முயன்றவரை முதலுதவி அளித்து காப்பாற்ற முயல்கின்றனர்.

போராளி தன் கடந்த காலத்தைப் பற்றி நினைப்பது மீள்நினைவாக காட்டப்படுகிறது. அதில் மனதை தொட்ட ஒரு நிகழ்வு இருவரும் உந்துருளியில் வருகிறார்கள். விடைபெறும் தருணத்தில் அவள் பிரிந்து போகிறாள்.

அவன்… “மலர் நான் திரும்பி வராவிட்டால் என்னை செய்வாய்?” என சத்தமாகக் கேட்க, கண்ணீரை துடைத்தபடி “உனக்கு மட்டுமா இந்த மண்? எனக்கும் தானே…?” எனப் பதில் கூறுகிறாள். அந்த இடத்தில் காதலுடன் வீரமும் கலந்து நிற்கிறது.

உயிரான தாய் மண்ணை விஞ்சி எதுவுமில்லை. எம்மனங்களை தொட்டுச்செல்லும் காட்சியாக அது அமைந்து விடுகிறது. மரணப் படுக்கையில் இதை நினைந்த அந்தப் போராளி தன் கையிலுள்ள சிவப்புக் கயிற்றை மலரிடம் சேர்க்கும் படி கொடுக்கின்றான்.

போராளிகளாக வாழ்ந்து மாவீரர் ஆகியவர் தங்கள் உயிர்களை தியாகம் செய்தே தம் இலட்சிய நெருப்புக்கு உரமுட்டினர் என்பது எம் மண்ணின் வரலாறு. இக் காட்சி யதார்த்தமாக அமைந்து கண்களில் நீரை வரவழைத்தது. படத்தில் பாடலும், இசையும் மனதைத் தொடும்வண்ணம் அமைந்திருப்பது சிறப்பு.

மருத்துவ போராளியாக வந்த நந்தினியின் நடிப்பும், மகேந்திரனின் நடிப்பும் உணர்வுபூர்வமாக இருந்தன. பெண் போராளியின் மன உறுதிக்கு ஒரு மரியாதை (சல்யூட்). நந்தினியின் மீள் நினைவுக் காட்சி தத்ரூபமாக அமைந்துள்ளது.

இயல்பாகவே தமிழீழ மண்ணில் வாழ்பவர்கள் மண் பற்றுக் கொண்டவர்கள். நந்தினியும் அதே இலட்சியத்துடன் படிக்கிறாள். போரில் காயமுறும் போராளிகளுக்கான இரத்ததான நிகழ்வு மக்களால் ஒழுங்குப்படுத்தப்பட்டு கருணாஸ் வீட்டில் நடை




பெறுகிறது. அதே நேரத்தில் இராணுவம் கிராமத்தில் நுழைவதைக் கண்ட சிறுவன் ஒருவன் புயல்போல ஓடிவந்து தகவல் கூறுவது அருமை. ‘படக்’கென அச்சூழலுக்கு ஏற்றவாறு மாற்றிய போதும் இராணுவத்தினர் சோதனையிடும்போது சேகரித்த இரத்தம் நிரம்பிய பைகளை காலில்போட்டு மிதிக்கும் போது நடிப்பென்பதையும் மறந்து எம் கண்களில் கோபத்தீ பற்றியெரிகிறது. உணர்வுகள் கொப்பளிக்கின்றன.

சுடும்போதும், "வளவா! நெஞ்சை நிமிர்த்து! தலை குனியாதே!" எனும் போதும் எம்பாலன் பாலசந்திரன் நினைவு ஏற்பட்டது. யாருமற்ற அனாதையாக ஒரு நொடியில் மாறிய நந்தினியின் வாழ்க்கை யதார்த்தமான உண்மையை கூறுகிறது.

இழப்பு எமக்கு புதியதல்ல. இழப்பிலிருந்தே நம் விடுதலைக்கான வீரமும், தியாகமும் உருவாகின்றன.

“நந்தினி! நீங்கள் கடவுளை நம்புறீர்களா?” என மகேந்திரன் கேட்டபோது "நான் தலைவரை நம்புகிறேன்!" எனும் ஒற்றை வார்த்தையில் தேசியத் தலைவர் மீதான போராளிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை புலனாகிறது.

எதிரிப் படையாயினும் கையில் ஆயுதமின்றி சரணடைந்தால் அவர்களை மனிதாபிமாக நடாத்த வேண்டும் என்பது தேசியத் தலைவரின் கட்டளை. இதில் வரலாற்று நிகழ்வாக நடந்த ஒரு சம்பவம் சல்லியர்கள் திரைப்படம் பார்க்கும் போது நினைவுக்கு வந்தது.

12/10/1986 அன்றைய தினம் மறக்க முடியாத ஒரு நாள். மன்னார் அடம்பனில் சிறிலங்கா இராணுவம் உலங்குவானூர்தி மூலம் இறங்கியபோது எதிர்த் தாக்குதல் நடாத்தப்பட்டது. அதில் முதன் முதலாக பெண்போராளிகளும் பங்கு பற்றினர்.

அவ் வரலாற்றுச் சண்டையில் மாவீரராக முதன் முதலாக லெப் கேணல்






தரத்தில் .மன்னார் மாவட்டதளபதி விக்ரர் அண்ணாவும், 2ம் லெப் ரோம் அவர்களும் வீரச் சாவைத் தழுவினர். இறந்த இராணுவ வீரர்கள் எட்டுப் பேரது உடல்களும் கைப்பற்றப்பட்டன. 2 இராணுவத்தினர் உயிருடனும் பிடிபட்டனர்.

ஆனால் அவர்கள் மீது சிறு துரும்பும் படாது முதலுதவி அளித்து, தேசியத் தலைவரின் கட்டளைக்கு அமைய பாதுகாக்கப்பட்டனர்.

சல்லியர் திரைப்படத்திலும் இப்படி ஒரு சம்பவம். காயமடைந்த இராணுவ வீரனைக் காப்பாற்ற குருதி கொடுத்து காப்பாற்றும் போதும் சரி, சிதைந்த காலை கூட்டிக்கட்டி மேலதிக சிகிச்சைக்காகவும் அந்த இடத்து போர்ச் சூழ்நிலை காரணமாகவும் நிலக்கீழ் பங்கரை விட்டுப் போகும்போதும் சரி மிகவும் யதார்த்தமான, உணர்வான நடிப்பு.

காயமடைந்த இராணுவ வீரன் போராளிக ளினது உண்மை மனநிலை உணர்ந்து தன் செய்கைகளுக்காக வெட்கப்படுவது போரா ளிகளின் மனிதாபிமானம் மாறாது என்பதை காட்டுகின்றது. இராணுவக் கமாண்டர் குறிபார்த்து சுடப்பட்டபோது மனதில் எழுந்த மகிழ்வை அடக்க முடியவில்லை.

இதில் இராணுவத்தினராக நடித்த திருமுருகன், மோகன், சந்தோஷ் மக்களின் வெறுப்பை சம்பாதிக்கும் அளவுக்கு அருமையான நடிப்பு.

மொத்தத்தில், சல்லியர்கள் திரைப்படத்தில் நடித்த அனைவரும் தம் திறமையான நடிப்பின் மூலம் மனதில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளனர். கடைசியில், மலர் கையில் கட்டிய சிவப்பு நூலுடன் போராளியாகிச் செல்வது அருமை.

ஈஸ்வர் இசையில் வைரமுத்து, கிட்டுவின் பாடல்கள் மெய் சிலிர்க்க வைக்கின்றன. ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு, காட்சியமைப்பு என்பன மிகவும் நேர்த்தியாக உள்ளன. இயக்குனர் திரு தி.கிட்டு திரைப்படத்தை

அற்புதமாக இயக்கியுள்ளார். மீண்டும் ஒரு போராட்ட வாழ்வினை கண்முன் கொண்டு வந்துள்ளது திரைப்படம். சிற்சில குறைகள் இருப்பினும் படம் முழுத் திருப்தியை தந்துள்ளது என்பதைப் பதிவிட வேண்டும்.

சல்லியர் திரைப் படத்தில் நடித்த திரைப் படக்குழுவினர் அனைவருக்கும், அத்தனை தொழில் நுட்ப கலைஞர்களுக்கும் எங்கள் வாழ்த்துகள்.

இத் திரைப்படத்தினை அனைத்து தமிழ் மக்களும் பார்த்து, இக் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

மு.தவமணிதேவி
வட்டகொட



# மலையக மக்களுக்கு 2026 விடியலைத் தருமா?

**ஆண்டுகள் மாறுகின்றன ஆட்சிகள் மாறுகின்றன ஆனால் மலையக மக்களின் வாழ்வியல் சூழல் மாற்றமடையவில்லை. காணியுரிமை, வீட்டு உரிமை இவர்களின் கைக்கு கிடைக்கும் நாள் தான் எப்போது? மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த வரலாறுகளை சுமக்கும் இவர்களின் இந்த வருடத்தின் விடியலாவது சிறப்பாக அமையட்டும். உலக மக்களின் பார்வையில் பின்னடைந்த சமூகமாக காணப்படும் இவர்களின் மாற்றம் மிகுந்த வாழ்வியல் முறைகளுக்கு கை கொடுப்போம்.**

**மலையக** மக்கள் எனும் போது இலங்கையின் மத்திய மலைநாட்டில் வாழும் மக்களை குறிக்கின்றது. இவர்களில் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்களாகவே உள்ளனர். இந்தியாவிலிருந்து வருகைத் தந்து 200 வருடங்களை கடந்துள்ள போதிலும் இவர்களின் கடினமான காலங்கள் ஒரு வரையறைக்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றன.

மாற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில் உள்ளது எனலாம். பல ஆண்டுகளாக அடக்குமுறைகளுக்கு உட்பட்டவர்களாக மலையக மக்கள் வாழ்கின்றனர். நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது மிகவும் பின்னடைவான சூழலே காணப்படுகிறது. எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற லயன் குடியிருப்புகளிலே தமது ஒவ்வொரு வருட கொண்டாட்டங்களையும் கொண்டாடுகின்றனர். அடுத்த தலைமுறையினரும் இக் குடியிருப்புகளில் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இவ்வாறானதொரு இக்கட்டான நிலைமைகளில் வாழும் இம் மக்களும்



நாட்டின் சம உரிமையுடைய பிரஜைகளே. இவர்களின் கல்வி, சுகாதாரம் என்பனவற்றில் பாரிய பின்னடைவு காணப்படுகின்றது. காணி உரிமை அற்ற, வீட்டு உரிமை அற்ற ஒரு சமூகமாக மலையகச் சமூகம் மட்டுமே உள்ளது. இந்நிலை எப்போது மாறும்?

பெருந்தோட்ட மக்கள் பொருளாதார பின்னடைவு உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். நாட்டின் பொருளாதாரத்தில் பெரும்பாலான அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுப்பவர்கள் இவர்கள். இவர்களின் வாழ்க்கைத் தரம் இந்த வருடமாவது உயர்த்தப்படுமா?

உலக மக்களிடையே பெருந்தோட்ட மக்கள் இன்றும் பின்னடைந்த சமூகமாக வாழ்கின்றனர். பாராளுமன்றங்களில் பெருந்தோட்டம் தொடர்பான பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இவர்களின் போராட்டங்கள் இன்றுவரை ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதே உண்மை.

பெருந்தோட்ட பெண்கள் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். இதற்காக ஒவ்வொரு நாளும் இவர்கள் படும்பாடு கொஞ்சமல்ல. மழை, வெயில் என்று பாராமல் தமது உழைப்பை தருகின்றனர்.

எனவே இவர்களின் ஊதியம் தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அமைய வேண்டும். கடந்த அரசாங்கம் 900 ரூபா சம்பள அதிகரிப்பையும், இடைக்கால அரசாங்கம் 1700 ரூபா சம்பள அதிகரிப்பையும் வழங்கிய போதிலும் சம்பளமாக 1300 ரூபாவே கிடைக்கப் பெறுகிறது. எனவே நியாயமான சம்பளம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டுமே அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டின் அந்நிய செலாவணிக்காக கடந்த 200 வருடங்களாக கடுமையாக உழைத்து வரும் இவர்களுக்கு சம்பள உயர்வை தரும் திட்டம் நிச்சயமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட நலன்புரி திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்ற போதிலும் இவை முறையாக மலையக மக்களை சென்றடையவில்லை என்பதே உண்மை. தற்போது வழங்கப்பட்டு வரும் “அசுவெசும“ கொடுப்பனவை பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

இலங்கை அரசினால் வழங்கப்படும் சகல உரிமைகளும், சகல சலுகைகளும் சகல மக்களையும் சென்றடைய வேண்டும். அதனை அனுபவிக்க மலையக மக்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு.

சுகாதார வசதிகளற்ற தோட்டப்புற வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது குறித்தும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். மலையக மக்களுக்கு உரிய சமூக அந்தஸ்து கலை, கலாசார உரிமைகள் அவர்களுக்குரிய அடையாளம் என்பன காக்கப்பட வேண்டும்.

உழைப்பை மட்டுமே தமது குறிக்கோளாகவும், நம்பிக்கையாகவும் கொண்டு வாழும் இவர்களுக்கு இந்த ஆண்டிலாவது சுபீட்சம் ஏற்பட வேண்டும். இயற்கை அனர்த்தங்களும் இவர்களின் வாழ்விற்கு எச்சரிக்கை தந்த வண்ணமே உள்ளன. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத, பாதுகாப்பு இல்லாத இவர்களின் தொடர் குடியிருப்புகள் இந்த ஆண்டிலாவது தனிக் குடியிருப்புகளாக மாற்றப்படுமா?

ஆண்டுகள் மாறுகின்றன ஆட்சிகள் மாறுகின்றன ஆனால் மலையக மக்களின் வாழ்வியல் சூழல் மாற்றமடையவில்லை. காணியுரிமை, வீட்டு உரிமை இவர்களின் கைக்கு கிடைக்கும் நாள் தான் எப்போது?

மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த வரலாறுகளை சுமக்கும் இவர்களின் இந்த வருடத்தின் விடியலாவது சிறப்பாக அமையட்டும். உலக மக்களின் பார்வையில் பின்னடைந்த சமூகமாக காணப்படும் இவர்களின் மாற்றம் மிகுந்த வாழ்வியல் முறைகளுக்கு கை கொடுப்போம்.





# பயனுள்ள தகவல்

## ஏன் பிறர் பேசுவதை பற்றி நாம் கவலைப்படக் கூடாது?

1. உங்கள் நிகழ்காலத்தைக் கண்டு பொறாமைப்படும் போது மக்கள் உங்கள் கடந்த காலத்தைக் கிளறுகிறார்கள்.

2. உங்கள் வளர்ச்சி பிடிக்காதபோது மக்கள் உங்கள் பயணத்தைக் கேள்விக்கு உள்ளாக்குவார்கள்.

3. தங்கள் கனவுகளைக் கைவிட்டவர்கள் உங்கள் கனவுகளை கேலி செய்வார்கள்.

4. உங்கள் உண்மை அவர்களை பயமுறுத்தினால் மக்கள் உங்களைப்பற்றி பொய்களைப் பரப்புகிறார்கள்.

5. தங்கள் வாழ்க்கை பாதுகாப்பில்லாமல் உணரும்போது மக்கள் உங்கள்மீது வெறுப்பைக் காட்டுகிறார்கள்.

6. மக்கள் உங்கள் முயற்சிகளைப் புறக்கணித்து, உங்கள் தவறுகளை மட்டும் முன்னிலைப்படுத்துவார்கள்.

7. உங்களுக்கு உதவி தேவைப்படும்போது மக்கள் மறைந்து விடுகிறார்கள், ஆனால் நீங்கள் வெற்றி பெற்றதும் திரும்பி வருகிறார்கள்.

8. மக்கள் உங்கள் முன்னேற்றத்தைப் பார்க்க விரும்புவார்கள், ஆனால் ஒருபோதும் பாராட்ட மாட்டார்கள்.

9. உங்கள் போராட்டங்களைத் தெரிந்து கொள்ளாமல் மக்கள் உங்கள் காயங்களைப் பற்றித் தீர்ப்பளிக்கிறார்கள்.

10. அர்த்தமுள்ளதாகச் சொல்வதற்கு எதுவும் இல்லாதபோது மக்கள் புறம் பேசுகிறார்கள்.

11. தங்களுக்குப் புரியாதவற்றை மக்கள் நிராகரிக்கிறார்கள்.

12. நீங்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டு வளரும்போது மக்கள் சந்தோசப்படுவதில்லை, சங்கடப்படுகிறார்கள்.

13. நீங்கள் பலதூரம் முன்னோக்கிச் சென்றுவிட்ட பிறகும் மக்கள் மனக்கசப்புகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

14. உங்கள் தைரியத்தைக் காணும்போது மக்கள் தங்கள் அச்சங்களை உங்கள் மீது திணிக்கிறார்கள்.

15. உங்கள் மாற்றம் அவர்களுக்கு தடையாக இருக்கும்போது மக்கள் அதை எதிர்க்கிறார்கள்.

16. தங்களைப் பற்றி நன்றாக உணர வேண்டும் என்பதற்காக மக்கள் உங்கள் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.

17. மக்கள் உங்கள் குறைகளை நினைவில் வைத்திருக்கிறார்கள், ஆனால் உங்கள் உதவியை மறந்து விடுகிறார்கள்.

18. மக்கள் உங்கள் தோல்விகளை முன்னிலைப் படுத்துகிறார்கள், ஆனால் உங்கள் வெற்றியை உங்களுக்கு தெரியாமல் பின்பற்றுகிறார்கள்.

19. மக்கள் பொதுவில் உங்களை உற்சாகப்படுத்துகிறார்கள், ஆனால் தனிமையில் பொறாமைப்படுகிறார்கள்.

20. உங்களால் முடிந்ததை அவர்களால் செய்ய முடியாத போதுதான் மக்கள் அதிகம் உங்களை பற்றி தவறாக பேசுகிறார்கள்....













# பாரம்பரிய தைப் பொங்கல் விழாக்கள்







